உ

# அறுவகை இலக்கணம்

இந்நூல் திருப்பேரூர்
தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
தமிழ்க் கல்லூரி 25வது ஆண்டு
வெள்ளி விழா
நினைவாக வெளியிடப் பெற்றது.

1978

# அறுவகை இலக்கணம்

## பதிப்புரை

நம் தமிழ்மொழி ஐந்திலக்கணம் உடையது என்பர். அவை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன. இவற்றுள் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றுமே தொடக்க காலத்தில் இருந்தன. யாப்பும் அணியும் பொருளிலக்கணத்தின் பகுதியாகவே இருந்தன. காலப் போக்கில் யாப்பிலக்கணமும் அணியிலக்கணமும் தனித்தனியே வளர்ச்சியுற்று ஐந்திலக்கணமாயின என்பர் அறிஞர்.

இவ் வைந்திலக்கணத்துடன் ஆருவதாகப் புலமை இலக்கணம் என்ற ஒன்றைக் கூட்டி அறுவகை இலக்கணம் என்னும் பெயரில் ஒரு நூல் செய்தார் வண்ணச் சரபம் அருண்மிகு தண்டபாணி சுவாமிகள். பழந்தமிழ் இலக்கண நூல்களில் எழுத்துக்களுக்கு வரிவடிவம் விரிவாகச் சொல்லப்படவில்லை. நம் தண்டபாணி சுவாமிகள் எல்லா எழுத்துக்கும் விரிவாக வரிவடிவம் சொல்லியுள்ளார். மற்றும் பழந்தமிழ் எண்களின் வரிவடிவமும் இந்நூலிற் சொல்லப் பட்டுள்ளது. இவ்வகையால் இந்நூலின் எழுத்திலக்கணம் பழைய நூல்களைக் காட்டிலும் தனித் தன்மையுடையது எனலாம். இவ்வாறே இந்நூல் கூறும் அகப்பொருள், புறப்பொருள் இலக்கணங்களும் நம் பழைய நூல்களைக் காட்டிலும் தனித்தன்மை யுடையனவாய்க் காணப்படுகின்றன. இந்நூலில் உள்ள புலமையிலக்கணம் மிகவும் குறிப்பிடத் தக்க சிறப்புடையது. இத்தகைய தனிச் சிறப்புடைய இந்நூல் புலவர்களுக்கும் மொழியாராய்ச்சியாளர்க்கும் மிகவும் பயன்படும். இந்நூல் வெளிவந்து மிகப் பல ஆண்டுகள் ஆயின. ஆதலின் இப்போது இதனை நம் கல்லூரி வெளியீடாக வெளியிடத் தொடங்கியுள்ளோம். இப்பொழுது எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று பகுதிகளே வெளிவருகின்றன. யாப்பு, அணி, புலமை என்னும் மற்ற மூன்று பகுதிகள் பின்னர் வெளிவரும்.

இந் நூலாசிரியராகிய தண்டபாணி சுவாமிகள் தமிழகத்தில் கௌமார நெறியை விளக்கி நிலை நிறுத்திய அருளாளர் ஆவர். இவரால் இயற்றப்பட்ட புராணங்களும் பிரபந்தங்களும்

மிகப் பலவாம். இவர் இயற்றிய புலவர் புராணம் என்னும் நூலும் தமிழலங்காரம் என்னும் நூலும் புலவர்களிடையே பெருவழக்கில் இருப்பனவாம். இவர் வண்ணப் பாடல் பாடுவதில் மிகவும் வல்லமை படைத்தவர். வண்ணச் சரபம் என்னும் பெயரே இதனைப் புலப்படுத்தும். வண்ணத்தியல்பு இவர் செய்துள்ள நூல் இலக்கணத்துள் குறிப்பிடத்தக்க சிறப்புடையதாம். இவர் திருநெல்வேலிப் பதியில் தோன்றித் தமிழகமெங்கும் யாத்திரை செய்து கௌமார நெறியைப் பரப்பினர்.

இவருடைய சாமதிநிலையமும் திருமடமும் தென்னார்க்காடு மாவட்டத்தில் விழுப்புரத்தை யடுத்துள்ள திருவாமாத்தூர் என்னும் தலத்தில் உள்ளது. இவர் பரம்பரையினர் இம் மடத்தைப் பேணி நூற்சுவடிகளையும் பேணிப் புலமை நலத்துடன் திகழ்கின்றனர். இவரிடத்து உபதேசம் பெற்றுக் கொங்கு நாட்டுச் சிரவணபுரத்தில் கௌமார மடாலயம் நிறுவிய அருளாளர் தவத்திரு இராமானந்த சுவாமிகள் ஆவர். அவரது மாணவர் பெரும் புலமை சான்ற, தவத்திரு கந்தசாமி சுவாமிகள். இம்மடாலயமும் தற்போது தவத்திரு சுந்தர சுவாமிகள் தலைமையில் சமயப் பணியும் கல்விப் பணியும் செய்து வருகிறது. இந்த நூல் ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் தவத்திரு தண்டபாணி சுவாமிகளால் பதிப்பிக்கப் பெற்றது. தற்போது திருப் பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியின் சார்பாக வெளியிடப் பெறுகிறது. இதனை வெளியிட உரிமை வழங்கிய திருவாமாத்தூர் கௌமார மடாலயத் தலைவர் அவர்கட்கும் இதனை எழுதி ஒப்பு நோக்கிய கல்லூரி ஆசிரியப் பெருமக்கட்கும், செப்பமாகப் பதித்துதவிய நமது நிறுவனப் பேரன்பரும் சமயப் பணியில் பெரிதும் ஈடுபாடுடையவருமாகிய பாரி அச்சகம் திரு. மு நாராயணன் செட்டியார் அவர்கட்கும் நன்றியுரித்தாகுக.

*சாந்தலிங்க இராமசாமி அடிகள்*
**பேரூராதீனம்**

*30—8—78*
**பேரூர்.**

உ

# சிறப்புப் பாயிரம்

### *நிலைமண்டில வாசிரியப்பா*

தொடுகட லுடுத்த தொன்னில மகண்முலைப்
படுகல னாப்பட் பதித்தநன் மணியிற்
பொலிதரு பல்வளப் புகலிமா நகர்வயிற்
கலிமறை பயிறரு கவுணியர் குலத்தி
னலனுறத் தோன்றிய ஞானசம் பந்தன்

பலமுரண் மரீஇய பறிதலை யமணரைப்
போக்கிய ஞான்றிற் புறநெறிக் கூற்றை
நீக்கி யுய்வா னிறுவிய முறையிற்
றிறம்பினர் தமையுந் தெருட்டும் பொருட்டிண்
டறம்பிழை படாவிதத் தறுவகை யிலக்கணஞ்

சிறக்க வியற்றெனச் செந்திலெம் பெருமான்
றிறத்தகை யுலவாச் சிந்தையிற் றெரிப்ப
மறக்கொணா வவனிரு மலரடி வழுத்தித்
துறக்கொணா விதிகளைத் துகளறக் கூறித்
திருவுரு மாமலைச் சினகரத் தின்கண்

ணருமைசால் புலவோ ரனைவரும் வியப்ப
வுவமையில் பெரியோ ருளநனி யுவப்ப
நுவலிய தமிழ்ப்புது நூலரங் கேற்றினன்
றிருவளர் பொதியைச் செழுந்தமிழ்த் தீஞ்சுவை
பெருகிய தெனவரு பீடுறு பொருநையுங்

கோட்டுறு பூந்துணர்க் குலவிய கொழுந்தேன்
கூட்டுண வளிமுரல் குளிர்நிழற் பொதும்பரு
முளபல வுயிரையு மோம்புவார் தவமென
வளர்தரு செந்நெல் வயங்கிய வயல்களுங்
கரைமிடற் றண்ண லாதிய கடவுள

ருறைதரற் கமைந்த வுயரா லயங்களும்
அந்தணர் சைவ ராதியர் வாழுஞ்
சுந்தர மாளிகை தொக்கபல் வீதியுந்
திருமகள் கலைமகள் டிறம்பா வாழ்க்கையு
மருவிய நெல்லை வளநக ரதனிற்

சைவக் குலத்தினிற் றழைத்தினி தமர்ந்தோன்
மெய்வைத்த நாவினன் மேதகு மனத்தோன்
செந்தினா யகனெனத் திருப்பெயர் புனைந்தோன்
புந்திநைந் தியற்றும் பொருவறு தவத்தாற்
தேவரும் வியம்பத் தெருண்மிகு மகவா

யாவருங் காண விருநிலத் தவதரித்
தண்டர் சேனைக் கதிபனா ணையினாற்
றண்ட பாணி யெனத்தனிப் பெயர்தரித்துப்
பிறந்தநாண் முதலாப் பேசரு மற்புதத்
திறங்கள் பற்பலவாச் சிறந்துறத் திகழ்ந்து

சிற்றெறும் பொன்றைச் செகுத்தியே லதற்கு
மற்றெலா வுயிர்க்கும் வணங்குமுன் றனக்கு
நந்திரு வடிநிழ னன்களிக் குதுமென
முந்திய முதல்வனே முன்வந் துரைப்பினு
மையவம் முத்தி யடியேற் காகா

துய்யநன் கருளென வுரைக்கு முரனாற்
றகத்திய னாதிமெய் யடியவ ரடித்துகண்
மகத்துவந் தெரிந்துதன் மணிச்சிரத் தணிந்து
மாயா வாத மருளினர் வெருளுற
வோயாப் பத்தி யுயர்நெறி யொழுகி

யலைவுறு மனத்தின ரறியாத்
தலைவனா முருக தாசதே சிகனே.

## ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள்

### சோழவந்தானூர்—அருளானந்த சுவாமிகள் ஆதீனம்

## போற்றுமின் புலவீர்

போற்றுமின் புலவீர் போற்றுமின் புலவீர்
போற்றுமி னின்னூற் புகழினைப் போற்றுமின்
ஏற்றரும் பெரியோ ரிறும்பூ தெய்தச்
சாற்றிய விந்நூற் றன்மையைப் போற்றுமின்
மூகத்தல் செய்யா முந்நீ ருண்ட
அகத்திய னுரு மருந்தமிழ்க் குரவனும்
ஒல்காச் சொற்சுவை ஓங்கச் செய்த
தொல்காப் பியனுந் தூய்மை யாளனும்
அறைந்த விலக்கண மைவகை தம்முள்
மறைந்தன குறைந்தன மாநிலத் திந்நாட்
கின்றி யமையா திருக்க வேண்டுந
ஒன்றிய வறிவா லூகித் துணர்ந்தே
உறுமியல் பலவா யுற்றசூத் திரத்தால்
அறுவகை யிலக்கண மருளிச் செய்தனன்
ஆழா வரிய வனேக விதிநிறீஇ
ஏழா மிலக்கண மெனவுமொன் றியம்பினன்
எல்லையின் மகிமை யினிதங் கெழூஉம்
நெல்லைப் பதியா நீள்படை வீட்டினன்
நீதிசேர் ஞானம் நிகழும் மனத்தினன்
பூதி நிறைந்து பொலியு மேனியன்
புன்புழு வாதியும் புண்படச் சகியான்
அன்பே யுருவா யமைந்த பொற்பினன்
பண்ணமை திருப்புகழ்ப் பாக்க டமக்கு
வண்ணத் தியல்பு வகுத்த பெரியோன்
வேற்படைப் பெருமான் வியனருள் பெறீஇ
நாற்கவிப் பாவலர் நடுக்கங் கொள்ளச்
சிந்தையிற் கருதல் சிறிது மின்றிச்
சந்தக் கவிசொலுஞ் சரப மானோன்
அறுமுகக் கடவு ளாறு முகமென
அறுவகைச் சமயமு மாதரித் திடுவோன்
அண்ண லபர வருண கிரியென
நண்ணி வாழு நலம்பல வுள்ளான்
தொண்ட னேனையுஞ் சுதந்தரித் தாண்ட
தண்ட பாணியென் சாமி தானே.

**அஷ்டாவதானம்**
**பூவை கலியாணசுந்தர முதலியார்**
சென்னை.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பொதுப் பாயிரம் | 1 |
| சிறப்புப் பாயிரம் | 3 |
| **(1) எழுத்திலக்கணம் (5—39)** | |
| உரு ஓசையியல்பு | 5 |
| நிலையியல்பு | 22 |
| புணர்ச்சியியல்பு | 30 |
| **(2) சொல்லிலக்கணம் (39—61)** | |
| பொது இயல்பு | 39 |
| பிரிவு இயல்பு | 43 |
| சார்பியல்பு | 49 |
| திரிபியல்பு | 56 |
| **(3) பொருளிலக்கணம் (61—77)** | |
| 1. அகப்பொருள் | |
| உறுப்பியல்பு | 62 |
| குறிப்பியல்பு | 64 |
| பழமையியல்பு | 66 |
| துறையியல்பு | 67 |
| 2. புறப்பொருள் | |
| நிலத்தியல்பு | 68 |
| உழியியல்பு | 70 |
| வேற்றுயிரியல்பு | 73 |
| கருவியியல்பு | 75 |
| தொகுப்பியல்பு | 76 |
| அகப் புறப்பொருள் நிலை | 76 |
| **(4) யாப்பிலக்கணம் (78—94)** | |
| இயலிசைத் தமிழியல்பு | 78 |
| நாடகத் தமிழியல்பு | 85 |

| | பக்கம் |
|---|---|
| வண்ணவியல்பு | 86 |
| மோனையியல்பு | 89 |
| எதுகையியல்பு | 90 |
| நாற்கவியியல்பு | 91 |
| பனுவலியல்பு | 92 |

(5) அணியிலக்கணம் (95—109)

| | |
|---|---|
| உவமையியல்பு | 65 |
| உடைமையியல்பு | 99 |
| கற்பனையியல்பு | 104 |
| நிகழ்ச்சியியல்பு | 105 |
| ஆக்கவியல்பு | 108 |

(6) புலமையிலக்கணம் (110—123)

| | |
|---|---|
| தவறியல்பு | 113 |
| மரபியல்பு | 116 |
| செயல்வகையியல்பு | 119 |
| நடுநிலை | 120 |
| எதிர்நிலை | 121 |
| அருள்நிலை | 122 |


திருவுருமா மலைத்தலத்தில் ஆறுவகை
இலக்கணமும் சென்னை யூரீற்
பொருவில்பிள்ளைத் தமிழும்,அரங் கேற்றியநாள்
உலகமுற்றும் புகழ்தற் கான

பெருவினையாட் டியற்றியதோர் பெண்கொடியாம்
வெண்கிளியே பேதை யேனுல்
அருள்வளம்பப் புலவர்கதை அத்தனையும்
உலகறிய அறிவிப் பாயே.

(புலவர் புராணம்—பொதுப்பாயிரம். கவி. 10)

உ

குருவே துணை

வண்ணச்சரபம்

அருள்மிகு தண்டபாணி சுவாமிகள்

அருளிய

# அறுவகை இலக்கணம்

## பொதுப் பாயிரம்

### காப்பு

ஐந்தே யிலக்கணமென் றுயிரம்பேர் கூறல்கண்டும்
செந்தேனேன் [1]ஆறுவிதம் செப்புவிப்ப(து)—எந்தேகத்(து)
உள்ளும் புறம்பும் ஒளிரும் ஒருபொருட்சீர்
விள்ளும் குருபாத மே. 1

1 ஆறுவது புலமை யிலக்கணம்.

### அதிகாரி இலக்கணம்

[1]பொன்னேங்கற் கோவும் [2]பொதியைப் பிரானும் புகழ்முரு
கோன்
நன்னேன்பு நோற்கும் பயனே புலமை நலமெனத் தேர்ந்(து)
[3]என்னேக்கித் தெண்டன் இடுவாருக் காம்இவ் இலக்கண நூல்
முன்னோர் மொழியைப் [4]பெருக்கிக் குறுக்கி மொழிவதன்றே. 2

1 சிவபெருமான் 2. அகத்தியர் 3. சூரியனை நோக்கி
4. இது வழி நூலன்று; முதல் நூலே என்றவாறு.

### நூலின் தன்மை

[1]கடலின் மீன்பெயர் நுளையர்வாய் மொழியெனல் கடுக்கும்
திடம்நி லாவிய செழுந்தமிழ்ப் புலவரைச் சேர்வார்
[2]புடவி மேற்கொளும் அறுவகை யிலக்கணப் புதுநூல்
படாஅ ராவுறழ் [3]சமணரைப் புகழ்ந்துளார் பகையே. 3

1 கடல் மீனுக்கு நுளையனிட்டது பெயர் 2. உலகம்
3. தமிழில் இலக்கண நூல் செய்த பவணந்தி முதலியோரை.

## வகையும் துணையும்

எழுத்துச் சொற்பொருள் யாப்பணி எனத்திகழ்
இவற்றுடன் இவைதம் மாற்
பழுத்து மாமணம் கமழ்தரு புலமையும்
பகர்வது குறித்துள் ளேன்
வழுத்தும் மங்கலம் அறியநீ யென்னது
வாக்கில்வந் தருளின் னே
கொழுத்து லாவிய வரியுடற் [1]பூரமேற்
கொண்டுள குலமா தே. 4

1. கடிகைகளுக்குரிய ஊர்திகளுள் ஒன்று பூரம்.

## நுவன்ற காரணம்

[1]செந்தமிழ்க் கிரியோன் தினந்தொறும் வழிபடும்
கந்தனைக் கதிர்வேற் கரத்துடன் மயில்மேற்
கருதிய தவமும், கருணையிற் சிறந்த
சுருதியிற் பழகிய தொண்டர்தம் துணைத்தாள்
மலர்தரு துகள்முதல் வயங்கும் மாண்பொருள்
சிலபெறும் தெளிவும், சீரிய புலவோர்
கவிக்கட லமுதுணும் களிப்பும், [2]கதிர்முன்
குவித்தகை யுடன்தொழும் குழுவினர் உறவும்
புன்றலைச் சமணரைப் புலைத்தொழிற் புத்தரை
வென்றகம் குளிர்சீர் விரும்பும் பகையும்
உறுவதால், திகழ்துணிவு ஒன்ருல்,
அறுவகை யிலக்கணம் அறையலுற் றனமே. 5

1. பொதியையில் வாழும் அகத்தியன் 2. சூரியன்.

## நூற்பயன்

தனதன தனத்தன தனதான
முதிர்தமிழ் முனிக்கொரு துணைபோல்வார்
முருகவிழ் கடுக்கையன் உறவாவார்
விதிர்தரும் அயிற்குகன் அருள்சேர்வார்
வினையெனும் இருட்பிணி அறவாழ்வார்
கதிர்நடு விழுப்பொருள் அதைநேர்வார்
கலிமுழு தொழித்தகம் மகிழ்கூர்வார்
அதிர்தொனி அணிக்கவி தருசீரார்
அறுவகை யிலக்கணம் அறிவாரே. 6

## சிறப்புப் பாயிரம்

### ஆக்கியோன் பெயரும் நூற்பெயரும்

மன்னுபுகழ் நெல்லைநகர் வாழ்முருக தாசனெனப்
பன்னுதண்டபாணிப் பரதேசி—உன்னும்
குறுமுனிவன் தன்னருளாற் கூறுமிந்த நூற்பேர்
அறுவகையி லக்கணம்ஆ மே. 1

### அரங்கும் கொள்வாரும்

ஆறு வகையென் றிலக்கணம்பாடி அரியதமிழ்த்
[1]தேறுநர் போற்று(உ)[2]ரு மாமலைக் கோவில் முன் செப்பியதால்
வீறு சமய நெறிஆ றுடையமெய் வேதமொழி
கூறு மவர்களெல் லாம்இக ழாதுகைக் கொள்வதுண்டே. 2

1. தெளிந்தோர் 2. திருவுருமாமலை என்னும் கோயில்; திருநெல்வேலி நகரில் உள்ளது; இக்காலத்தில் குறுக்குத்துறை என வழங்குகிறது.

### மறுத்தற்கு அரியவர்

மூவிரண் டெழுத்தே மொழியும் பண்பால்
அத்தொகை யிலக்கணம் அமைவுறப் பாடிப்
பூமலர் சோலைப் பொதியமால் வரைக்கோன்
தொண்டர்மெய்ப் புகழ்இடை துலங்க வைத்தமை
[1]வம்பென மற்றையர் மறுப்பினும் வடிவேற்
சண்முகன் அடியார் தமக்காம் அன்றே. 3

1. புதிது.

### அருமையும் செய்யுளின் தொகையும்

தவராசர் புவிராசர் எனப்பெயர்மாத் திரம்புனைந்தத்
 தன்மை கொள்ளார்க்(கு)
அவமானம் பெருக்கி அந்தப் பெயர்க்குரிய குணங்கொள்
 அழியாக் கீர்த்தி வார்க்கு
சிவலோக மட்டும்நிற்கச் செய்யவல்ல கவிராசர்
 செல்வ மாகும்
நவநூலொன்(று) எழுநூற்றெண் பத்தாறு சூத்திரத்தால்
 நவின்றிட் டேனே. 4

## தன்மை

எண்ணரிய கவிப்புலவர்க்(கு) இனிய தாம்இவ்
இலக்கண நூற் பகுப்புஆறும் இயம்பு முன்னம்
வண்ணமுதற் பலபாடல் கடலில், ஆற்றில்,
வாவியிற், செந் தீயிலிட்டேன், மற்றும் பன்னூல்,
விண்ணறிய, மண்ணறிய உலகத் தூடு
விளங்கவைத்தேன், நலங்கருதி வேந்தர் போல்வார்,
தண்ணளியில் லாத்துறவோர், கெடுபாட் டுள்ளார்
தன்மையெல்லாம் அறிந்தறிந்துஞ் சலிப்புற் றேனே.

## ஆக்கியோன் துணிவு

வேற்றுமையும் அல்வழியும் பொருந்தாது, [1]தன்னமையும்
விளங்கும் செஞ்சொல்
சாற்றும்[2] ஒளி வழியுமல்கும் ஆறுவகை யிலக்கணத்தைத்
தாழ்வென் போர்கள்
கூற்றுவன்தென் புலத்தேகிக் கொடியநர கிடைஅமிழ்ந்து
குலைவார், அன்றி
மாற்றுரைத்தற்(கு) அரியசெம்பொன் வரையனைய
குகனருட்சீர் மருவிடாரே. 6

1 வேற்றுமை. 2. அல்வழி—இவற்றிற்கு இந்நூலாசிரியர் இட்ட குறியீடு.

பாயிரம் முற்றிற்று

# முதலாவது

## எழுத்திலக்கணம்

### உரு ஓசையியல்பு

### தொகை

தமிழ்ப்பெயர் முது[1]கலை தன்னைச் சுட்டிய
பெரியோர் மலர்த்தாட் பிரசஞ் சூடி
யான்சொலத் துவக்கும் இருமூன் றிலக்கணத்(து)
எழுத்திலக் கணம்முன் இயம்புவன் சிறிதே. 1

1. மொழி.

உயிர்என்று, ஆய்தம்என்று, ஒற்றென்று, உயிர்மெய்
[1]அலகென்று, கூட்டென்று அறுவகை எழுத்தும் [என்று
அன்றிக் [2]குறிப்பென்(று) அவைசில உளவே. 2

1. அளவை 2. ஒலிக்குறிப்பு.

இருநிலத்து யாம்உணர் எழுத்தினம் ஏழில்
நால்வகை எழுத்தே நவிலும் மற்றைய,
மூவிதப் [1]பொறிகளின் [2]முதலெனக் கருதி
அவ்வா றேதும் அவர்சிலர் உளரே. 8

1. எழுத்து 2. அலகு, கூட்டு, குறிப்பு என்னும் மூவகை எழுத்திற்கும் உயிர், மெய், ஆய்தம், உயிர்மெய் என்னும் நான்குமே முதலாவன எனக் கருதிச் சிலர் நான்கெழுத்துக் களுக்கே இலக்கணம் கூறினர் என்றவாறு,

ஆவி ஈரா(று) ஆய்தம் ஒன்(று) உடல்
அறுமூன்(று) உயிர்மெய் யாம்இவை இருநூற்(று)
ஒருபதிற் றுறு அல குடைமை நால்வகை
கூட்டும் குறிப்பும் [1]குணிக்கரும் விதமே. 4

1. கணக்கிடுதற் கரியன.

எழுத்தெனல் [1]வடிவுடன் ஓசையும் உடைத்(து) அவற்று
உருவியல் பனைத்தும் உணர்வார் சிற்சிலர்.

ஒலியியல்(பு) உலகோர் உரைக்கும் ²மாற்றம்ஒவ்
வொன்றிற் சிற்சில ஒளிர்தரும் அன்றே. 5

1. வரிவடிவம் 2. வேறுபாடு.

உருவும் ஓசையும் உணராற்(கு) ஒருநூற்
பயனும் எய்தாப் பண்புநன் குணர்ந்தும்
தொடங்கிய துறைக்காச் சொல்முறை முன்பின்
பிறழா வண்ணம் பேசுதும் பிரித்தே. 6

### வகை

### உயிரெழுத்துக்கள் அ, ஆ

கிளிமுகம் போலச் சுழித்துக் கீழ்க்கொணர்ந்(து)
இடப்பால் நீட்டி மேல்வளைத்(து) இடைவெளி
அமைதர வலத்தீர்த்(து) ¹அம்முகம் அடங்க
மேலீர்த்(து) அம்முறை கீழும் ஈர்த்தல்
அகரக் குறியாம் ²ஆன்,இளங் கன்றிற்(கு)
இரங்கலில், மூலத்து எழும்காற் றுணைக்கொடு
சிறிது வாய்திறந்(து) ஒலிக்கும் அக்குறியின்
ஈற்றின் வரைநுனி யிலங்க வலந்தொட்(டு)
இடம்வரை சுழித்தல்ஆ காரத் தியல்பாம்
³அவனெழுந் திருமடங் காம்இதன் தொனியே 7

1. கிளிமுகம் போன்ற சுழி 2. பசு 3. முற் கூறப்பட்ட மூலத்தில்.

### இ, ஈ

¹களம்வரை அகரம் ஆமெனக் காட்டி
இடஞ்சுழித்(து) இடைவெளி நடுக்கொடு தலையைச்
சுற்றி வலத்தில் துகளற நிறுவல்
இகரம்,ஈ காரம் ²நிலைவரை ஒன்றிட்(டு)
அதன்தலை பற்றி வலத்(து) ஓர் வரையிழுத்(து)
அவ்வரை நடுஒன்று அடுத்ததிற் காட்டி
அதனிரு கண்போன்(று) அருகிற் சுழித்தல்
இவ்விரு பொறியும் எழில்³ நகைப் பந்தி
பாதியும் முற்றும் படரொளி பரப்பத்
தொனிப்பவென் றுணர்வார் சொல்வது முறையே. 8

1. கழுத்து 2. நேர்க்கோடு 3. பல்வரிசை.

## உ, ஊ

சுழியில் வலம்கீழ்ப் பற்றி இடத்திற்
சிறிதிழுத்(து) அகரத்(து) அடியெனக் கீழா
வளைத்த வரையை வலப்புறம் நீட்டல்
உகரம்,ஊ காரம் சுழித்தலை இடமேற்
பற்றி வலமாப் பண்புற வளைத்து,
மேற்கொடு கூனற் பனையென முறையிற்
காட்டிக் கிடைவரை நடுஒரு நிலைவரை
அளவில் ஈர்த்த [1]அக்கரம் புணரில்
இவ்விரண் டெழுத்தும் இலங்கிதழ் பொருந்தாக்
குவிதலிற் குறுகலும் நீடலும் கொண்டு
தொனிக்கு மென்பது தொல்லோர் தொடர்பே. 9

1. எழுத்து.

## எ, ஏ

மேலுறச் சுழித்த [1]வாக்கில் வலத்தீர்த்(து)
அவ்வரை நடுஒரு [2]காலிற் கீழ்வரை
அமைத்தல் எகரம் அதன்ஈறு பற்றி
இடத்தில் நீட்டில் ஏகார மாகும்
இவ்விரு பொறிகளும் நா நுனி கீழ்ப்பல்
உள்அரு(கு) ஒன்றக் கடிதுவாய் திறந்து
குறுகியும் பெருகியும் தொனிக்கும் அன்றே. 10

1. முறைப்படி 2. கால்போல இவ்விரண்டெழுத்துக்களின் இறுதிய வடிவம் 'எ' 'எ' ஆகும்.

## ஐ

ஊகாரத்(து) இரண்டா மெழுத்தெனத் துவக்கி
வலத்தில் நீட்டாது வளைத்துஇடங் கொணர்ந்து,
கீழுற இருதரம் மேல்நோக்கி வளைத்தல்
ஐகாரம் நுனிநா அடிப்பல் உட்புறத்(து)
ஒன்றத் [1]துருத்தியில் உயர்ந்துகீழ் அடங்கி,
ஒலிக்கும் என்பது உணர்ந்தோர் இயல்பே. 11

1. காற்றுத் துருத்திபோல.

## ஒ, ஓ

சுழித்துமேற் கொடுவலத்து இடம்பட வளைத்துஉட்
புக்கு வளை நுனி காட்டக் கீழ்ப்பிரித்(து)
அவ்வழி வளைத்தே அளவில்மேற் கொண்டு
அதுமுதல் [1]மேழியாம் என்றிடம் சாய்த்தும்
எழுதுவ(து) ஒகரம் ஆகாரத்(து) ஈறு
புணரில் ஓகாரம் குவிந்தும் குவியா
உதடும் திறந்தும் திறவா வாயும்
திகழ்தரத் தொனிப்பன சிறுத்தும் பெருத்துமே. 12

1. கலப்பை.

## ஔ

ஒகரமும் ளகாரத்(து) இரண்டாம் எழுத்தும்
புணரில் ஔகாரம். சிறிதுவாய் திறந்து
கீழ்இதழ் வளைதர மேற்பல் பொருந்த
மெல்லெனக் காட்டும் வியன்தொனி உடைத்தே. 13

## ஆய்த எழுத்து--ஃ

உயிரெழுத்(து) உரைத்தனம் உரித்த தேங்காய்க்
கண்போல் [1]முச்சுழி கவினுறக் காட்டல்
ஆய்தம்; துணையிழந்(து) அலமரும் காக்கை
குளறலில், [2]மிடற்றில் குமுறுஒலி தருமே. 14

1. புள்ளியாக எழுதுவதே பழைய வழக்கு; சுழித்தல் பிற்காலத்து வழக்கு. 2. பழைய இலக்கணங்கள் ஆய்தம் தலையை இடமாகக் கொண்டும்—நெஞ்சை இடமாகக் கொண்டும் அங்காத்தலாகிய முயற்சியாற் பிறக்கும் எனக் கூறும்.

## மெய் எழுத்து

ஒற்றின் சிரந்தொறும் ஒன்று ஒருசுழி
வைத்து வரைதரில் மருட்டா அன்றெனில்
அகரம் சார்உயிர் மெய்யெனப் பிறழும்
அதனால், [1]அவற்றின் வடிவே அறைகுதும்
அவற்றின் தொனிதொறும் ஆவியும் உடலும்
தொனிக்கும் இயல்பே தோமறக் கலந்து

மிளிர்தரும், ஆயினும் விளம்புங் காலை
[1]இவற்றின் ஒலிமுன் னெழும்ஆ தலின், இப்
பொறிகளின் ஒலியெனப் புகலல் நன்றே. 15

1. உயிர்மெய்யின் 2. மெய்யெழுத்துக்களின். அகரம் சார்ந்த உயிர் மெய்யின் மீது சுழி பெறுதலே தனிமெய்க்கு வடிவம்; அவ்வுயிர் மெய்யின் முதலில் உள்ள ஒலியே தனி மெய்க்கு ஒலி. ஆதலின் ஒற்றிற்குத் தனியே வடிவும் ஒலியும் கூறவேண்டாம் என்பது கருத்து

ஒற்றிற்(கு) ஒருசுழி உயரக் காட்டியும்
பிறர்செவி அறியப் பேச ஒண்ணு
இயல்பின தாகி இதயத் தவிர்ந்து
பொறியினம் விளையும் பூமி யாகி,
உயிரொலி பிறழ்தற்(கு) ஆதார மாகி,
அதனொடு கூடின் தொனிப்பதாகி,
ஆய்தம் என்கைக்(கு) அண்ணி தாகிக்
கிடக்கும் என்றே கிளத்தினர் புலவோர். 16

ஆய்தமும், ஒற்றும், அறிந்தவா றுரைத்தனம்
தனித்தனி ஒவ்வோர் ஒற்றும் உயிர்களில்
நிரைபெறப் புணர்ந்தமை நிகழ்த்தி, அதனதன்
தொனிவரும் [1]உழையும் சொல்லுதும் துணிந்தே. 17

1. இடம்.

## கழுதல் கௌ வரை

### ககர வருக்கம்

இருசுழி எழுசா ஈகாரத்(து) ஈறு
பற்றி, இடவரை அடிசுழி யாததன்
இடம்சிறி திடம்பட மேல் நோக்கி, வலமா
நடுவளைத்(து) அவ்விரு வரைக்குறுக் கேற்றி,
மேல்வரை யளவிற் கொணர்ந்து, கீழ்ஒரு
[1]தோட்டியில் வளைக்கில் ககரம். அதன் வலம்
[2]முற்பகர் குறியுறில் கா ஆம். முடியில்

1. அங்குசம்போல 2. இருசுழி எழுதா ஈகாரம்.

பிறைகவிழ்த் தாலென எழுதிற் கிகரமாம்,
அப்பிறை வலம் நுனி சுழிக்கிற் கீஆம்.
ஈற்றுச் சிறுவளை வதனைப் பெருக்கி
இடமாத் தலைவரை கொணரிற் குகரம்ஆம்.
அவ்வளை வதனைக் கீழுற நிமிர்த்து, அது
தொட்டுமேற் கொண்டு வலத்தொரு சிறுவளை(வு)
இட்டுஅவண் நீட்டிற் கூஆம் ஒகரம்
போலக் கொணர்ந்துஉட் புகுதாது கீழ்இழுத்து
இட்டகொம் பொன்றுமுன் இசையிற் கெகரம்ஆம்,
அக்கொம்(பு) ஈற்றின்மேற் சுழிக்கிற் கேஆம்,
[3]இணைக்கொம்பு ஒன்றொடொன் றிசைவுற எழுதிய
பின்னுறிற் கைஆம், கெகே இரண்டினும்
காஎனும் எழுத்தின் பிற்குறி அணையிற்
கொகோ ஆகும், கெகரத்து ஈற்றில்
ஔகா ரத்(து)இரண் டாமெழுத் தணையில்
கௌஎனத் திகழும் கழறிவை முற்றும்
அடிநாக் கொடுமிட றடைத்தொலிப் பனவே 18

3. கல்வெட்டுக்களில் இக்கொம்பு வடிவே காணப்படுகிறது. கெ-கை

## ங முதல், ஙௌ வரை

### ஙகர வருக்கம்

கோஎனும் எழுத்தின் மூன்றும் குறியின்
ஈற்று வரையைக் குறைத்து அதிற் [1]கூகரத்(து)
ஈறுறப் பொருத்தி, மேல்வரை பொருந்தா
வண்ணம்மேல் நீட்டல் ஙகரம் ஆகும்.
அந்நிலை வரைஇடம் கி கீ அணிபிறை
மருவீடில் ஙிகர ஙீகாரம் விளங்கும்
அவ்வரை அடிதொட்டு அகர ஆகாரத்(து) 19
ஈறு கூட்டில் ஙு ஙூஇயங்கும்
ஙாவொடு ஙெ, ஙே ஆதிய பிறவும்,
காவொடு கெ கே ஆதிய போல்வ
அடிநா உண்ணுத் தொடுமொலி யினவே.

1. உயிர்மெய் நெடிலுக்குச் சாரியை புணர்த்துக் கூறும் வழக்கம் இல்லை இவர் புதிதாக வழக்கம் மேற்கொண்டு கூகரம் ஙீகாரம் என்பனபோல வழங்குகின்றார்.

## ச முதல், சௌ வரை

### சகர வருக்கம்

ஈற்றின் வளைவுஒன்று இன்றெனிற் ககரம்
சகரம் ஆம். அதன் ஈற்றுக் கிடைவரை
நடுஒரு சிறுவரை கீழ் நோக்கி நாட்டில்
சுகர மாம். அது தொட்டுவலம் சுழித்துக்
சூகரத்து ஈறென நிறுவிற் சூஆம்.
சா சி சீயோடு, செகரம் ஆதிய
கா கி கீயோடு கெகரம் போல்வன.
இவற்றின் தொனி, நடு நாவில்நின் றெழும்காற்
றுணைக்கொடு வருமெனச் சொல்வது கடனே. 20

## ஞ முதல், ஞௌ வரை

### ஞகர வருக்கம்

எகரத்து ஈற்றினில் சூஎனும் எழுத்தின்
ஈறுறு மாயின் ஞகரம் தோன்றும்
சி சீ என்னும் பொறிகளின் பிறைகள்
மிகைபடக் கூனி இப்பொறி நடுநிலை
வரைமிசை நிற்பின் ஞி ஞீ வயங்கும்.
ஈற்றைமேற் கொணரா(து) அகரம்ஒத் தெழுதிக்
கீழ்இழா இடத்தே ஞுகரம் ஆகும்.
அதன்ஈறு பற்றி வலத்தீர்த்(து) அவ்வரை
நடுஒரு தூண்பொரும் நல்வரை எழுதின்
ஞூகாரம், ஞாவொடு ஞெ, ஞே ஆதிய
ஙாவொடு ஙெ ஙே முதலிய பொறிகளின்
நிலைபெறீக் கிடப்பன : நீள்நா முற்புறம்
[1]அண்ணை ஒன்றுறும் அவற்றின் தொனிக்கே. 21

1. மேல்வாய்

## ட முதல், டௌ வரை

### டகர வருக்கம்

நிலைவரை அடிதொட்(டு) அதன் இருபங்கு
வலத்தில் நீட்ட, டகரம் ஆகும் அக்
கிடைவரை நடுமேல் இடந்தொட்டு வலமாச்

சிறிது வளைத்தோர் தோட்டியிற் குறுக்காய்க
கீழ்உற இழுப்பினும் அதன் தலை ஞீகர
[1]மீக்குறி யிடினும் டி, டீ விளங்கும்
முதல்வரை நடுவலம் தொட்டு அடி யழியா(து)
ஒருகொம் பெழுதினும். அதன்ஈ றளவில்
சுழிப்பினும் டு, டூ ஒளிரும் டாவொடு
டெமுதற் பிறவும் ஞாவொடு ஞெமுதற்
பிறவே போல்வன; நா நுனி அண்ணத்
தொட்டுக் கீழ்வரத் தொனிப்பன ஆமே. 22

1. மேல்

## ண முதல், ணௌ வரை

### ணகர வருக்கம்

குறுகிய இரட்டைக் கொம்பீறு எகரம்
பொருந்த, ணகரம் பொலிதரும், ஞகரம்
புணர்ந்து அவ்வொருமுச் சுழியையும் முறையிற்
சுற்றி, நடுச்சுழி மேல்வர ணு ஆம்.
ஞி ஞீ மேற்குறி ணவ்வொ(டு)அம்முறையிற்
சேர்தரணி, ணீ திகழ்தரும் ணு, ணூ
ணெ (ண்) ணே ணைஎனும் எழுத்தின் ஞு(ஞ்)ஞூ
ஞெஞே ஞைஎனல் போலும் நிலையின
உகரத்து அடியினைச் சிறிதுமேல் வலங்கொணர்ந்(து)
அதனொடு ணகரம் பொருத்த ணூஆம்
ணொணோ இரண்டும் கொம்பியல் வழாஅ
இருகுறி யுடைத்தாய்ப் பிற்குறி ணவாக்
கிடக்கும் இப் பகுதியின் கிளர்தொனி யெழுங்கால்
நுனிநா அடிப்புறம் அண்ணத் தொட்டுத்
தடவும்என் றுரைப்பது தக்கோர் மரபே. 23

## த முதல், தௌ வரை

### தகர வருக்கம்

சகரத்(து) ஈற்று வரையினைக் குறுக்கிக்
கீழுற இழுக்கில் தகரம் ஆகும்.
அவ்வரை யிடம்சாய்த்(து) அதனொடு ஞுஞூப்
பிற்குறி இசைக்கில் துகரமும் தூவும்

துலங்கும் மற்றைய பொறியெலாம் முதற்சொல்
வருக்கம் போலும் நிலைகொடு வயங்கும்
மேற்பல் உட்புறத்(து) அடியின்நா ஒன்ற
ஒலிப்பன வாம்என்று உரைத்திடத் தகுமே 24

## ந முதல், நௌ வரை

### நகர வருக்கம்

ஙகரத்து ஈற்று நிலைவரை யுடன்அதன்
அடிதொடும் இடத்துக் கிடைவரை தவிரவும்
நகரம் தோன்றும் நாமுதற் பிற ஞா
முதலியன போன்றே மொழிதரும் நிலையின.
தகரந் தோன்றிய தானத் து) உட்புறம்
மெலலென நுனிநாத தொடுப்ஒலி யினவே 25

## ப முதல் பௌ வரை

### பகர வருக்கம்

டகரத் தீற்று வரையினைக் குறைத்து
வலத்தும் ஓர்நிலை வரையிடிற் பகரப,
மூன்றுதொட்(டு) ஆறு வரையினும் ஙகர
வருக்கத்(து) அவ்வத் தொகையெழுத்(து) உறுகுறி
பொருந்தும், பாவொடு பெகரம் ஆதிய
தகர வருக்கத் தன்மையிற் பிறங்கும்.
மொழிதரு தொனி இதழ் மூடித் திறக்குமே. 26

## ம முதல் மௌ வரை

### மகர வருக்கம்

பகரத் தீற்று வரையினைக் குறைத்(து) இடம்
வளைத்துக் கிடைவரை பொருந்த நாட்டில்
மகர மாம், அதன் ஈறுதொட்(டு) அதன்மேல்
ஞி ஞீ உறுகுறி பொருந்திடில் மி மீ,
சுற்றி மேல் நிறுவில் மூகரமும் தோன்றும்
அவ்வீறு சுழிக்கில் மூகாரம் ஆகும்.
அவ்விடந் தொட்டே அதன்கீழ் இடமாய்ச்

மாவொடு மெகரம் ஆதி யாவும்
முற்பகர் இனமே போலுங் குறிப்பின
தொனியும்அவ் வாறே தோன்றிச் சிறிது
பேத மாகி மெல்லெனப் பிறக்குமே. 27

### ய முதல், யௌ வரை

### யகர வருக்கம்

பகர எழுத்தின் முதல்நிலை வரைவலத்(து)
இடஞ்சிறி தொடுங்க நடுஒரு நிலைவரை
அவ்விரு வரைகளின் அளவிற் காட்ட
யகரந் தோன்றும் யாமுதல் யௌவரை
பா முதற் பௌ வரை நிகழ்வதில் நிற்பன.
நுனிநா மேற்புறம் அடிப்பல் உட்புறத் (து)
ஒன்றக் களம்தரு காற்றுணைப் பற்றி
[1]இகரஞ் சார்ந்(து) ஒலி தருமெனல் இயல்பே. 28

1. இகரம்போல ஒலிக்கும்; இக்காலத்து மொழி நூலாரும் யகரத்தை அரையுயிர் என்பர்.

### ர முதல் ரௌ வரை

### ரகர வருக்கம்

யாஎனும் எழுத்தின் இரண்டாம் குறியே
ரகர மாகும், றிறீ உறுகுறி
பொருந்த ரிகரம்ரீ காரந் தோன்றும்.
ரகர ஈற்றின் நிலைவரை நடுவலந்
தொட்டுஞ ஈறு புணரினும் அதன்நுனி
சுழிப்பினும் ருகர ரூகாரம் ஒளிர்தரும்.
ராவொடு ரெகரம் ஆதிய யாவும்
முன்முறை பிறழா வண்ணம் கிடக்கும்
நுனிநா அண்ணு மெல்லெனத் தொட்டுப்
பின்னுறத் தடவிற் பிறங்கொலி யினவே. 29

### ல முதல் லௌ வ்ரை

### லகர வருக்கம்

ரௌஎனும் பொறியின் கடைக்குறி யதன்முற்
பகுதி காட்டி அதன்ஈறு பற்றி

வலமா மேலுற வளைத்திட லகரம்
அவ்வளை வதன்வலத்(து) அடிதொட்டுக்
கீழ்க்கொணர்ந்(து)
அதன்வலந் தொட்டு நுநூப் பிற்குறி
பொருத்த லுகரலூ காரம் பொலிதரும்
ஊணயெழுத் தியல்பே லைகார மன்னும்
லா காரம் லிகர லீகாரம் லெகர
லே காரம் லொகர லோகாரம் லௌஎனும்
எட்டும் யகரத் தினமெண இசைவுறும்
நா நுனி அண்ணு முன்னேக்கித் தடவும்
ஒலியின வாகுமென் றுரைத்திடல் முறையே. 30

வ முதல் வௌ வரை

வகர வருக்கம்

பகரத் தலைநிலை வரைபோய்ச் சுழியுறில்
வகரந் தோன்றும், மற்றைய பதினே
ரெழுத்தும் அவ்வா(று) இசைவுறில் இவையாம்
மேற்பல் நுனிஅடி இதழிற் பொருந்தத்
தொனிப்பன வாம்எனச் சொல்வது துணிவே. 31

ழ முதல், ழௌ வரை

ழகர வருக்கம்

மகரத்து ஈற்றைத் தொட்டுச் சிறிது
கீழிழுத்(து) அதன்வலம் தோட்டி யிசைக்க
ழகரந் தோன்றும் ழாமுதற் பிறவெலாம்
மாமுதற் பிறவே போல மன்னும்
நாவளைந்(து) உள்வாங்(கு) ஒலியின வாமே. 32

ள முதல், ளௌ வரை

ளகர வருக்கம்

ஔஎனும் எழுத்துஎம் மெய்யொடு புணரினும்
தொடரும்ஈற் றெழுத்தே ளகர மாகும்
லைக்குறி பொருந்தி ளையெனல் விளங்கும்

மற்றைய எழுத்தோர் பத்தும் ரகர
வருக்கம் போன்றே மன்னுறீஇக் கிடக்கும்
அண்ணு அடியில் நுனிநா அடி தொட்(டு)
ஒலிப்பன வாம்என் றுரைத்திடல் உரித்தே. 33

## ற முதல் றௌ வரை

### றகர வருக்கம்

கீழ்நோக்கி இருவளை(வு) ஒன்றொடொன் றிட்டு
வலத்துள வரையைக் கீழுற இழுத்திட
றகரந் தோன்றும் அவ்வரை அளவிற்
றெட்டுக் குகரத் தீறு காட்ட
றுவெனல் விளங்கும். றுகரறூகாரத்(து)
[1]இது சேர்ந்து [2]ஈருரு வாகச் செய்யும்
றிகர மாதி றைவரை ஏழும்
றௌவும் தகர வருக்கம் போன்றே
அமைவுறும் குறியின அண்ணு வதனை
நுனிநாப் பின்னர் நோக்கித் தடவ
[3]உருமிபோலும் ஒலிதரு மன்றே. 34

1. ரு 2 கொம்பும் காலும் பெற்று மூன்று வடிவாய் வாமல் காலின்றி இரண்டு வுடிவாய் வருதல். 3. தோற்கருவிகளுள் ஒன்று.

## ன முதல் னௌ வரை

### னகர வருக்கம்

குறுகிய ஒற்றைக் கொம்புடன் எகரம்
பொருந்த னகரம் பொலிதரும். மற்றைப்
பதினோ ரெழுத்தும் ணகர வருக்கத்(து)
இயல்பே விளங்கும் இவற்றின் தொனியால்
முன்நா அண்ணு முட்டும் அன்றே. 35

## அலகு (அளவை) எழுத்துக்கள்

உயிர்மெய் யெழுத்தும் உரைக்குமாறு உரைத்தனம்
அலகினைக் [1]கீழென, [2]நடுவென, [3]மேலென
[4]அளவெனப் பிரித்தவ் வாறே அவற்றின்
உருவுடன் ஒலியும் உரைக்குதும் முறையே 36

1. முந்திரிக்குக் கீழ் இம்மி வரை உள்ளவை 2. ஒன்றற்குக் கீழ் முந்திரிவரை உள்ளவை 3. ஒன்றும் அதற்கு மேற்பட்டனவும் 4 முகத்தலளவை பற்றிய எண் வடிவங்கள்

## கீழலகு

ணவ்வே முந்திரி ட அரைக்காணி,
நிலைவரை யொன்றே காணி ஆகும்
தவ்வே மாஅதன் ஈற்றைக் குறைத்து
வலப்புறம் நீட்டல் இருமா ஆகும்
கூ வொடு சூவும் மும்மா நான்மா
எகரமும் ளகரமும் கால் அரை உகரத்து
ஈற்றைக் குறைத்தொரு ரகரம் பொருத்தில்
முக்கால் எனப்படும் அரை மா அரைக்கால்
ஆதிய பிறவும் அலகு நிலையில்
பிறழா இயல்பிற் பிறங்கும் ஆதலின்
கிளத்திலம் இவைதாம் கீழலகு உறுப்பே 37

நடுவலகுக்குரிய வடிவங்களுடன் கீ(கீழ்)என்னும் அடையாளம் சேர்த்து எழுதப்படுதலும் உண்டு. கீழ்முந்திரி,கீழ் அரைக்காணி என்பனவாக வழங்கப்படும்.

## நடு அலகு

கீழ் முக் காலொடு ருகரத் தீறு
பொருந்தில் முந்திரி, ரகரத் தீற்றைக்
குறைத்து மேலுற வலமா வளைக்கில்
அரைக்கா ணிக்குறி யாகும், முந் திரியில்
கிடைவரை முதற்கொடு தள்ளிற் காணி,
சுவ்வே அரைமா, கூஎனும் எழுத்தின்
ஈற்றுக் கிடைவரை தள்ளிமேல் வல்மா
வளைக்கில்முக் காணி, பகரமே ஒருமா.
முற்பகர் முக்கால் ஈற்று நிலைவரை
தொட்டிட மேலா வளைத்(து) ஓர் வரையினும்
ஒன்ரு(து) அவ்வரைக் குறுக்கா வலங்கொடு
தொடுத்தோர் நிலைவரை மேல்இடல் அரைக்கால்
வகரமும் இகரமும் ளுகரமும் கால் அரை

முக்கால் எனப்படும் அன்றிச் சிற்சில
கூட்டெழுத் தாகிக் குலவும் ஆதலின்
நவின்றிலம் இவைதாம் நடு அல குறுப்பே. 38

## மேல் அலகு

ககரமும் உகரமும் ஒன்றிரண் டாகும்
ஙகரத் தீற்று நிலைவரை தள்ளில்
மூன்றும் சகரத் தீறுதொட் டொருநிலை
வரைமேல் நோக்கி நிறுவிடில் நாலாம்.
ருகரத் தீற்றைக் கொம்பென வளைக்கில்
ஐந்தாம் தகரத் தீற்றைக் குறைத்தொரு
ரகரம் பொருத்திடில் ஆறும், எகரமும்
அகரமும் ஏழெட் டாகும், ககரத்(து)
ஈறுதொட் டொருசிறு கொம்பென வளைக்கில்
ஒன்ப தாகும். ஐகா ரத்தின்
கீழ்உறு பகுதியைத் தனிப்படக் காட்டில்,
பத்தென விளங்கும், றகர முதல்வளை(வு)
உடனொரு ரகரம் பொருத்த நூறும்,
சுகரத் தீற்றைச் சிறிதிடம் மேலா
வளைத்துச் சூவென நிறுவல் ஆயிரம்,
இவற்றின் புணர்ப்பால் இயங்குவ பிற ஆல்
விளம்பிலம் இவைதாம் மேல் அலகுறுப்பே . 9

## அளவு, அலகு

ளகரத் தீறு தொட்டுமேல் இடமா
வளைத்தவ் வரைக்குறுக் கேற்றி நாலின்
ஈறுறப் பொருத்தல் ஆழாக் கெனப்படும்
ளுகரந் தானே உழக்கென ஒளிர்தரும்,
வகரத் தீற்று நிலைவரை தள்ளில்
நாழி யாகும் பகரமே குறுணி,
முந்திரி யீற்றை மேற்சுற் றுது
னுகரத் தீறென நிறுவிற் பதக்காம்,
தகரம் தூணி, ளகர மே, கலம்
பின்னும் சிலகூட் டெழுத்தெனப் பிறங்கும்,
ஆதலின் இவைதாம் அளவல குறுப்பே. 40

அலகுறுப்(பு) அறைந்தனம் அவற்றின் அணிநிலை,
பற்பல விதமாப் பகர்துலை நிறைநிலை,
இந்நூல் நாப்பண் இயம்புதல் முறையல
ஆதலின் விரித்திலம் அறைகுதும் கூட்டே. 41

## கூட்டெழுத்துக்கள்

அகரத் தீறுதொட்(டு) அதன் இடம் சுழித்து
வலங்கொணர்ந்(து) அதனொடு நாழியென் எழுத்தைப்
பொருத்தில் ஆகஎன் றுயிற் றென்றும்,
றகரத் தலைபுணர் இகரம்இக் கென்றும்,
ககரத் தகரத் தீற்றினை இரட்டித்து
ஒற்றெழுத் தவற்றொடு கூடிற் றென்றும்
ஐகா ரத்தின்முற் பகுதிமட் டெழுதி
ஈறு தொட்டு வலத்தோர் கிடைவரை
இழுக்கில்நெல் என்றும் சகரத் தீற்றொரு
லிகரம் கூட்டிற் சங்கிலி என்றும்
இவ்வா றுளகூட் டெழுத்தெலா மொழியில்
அடங்கா ஆதலின் அறைகிலம் ஆயினும்
கூடும்நாண் மிகலாற் குல(வு)அல குறுப்பூ(டு)
அயல்போன் றுளசில அகற்றிடற் கரியன
அவ்வியல் புரைக்குதும் அறிந்த வாறே. 42

ஒருமா எழுதி அதன்ஈறு பற்றிக்
காணியின் உருவம் காட்டும்மா காணியும்
இரண்டு மூன்று நாலெனும் இவற்றின்
ஈற்றில் மாஇசைத்து இருமா மும்மா
நான்மா எனலும் மூன்றின் ஈறு
ணிகரத் தீறு பொருந்திடில் மூன்று
மாகாணி யெனலும் எகரத் தீற்றை
இடமேற் சுழித்(து)அவ் வரைக்குறுக் கேற்றிக்
கூகரத் தீறு காட்டிக் கீழ்இடம்
வளைத்து மேற்கொணர் கோடியும் கீகரத்(து)
ஈற்றில் நாழி இசைத்துக் கீழெனும்
பொறியும்அவ் வெழுத்தின் மேற்குறி யதனை
எசரம் தேற்றிஅவ் வெழுத்தின் ஈற்றை
இடமாய்ச் சகரத் தீறெுன எழுதிய
சோடும் உகர ரிகரந் தோய்தரும்

உரியும்,ஈ யீற்றிற் கீழ்ஈ ரென்றிய
மரக்காலும் மும்மாப் போலுமுக் குறுணியும்
நெல்லெனும் கூட்டின் ஈற்றுக் கிடைவரை
தன்ளிஅவ் வீறு தொட்டுமேல் வலமாக்
கொண்டிடம் சுழித்த கோட்டையும் அன்றிக்
கீழ்அரைக் காலொடு மூவுழக் காதிய
பொருந்தாக் கூட்டுப் பொறிகளும் உளவே. 43

இகரத் தீற்றொரு லகரங் கூட்டி
அதனீறு தொட்டுக் கீழோர் வரையிழுத்(து)
இடஞ்சுழித் தவ்வரைக் குறுக்கா வலங்கொடு
முக்காணி யீறு பொருந்தக் காட்டிடல்
இலக்க மாகும்,என் றிசைவுறல் இனிதெனல்
போலும் பல்பொறி புதியன வரினும்
அலகுணர் மக்கள் அகற்றார் அன்றே. 44

கூட்டெழுத் தொருவா கூறினம், சிறிதினிக்
குறிப்பெழுத் தியங்கும் கொள்கைகூ றுதுமே. 45

## குறிப்பெழுத்துக்கள்

நாழி போலும் விநாயகச் சுழியெழுத்(து)
ஆதியும் அந்தமும் காட்டும் கிடைவரை
நடுவோர் நிலைவரை புணர்ந்த தாய
அன்னத் தாட்குறி† அயர்த்தமை காட்டும்.
இடஞ்சுழித் தீற்றை வலமுறச் சாய்க்கின்
இக்கென வுணர்த்தும் இதன்ஏ ணைக்குறி
இதுவும்என் றுணர்த்தும் இவ்வா றுள்ள
பல்வகைக் குறிப்பும் பகர்ந்திட லரிதே. 46

ஓரொலி கலைதொறும் ஒவ்வோர் வடிவுடைத்(து)
ஆதலிற் பொறியினம் அனைத்தும் குறிப்பே. 47

## புரை (பிழை) யெழுத்துக்களின் குறிப்பு

அகர ஒகரம் ஆதிய சிலபொறி
யீறு தொட்டுச் சகரத்(து) ஈறென
எழுதி ஆ ஓ முதலியன எனலும்,

ரகரத் தீற்றிணை ஏகா ரத்தீறு
ஆமெனக் காட்டலும் தகர றகரம்
ஆதியின் ஈறிடம் சாய்த்தலும் அவற்றின்
தலைமிசை ஒன்ருக் கிடைவரை காட்டலும்
இகரத் தீற்றிணைச் சுழித்(து)ஈ யெனலும்
அகரத் தாதிதொட் டிட ங்கீழ்க் கொணர்ந்(து)அரை
ஆகுமென் றிசைத்தலும் ககரத் தீற்ருெரு
கணபதிச் சுழியிட்(டு) ஆய்தம் என்கையும்
கெகரம் கொகரம் ஆதிய தாமே
கே கோ ஆதிய ஆமெனக் கிளத்தலும்
போல்வன பிறவும் புரையின வாமே. 48

எகர ஒகர உயிர்மிசை ஒற்றின்
புள்ளி வைத்தமை பொருஅ தொருவினர்
வாழி யென்றே வழுத்துதும் யாமே. 49

இகரஞ் சார்தர ஒற்ருெலி எழலும்
நால்வகை யெழுத்திற் றுணைஒலிப் புணர்ச்சியுஞ்
சிருர்தம் நிமித்தம் செறிந்தன வாமே. 50

1. சாரியை

## அறியுங் குறிப்பு

உகரத் துறுசுழி நீண்டு காட்டல்
ஆதிய அணிசில அறியும் குறிப்பே. 51

உயிர்மெய் வருக்கத்(து) ஒன்ருெடொன் ருெப்பிட்(டு)
அறைந்தமை ஒற்றுறழ் அதனதன் அகரம்
நின்றமை பற்றியென் றுணர்வது நெறியே. 52

அலகினத்(து) இம்மி யாதிய கீழும்
சங்கம் ஆதிய மேலும் தள்ளிடல்
உருவிலா ஓசை யாமென வுணர்ந்தே. 53

ஒன்பது பத்தைத் தொண்ணூ றென்பதும்
அத்தொகை நூற்றைத் தொள்ளா யிரமென்(று)
அறைவதும் பழமை யாமெனல் வழக்கே. 54

ஆயிரம் சூகாரம் யெனல் போலும்
திரிவுவந் தொன்றினும் திருத்தல் அரிதே. 55

சுழியிலா ஒற்றும், சொல்லிய நிலையிற்
பிறழ்குறிப் பொறியும் பெரிதுடைத(து) உலகரைக்
கண்டுணர்ந்து கோடல் கற்றோர் கடனே. 56

மற்றொரு [1]கலையென மாறுபடும் எழுத்தை
வைத்தவ னுள்ளக் குறிப்பெனல் வழக்கே. 57

1. மொழி.

கலைமுதல் எழுத்தே யாமெனல் காணும்
சீரியர் மகிழ்வான் தெரிந்த வண்ணம்
உருவுடன் ஒலியும் உரைத்தனம் அவற்றின்
நிலையிவண் ஆமென நிகழ்த்துதும் நினைத்தே. 58

உரு ஓசையியல்பு முற்றிற்று

# எழுத்திலக்கணம்

## நிலை இயல்பு

நால்வகை எழுத்தின் நலந்திகழ் ஒலியே
மற்றைய மூன்று வகையெழுத் தொலியில்
சிறுசில புணர்ந்து நின்றசீர் தெரிவீர்!
இந்நிலை யியல்பையும் இதயக் கண்கொடு
நுண்ணிதின் நோக்கிடல் நுங்கட னாமே. 59

ஒலி நிலை (குறில், நெடில்)

அகரமும் இகரமும் உகரமும் எகரமும்
ஒகரமும் குறில்;இவை ஒவ்வோர் மாத்திரை;
ஆ, ஈ ஊ ஏ ஓஎனும் ஐந்தும்
நெடில்;இவை ஒன்றற் கிரண்டு மாத்திரை;
ஐ,ஔ என்பவை குறில்நெடில் நடுஆம்;
இவற்றின் ஒன்றரென்(று) ஒன்றரை மாத்திரை;
இவைநெடில் தாமென் றியம்புநர் சிலரே. 60

## ஆய்தமும் ஒற்றும்

குறிலிற் பாதி போலும் ஆய்தமும்,
ஒற்றும், தனித்தனி அரைமாத் திரையே. 61

## உயிர்மெய்

ஒற்றேறு(டு) உயிர்கலந் துயிர்மெய் ஆயினும்
அவைஉயி ரொலியள வாகும்மாத் திரையே. 62

இவைபுணர்ந் தொலிக்கும் இயல்பே கூட்டின்
மற்றைய எழுத்தின் மாத்திரை தோன்றுமே. 63

உயிரும் மெய்யும் கூடி ஒலிக்கும் முறையே கூட்டி உச்சரித்தால் மெய்யின் மாத்திரையும் உடன் தோன்றும், அங்ஙனம் உச்சரிக்காமல் உயிரின் மாத்திரை மட்டுமே தோன்றுமாறு உச்சரிக்க என்றவாறு.

## அதிகாரம்

ஒலிநிலை யளவாம் மாத்திரை உரைத்தனம்;
இயங்கும் நிலைசிறி தியம்புதும், அன்றே. 64

## இயங்கும் நிலை

வாய்திற என்கைக்(கு) ஆவென் றுலகோர்
பகர்வதுற் றுணரிற் பலவகை எழுத்தும்
அதனுற் றேன்றலென்(று) அறிதல்மிக் கெளிதாம்.
அன்றியும் உலகத் தனைத்தெழுத் தினுக்கும்
அகர முதலென் றறைந்த(து)எம் [1]மறையே. 65

1. திருக்குறள்.

## இகர உகரம்

அகரப் பிறப்பே இகரமும் உகரமும்
என்கைக் குறுதுணை எழில்முகக் குறியே. 66

## எகரம்

அகரமும் இகரமும் அணைவுறின் எகரமே. 67

## ஒகரம்

அகரமும் உகரமும் ஒவென் றாமே. 68

### ஐ

[1]பதினே ராவதொற்(று) அகரத் தொன்றி
ஐகார மாகுமென் றறிதல்மிக் கெளிதே. 69

1. ய்

### ஔ

அகரத்(து) [1]ஈரே ழாவதொற்(று) ஒன்றி
ஔகார மாதல் அறிவுளார் அறிந்தும்
அப்பொறிக் குறியிற் பதினே ராவதொற்(று)
ஏதோ நிமித்தத் திசைந்ததோர் வியனே. 70

1. வ்

### ஊ

ஔகா ரத்தின் [1]கடைக்குறி பற்றி
ஊகாரம் அதனூ(டு) உற்ற தென்பார்.
அம்முறை என்னூற்(கு) ஆகா தன்றே. 71

1. 'ள' என்னும் அடையாளம்.

### ஆய்தம் ஒற்று

ஆய்தமோ(டு) ஒற்றும் பிணமே போல்வன
ஆதலின் இயக்கம் அறைந்திலம் ஆயினும்
அகரச் சார்பே ஆமெனில் தகுமே. 72

### உயிர்மெய்யில் அகரம்

அகரம் பதினெட் டொற்றினும் அணைந்து
க,ங,ச,ஞ ட,ண,முதற் பிறவும் ஆமே. 73

### ஆகாரம்

ஆ,எழுத் தொற்றினத்(து) அணையுங் காலை
கா,ஙா சா,ஞா ஆதிய கவினுமே. 74

### இகரம்

இகரம் ஒற்றினத்(து) இசையு மாயின்
கிகர ஙிகரம் ஆதிய கிளருமே. 75

ஈகாரம்

ஈகாரம் ஒற்றுத் தொறும்போய் இசைதலின்
கீ,நீ தொட்டு னீவரை வருமே. 76

உகரம்

உகரம் ஒற்றினத்(து) உறுமேல் குகர
நுகர மாதி னு(வ்,வரை ஒளிருமே 77

ஊகாரம்

ஊஒற் றினத்துறின் கூநூ ஆதி
னூவரை வருமென நுவல்வது முறையே. 78

எகரம்

எகரப் பொறிஒற் றினத்துறிற் கெகர
ஙெகரம் ஆதி னெ(வ்)வரை நிகழுமே 79

ஏகாரம்

ஏ,ஒற் றிடையுறில் கே,ஙே தொட்டு
னேவரை வருமென நிகழ்ந்திடல் முறையே. 80

ஐகாரம்

ஒற்றோ(டு) ஐயெழுத்(து) உறுமேல் கைமுதல்
ஆகினை யீறும் அறுமூன் றவிருமே. 81

ஒகரம்

ஒற்றுத் தொறும்போய் ஒகரம் புசலால்,
கொகர ஙொகரம் ஆதிய குலவுமே. 82

ஓகாரம்

மெய்களில் ஓஉறிற் கோ, ஙோ ஆதிய
பொறிமூ வாறும் பொலியும் அன்றே 83

ஔகாரம்

ஔஎனும் உயிர்தான் அறுமூன் றுடல்கொடு
கௌவே முதலா னௌவரை காட்டுமே. 84

மூவகை எழுத்து

மற்றை[1]மூ வகையெழுத் தொலிவரு மாறே
இயக்கமும் ஆமென் றியம்பிடல் மரபே. 85

1. அலது, கூட்டு, குறிப்பு.

அதிகாரம்

இயங்கு நிலையிவண் இயம்பினம் இனநிலை
அறிந்த வாறே அறைகுதும் அன்றே. 86

## இனநிலை

### பொதுவினம்

உயிர்ஈ ராறும் பொதுவின மாமே. 87

### ஓரினம்

ஒற்றினம் உயிர்மெய் யினத்தோ டுறுமே. 88

### வல்லினம்

கசட தபறஎன்(று) இருமூன் றெழுத்தும்அவ்
[1]வருக்கமும் வல்லின மாமெனல் வழக்கே. 89

1. கா, கி, கீ முதலியன.

### மெல்லினம்

ஙஞண நமனவென்(று) எழுத்தோர் ஆறும்
அவற்றின் பகுதியும் மெல்லினம் ஆமே. 90

### இடையினம்

யரல வழளவென்(று) எழுத்திரு மூன்றும்
அவ்வப் பகுதியும் இடையின மாமே. 91

### ஆய்தம்

ஆய்தம் இடையினத் தொற்றுப் போலுமே. 92

### மூவகை

அலகாதி மூன்றும் பிறழ்தரும் இனமே. 93

### பால்

வல்லினம் ஆணே மெல்லினம் பெண்ணே
இடையினம் அலியே யென்பார் இடைசிலர்
குறில்நெடில் நடுவினைக் கூறலும் உளவே. 94

### அதிகாரம்

இனநிலை கூறினம் எழுத்துத் தோறும்
தெய்வ நிலையுள செப்புதும் சிறிதே. 95

## தெய்வ நிலை

### உயிர்

அகரஆ காரத்(து) அயனொடு கலைமகள்
இகரஈ காரத்(து) அரியுடன் எழிற்றிரு
உகரஊ காரத்(து) அரன்உமை எகரம்
ஏகா ரத்தில்ம யேச்சுரன் யாமளை
ஒகரஓ காரத்(து) ஈசன்ம னோன்மணி
நிலைஇய பண்புணர் நெறிஎளி தலவே. 96

### ஐ ஔ

ஐகா ரத்தில் அயில்வேற் குருபரன்
ஔகா ரத்தில் அவன்[1]றுணை யுறுமே. 97

1. விநாயகர்.

### ஆய்தம்

ஆய்தத்(து) அருக்கன் ஆதி[1]முச் சுடரும்
பொலிதரு மென்னப் புகலல் ஆகுமே. 98

1. சூரியன் 2. சந்திரன் 3. அக்கினி.

### ஒற்று

ஒற்றினந் தோறும் உருவொடு தோன்றாத்
தெய்வம் புகுமெனச் செப்பிடல் முறையே. 99

### உயிர்மெய்

உயிர்மெய் ஆதியில் உரைக்கரும் பேதத்(து)
அளவில்பல் தெய்வம் அண்ணுறும் அன்றே. 100

### புறனடை

தெய்வப் பெயரின் சிரத்துறும் எழுத்தே
அவ்வக் கடவுள் அணிநிலை யாமென்(று)
இயம்பு மாற்றமும் இனிதாம் அன்றே. 101

## அதிகாரம்

தெய்வ நிலையிவண் செப்பினம் எழுத்தின்
தன்மை நிலையினைச் சாற்றுதும் சற்றே. 102

## தன்மை நிலை

### அகரம்

அகரம் சேய்மைப் பொருளினைச் சுட்டி,
உடைமை காட்டும் இடைநிலை யாகி,
[1]ஏனைப் பொருள்விளைத்(து) ஒவ்வோ ரிடத்து
மிகுதி காட்டும் [2]அவ்வூர் என்பதும்
[3]பைய நாகம் என்பதும் [4]அசைவன்
என்பதும் [5]அகோரம் என்பதும் நிரை நிரை
உதாரண மாகும் உற்றுணர் வார்க்கே 103

1. மறுதலை 2. சேய்மைப் பொருள் 3. உடைமைப் பொருள்; பையுடைய நாகம் 4. மறுதலைப் பொருள் 5. மிகுதிப் பொருள்.

### ஆகாரம்

ஆவெனல் வினவாம் அதா எனல் உதாரணம். 104

### இகரம்

இகரம் அணித்தாம் பொருளினைச் சுட்டி
உடைமை காட்டும் கடைநிலை யாகும்
இப்பணம் [1]கண்ணி எனுமிவை உதாரணம். 105

1. உடைமைப் பொருள்.

### உகரம்

உகரம்ஓர் பொருளின் நடுநிலைச் சுட்டாம்
உவ்விடம், என்பது உதாரணம் ஆமே. 106

### எகரம்

எகரம் முதல்நின்று பொதுப்படச் சுட்டி
ஐயம் தீர்வான் வினவ லாகும்.
எத்தெய்வம் மேலாம் எனும்சொல் உதாரணம். 107

### ஏகாரம்

ஏகாரம் ஒருவர்க் குணர்த்தும் குறியாய்,
உறுதி காட்டும் கருவி யாகிப்
பெயருடன் [1]இருவிதத் தணைந்து, விளியாம்
அங்குபோ காதே என்சொல் மெய்யே
ஏகுகா குருவே எனும்நான் குதாரணம். 108

1. மொழிக்கு முன்னும் பின்னும்

### ஐகாரம்

ஐகாரம் ஒருபெயர் ஈற்றிற் புணர்ந்து
மற்றுமோர் சொல்லின் வரவு நோக்கும்
குமரனை யென்று கூறிடல் உதாரணம். 109

### ஓகாரம்

ஓவெனல் வினாவே(டு) எதிர்மறை உணர்த்தும்
உறவோ என்கை உதாரணம் ஆமே 110

### மொழிஈற்று - விகுதி

குகரமும் கையெனும் எழுத்தும்ஐ காரமும்,
ஓவெனும் பொறியும் மொழியீற்று விகுதியாம்.
அதுக்குச் செய்கை உண்மை கேண்மோ
என்னும்நான் மொழியும் இலங்குதா ரணமே. 111

### மொழி முதலாகாதன

ஆய்தமும் ஒற்றும் ஙகரமும் டகரமும்
ணகரமும் ரகர மும் லகரமும் ழகரமும்
ளகரமும் றகரமும் னகரமும் மொழிமுன்
நில்லா என்று நிகழ்த்திடல் மரபே. 112

### அதிகாரம்

ஏனைய எழுத்தின் குணமெலாம் பொதிய
மால்வரைக் குவட்டின் வாழுமா முனிவன்
சீறடி மறவார் தெரிதற் பால
ஆயினும் விரித்தீண் டறிந்த மட்டும்

நுவலினும் பெருத்து நூலெழில் குன்றும்
ஆதலின் விடுத்தினி அவற்றின் புணர்ச்சி
இயல்பு கூறுதும் என்றமாத் திரமே 113

நிலையியல்பு முற்றிற்று

## புணர்ச்சி இயல்பு

சுட்டெழுத் திடையெவ் வுயிர்வந் தொன்றினும்
வகரஒற் றிடைக்கொ(டு)அவ் வுயிர்மெய் யாகும்
அவ்வாளை இவ்விரும்பு உவ்வெழுத்து எவ்வோலை
என்னும்நான் மாற்றத்(து) இயல்பே யாகும். 114

### வருக்க ஒற்று

உயிர்மெய்ப் பொறிமுன் உறுமொழிச் சுட்டில்
அவ்வவ் வருக்கத்(து) ஒற்றிடை தோன்றும்
அக்கோன் இந்நகர் உந்நகர் எனவே. 115

### வகர உடம்படு மெய்

இருபால் விகுதிகள் சுட்டில் அகரம்
ஒற்றின்றி வகரமாய் அணைதலும் வாய்பா(டு)
அவன் இவள் எவள்எனல் உதாரணம் ஆமே. 116

### இதுவுமது

ஆஊ ஓஎனும் எழுத்தொரு மூன்றும்
பின்வரும் உயிர்களை வகரஒற் றுடம்படச்
செய்வன உதாரணம் ஆவாளி எனலும்
ஊவிட்டான் எனலும் ஓவென் றான் எனலுமே. 117

### யகர உடம்படுமெய்

ஈஏ எனும்இரு பொறியும் பின்வரும்
உயிர்களை யகர வருக்கம் ஆக்கும்.
ஈயல்ல எனலும் ஏயிருளா எனலும்
தகும்உதா ரணமெனச் சாற்றுதல் இயல்பே. 118

## யகர வகரம்

ஐஔ இரண்டும் அணைதரும் உயிர்கட்
செய்வ [1]தொலியீற்றிற் றிகழ நின்றன
ஆயினும் ஐயனும் ஔவையும் உதாரணம். 119

1. ய், வ்.

## வகர உடம்படு மெய்

ஒகரத் துடன் உயிர் மிகைபட ஒன்ற
ஒன்றினும் அகரத் தியல்பே ஒளிர்தரும்
ஒவ்வெழுத் தெனும்சொல் உதாரணம் ஆமே. 120

## ஆய்தம்

ஒருபொறிப் பின்னே உறும்ஆய்தம் அதன்பின்
வல்லுயிர் மெய்யே வருமாறு நிற்கும்
எஃகம் அஃது கஃசுஎனல் உதாரணம். 121

## உடனிலை மெய்ம் மயக்கு

கசத பவமெய் ஐந்தும் தம்பின்
தம்முயிர் மெய்யே வருமா றவிர்தரும்
பக்கமும் அச்சமும் முத்தியும் கப்பலும்
கொவ்வையும் நிரைநிரை குலவுதா ரணமே. 122

## ர, ழ மெய் தனிக்குறிலணையா

ரழஒற்றுத் தம்உயிர் மெய்யே தழுவா
[1]வந்திசே யுளனெனின் வருமுதா ரணமே. 123

1. மலடி; மலடிக்கு மகனுளனாயின் இவற்றிற்கும் உதாரணம் உளவாம் என்றவாறு.

## ஈரொற்றுடனிலை

யரழஒற் றுக்கள் அவற்றின் பின்னர்
ஒற்றும் சிற்சில புணர நிற்பன
மெய்ம்மறை நிவிர்த்தி புகழ்ச்சிமூன் றுதாரணம். 124

## வேற்றுநிலை மெய்ம் மயக்கம்

டறஒற்றின் பின்அவ் வினத்தொடு கசப
உயிர்மெய் புணரும் கோட்டையும் கட்கமும்
வெட்சியும் திட்பமும் கற்று நற்குறி
புற்சுனை அற்பம் என்பவும் இருவிதத்(து)
உதாரண மாம்என் றுரைப்பார் புலவோர். 125

### ஙகர மெய்

ஙகரஒற் றின்பின் அவ் வினத்தொடு ககர
உயிர்மெய் தோன்றும் இங்ஙன மெனலும்
கங்கையென் றுரைப்பதும் கவினுதா ரணமே. 126

### ஞகர மெய்

ஞகரமெய்ப் பின்அவ் வினத்தொடு சகர
உயிர்மெய் ஒன்றும் உதாரணம் உரைக்கில்
எஞ்ஞான் றெனலும் தஞ்சமென் றிடலுமே. 127

### ணகர மெய்

ணகர உடற்பின் அதனொடு கசடப
ஞமவத் தோன்றும் உயிர்மெய் யாயே
பண்ணை எண்கு புண்சேர் பிண்டம்,
பண்பு வண் ஞானம் பண்மறை தண்வான்
என்னும் சொற்கள் இயல்உதா ரணமே. 128

### நகர மெய்

நகர ஒற்றுடன் அவ்வுயிர் மெய்யும்
தகர வுயிர்மெய்யும் சார்வதே தகுதி
எந்நா கந்தன் எனுமிரண் டுதாரணம். 129

### மகர மெய்

மகர ஒற்றுடன் அதன்உயிர் மெய்யும்
பகர வகர உயிர்மெய்யும் புணரும்
எம்மையும், கும்பனும் சேதம்வரா தெனலும்
உதாரண மாமென் றுணர்வது முறையே. 130

## னகர மெய்

னகர உடலுடன் அவ்வுயிர் மெய்யும்
கசபற ஞமவவ் வருக்கத் துயிர்மெயும்
வருவன உதாரணம் புன்னை வன்கண்மை
நின்சூல், இன்பம், குன்று,முன் ஞானம்
பொன்மணி, பின்வரல் எனுமிவை யாமே. 131

## யகர மெய்

யகர ஒற்றோ(டு) அவ்வுயிர் மெய்யும்
கசதப நமவ,வ் ஏழாம் வருக்கத்(து)
உயிர்மெய்யும் இசைவுறும் மெய்யன், பொய்கை
செய்சால், பொய்தாள், எய்போர் பொய்நா
நொய்மா நெய்வோன் எனும்சொற்கள் உதாரணம். 132

## ரகர மெய்

ரகர மெய்யுடன் கசதப ஞநமவ,க்(கு)
உரிய உயிர்மெய் ஒன்றித் திகழும்
வளர்கை, உயர்சீர், குளிர்தாள், அவர்போல்
ஊர்ஞானி, ஓர்நாரி, நேர்மாரன் நீர்வாரி,
என்பவை யுதாரணம் இனிதுணர் வார்க்கே. 133

## லகர மெய்

லகரமெய் யுடன்அதுட் புகும்உயிர் மெய்யும்
கசபவக் குட்புகும் உயிர்மெயும் கவின்றரும்
சொல்லல், பல்கணி, வெல்சேந்தன், நவில்பாச்
செல்வம், என்னும் ஐம்மொழி உதாரணம். 134

## ழகர மெய்

ழகர ஒற்றும் ரகரமெய் போன்று
கசதப ஞநமவக் காண உயிர்மெய்
முன்ன ரவிர்தரும், மொழிஉதா ரணங்கள்
ஆழ்கடல், வாழ்சுரர், ஏழ்திரை, வீழ்பனி
அகழ்ஞாலம், திகழ்நாகம், பிறழ்மணி, இகழ்வோன்
என்பவை தாமென் றிசைத்திடல் இயல்பே. 135

### ளகர மெய்

ளகர மெய்யும் லகரமெய் போல,
தானும் கசபவ மெய்களும் பருகும்
உயிர்மெய்கள் முன்னர் ஒளிரும் உதாரணம்
கொள்ளேயும் வெள்கலும் அவள்சாடை யெனலும்
இவள்பார்வை யென்கையும் கள்வன்என் றலுமே. 136

### இடைநிலை—மெய்ம் மயக்கம்

பின்னர்ஓர் உயிர்மெய் வருமா றவிர்வன
கசட தபற ஙஞநவ மெய்கள்
கொக்கும், கச்சியும், வட்டும் பத்தியும்
அப்பும் கொற்றியும் கொங்கும் பஞ்சும்
நந்தும் செவ்வியும் நவிலுதா ரணமே. 137

### மொழி ஈற்று எழுத்துக்கள்

ணமன யரல ழள,மெய் யெட்டும்
மொழியீற் றவிர்தரும் முறைபயில் உதாரணம்
கண்கனம் பொன்செய் அவர்நிழல் புகழ்,மகள்
அன்ன மாற்றம் அளவில் உளவே. 138

### புணர்ச்சியில் தனிக்குறில் இரட்டல்

மாற்றத் தீற்றில் வருமொற்றுள் ஆறுடன்,
எவ்வுயிர் வரினும்அவ் வவ்வுயிர் மெய்யாம்.
பெண்ணரசி தம்மறிவு நின்னிகல் பொய்யுறவு
கல்லெறிதல், புள்ளொலி என்பவை உதாரணம். 139

### புணர்மொழியுள் ரகர ழகரம்

மொழியீற் றவிர்தரும் ஒற்றினத்(து) இரண்டு
பின்வரும் உயிரையுட் கொண்டுயிர் மெய்யாம்.
அவரிடம் என்பதும், தமிழுணர் வென்பதும்
அவற்றின் உதாரணம் ஆமெனத் தகுமே. 140

### தகரம் திரிதல்

தகர உயிர்மெய் ணனஒற் றுடன்வரின்
தான்திரிதல் ஒன்று; அவை தம்மையுந் திரித்தல் ஒன்(று);

ஆகும் இருவகைத்(து); உதாரணம் அறைகெனின்
மண்டலம், என்ருய், என்பவும் கட்டன்மை
பொற்ருளம் என்பவும் போல்வன வுளவே. 141

## லள திரிதல்

உயிர்மெய்த் தகரம் லளஒற் றுடன்வரின்
தானும் கெட்டுஅவை தம்மையுங் கெடுத்து
வேறுயிர்மெய் தனித்தும்மெய் முற்கொடும் வரச்செயும்
இகருன் என்பதும் அவடாய் என்பதும்
புற்ருேல், எட்டுணி, என்பவும் உதாரணம். 142

## மகரந் திரிதல்

மகர ஒற்ரெடு தகர வுயிர்மெய்வந்து
ஒன்ற நகர ஒற்ரு மிளிர்தரும்.
நந்தாய் எனுஞ்சொல் நவிலுதா ரணமே. 143

## ணமனலள—திரிதல்

ணமனலள ஒற்ரெடு ககரவுயிர் மெய்வரின்
திரிதரும் வண்ணம் தெரிக்கும் உதாரணம்
மட்குடம், அங்கை, பொற்கோல் விற்கணே
முட்கூர் என்ன மொழிவது முறையே. 144

## புறனடை

ணமனலள ஒற்ருே(டு) உயிர்மெய்ச் சகர
பகரம் புணர்கால் மகரஒற் ருென்றே
ஞகரஒற் ருயும் திரியாது நிற்கும்
மற்றவை ககரத் தால்என வயங்கும்.
நஞ்சீர், நும்பா எனுமிரு மொழியும்
நிரைபடு முதாரணம்; ஆகும் அவற்றிற்கு
மட்சால், விட்புலம் எனச்சில விரிக்கில்
பெருத்துக் கெடுமெனப் பேசில மன்றே. 145

## ணவ்வீற்று முன் நகரம்

ணகர ஒற்று நகரவுயிர் மெய்வரின்
தனதுயிர் மெய்யாய்ச் சாரச் செய்யும்
பெண்ணுக மெனும்சொல் பிறங்குதா ரணமே. 146

### மகரத்தின் திரிபுப் புணர்ச்சி

மகர ஒற்றுத் தன்ஞெடு ஞநவின்
உயிர்மெய் தோன்றின் தானிறந் தொழியும்
ஒவ்வோ ரிடத்தே அவ்வவ் ஒற்ரும்
வருஞாயி றெனலும், பொருநீர்மை யெனலும்
செஞ்ஞாயில் வெந்நரி என்பவும் உதாரணம். 147

### னகரம் திரிதல்

னகர மெய்யும் ணகரஒற் றதுபோல்
வரும்ரகர வுயிர்மெயைத் தன்ன தாக்கும்
நின்ஞய் எனும்சொல் நிகழ்த்துஉதா ரணமே. 148

### மகரத்திற்கு மேலும் ஒரு சிறப்பு

மகரஒற் றதன்பின் கசதப வருங்கால்
அவ்வவ் ஒற்ருய் அவிர்தலும் வழங்கும்
சிங்கக் காளி தங்கச் சேலை
மனத்திடம் களப்போர், எனும்நான் குதாரணம். 149

### யகரம் புணர்தல்

யகரமெய் யதன்பின் ஞகரவுயிர் மெய்வரின்
அவ்வுட லாதலும், இயைந்தவா றவிர்தலும்
உடைத்துமெஞ் ஞானமென் றுரைக்கும் சொல்லும்
வாய்ஞான மெனலும் வழங்குதா ரணமே. 150

### லள புணர்ச்சி

லள்மெய்ப் பின்னர் நமஉயிர் மெய்வரின்
ஆமா றுதாரணம் அறைகுதும், கன்ஞர்
வாணுதல் என்பவும், கான்முழம் சூண்மொழி
என்பவும் ஆமென் றிசைத்திடல் இயல்பே. 151

### லள புணர்ச்சி

ஞகரவுயிர் மெய்யும் மகரவுயிர் மெய்யென
லளஒற் றுடன்உறீஇ னணமெய்க ளாகச்

செய்யும் உதாரணம் அகன்ஞாலம் எனலும்
இவண்ஞானி தான்என் றிசைத்தலும் ஆமே. 152

## குற்றியலிகரம்

மொழியீற்று மெய்யும் அவணுள உயிர்மெய்
உகரமும் தம்பின் யகரஉயிர் மெய்வரின்
அவ்வவ் வருக்கத்து இகரமா யவிர்தரும்
அவனியாவன் எனலும் களிற்றியானை எனலும்
உதாரண மாகும் குற்றிய லிகரம்
என்றிதைப் புலவோர் இயம்புதல் மரபே. 153

## குற்றியலுகரம்

உயிர்மெய் உகரம் ஈற்றுள மொழிப்பின்
எவ்வுயிர் வரினும் உகரத் திடங்கவர்ந்(து)
அதைஒரீஇ நிற்கை மிகைபடும் வாய்பா(டு)
அதனைக் குற்றிய லுகரம்என் றிடலுண்(டு)
உதாரணம், அவனுக் கிவளார் எனலே. 154

## முற்றியலுகரம்

முற்றிய லுகரம் திரியாது வருமுயிர்
வகர வருக்கம் ஆதலும் சிறிதுள
பொதுவிற் கடுவுணல் போல்வன உதாரணம். 155

## மகரக் குறுக்கம்

மகர மெய்ப்பின் வகரவுயிர் மெய்வரின்
மகரக் குறுக்கம் ஆமென வாய்பாடு
உதாரணம் வரும்வாழ் வெனும்உரை யாமே. 156

## உயிர்நெடில் இரட்டித்தல்

ஆஓ இரண்டும் தனித்தனி யிரட்டின்
பிற்பொறி ககர வுயிர்மெய் ஆதலுண்டு
ஆகா ஓகோ எனுமிவை உதாரணம். 157

## வடமொழிப் புணர்ச்சி

### தீர்க்க சந்தி

அகரஆ காரம் அவ்வுயிர் மெய்களில்
புணர்கால் இம்முறை யாகியும் பொலிதரும்
நாகணை, தரா தரம் சிவாக்கினி எனல்போல்
அன்றியும் பகர்வார் அவைநல மலவே. 158

### குண சந்தி

அகரவுயிர் மெய்யோ(டு) இகர உகரம்
புணர்கால் அதன் ஏ, ஓ ஆவாம் உதாரணம்
நரேந்திரன் பயோதரம் எனுமிரு பாற்றே. 159

### தீர்க்க சந்தி

உயிர்மெய் இகரத்து உயிராம் இகரம்
வருங்கால் நெடிலா மன்னுறீக் கிடக்கும்
முனீச்சுர னென்ன மொழிஉதா ரணமே. 160

### ர+அ

ரகர அகரம் பின்வரும் அகரம்
ககர மாகக் காட்டலும் உடைத்து
முரகரி அரகர எனுமிவை உதாரணம். 161

### உயிரின் இயல்பு

அகர உகரம் உயிர்மெய் யாங்கால்
பின்வரும் உயிர்களை வகரம் ஆக்கலும்
இகரமும் எகரமும் அவண்ஆம் காலை
யகரமாக் கிடலும் உயிரெழுத் தியல்பே
ஆதலின் விடுத்தினி அளபுரைக் குதுமே. 162

### உயிரளபெடை

ஒவ்வோர் பொருளை உறுத்துதல் பற்றி
வண்ண மல்லா இயற்றமிழ்ப் பகுதியில்
நெட்டெழுத் ததற்பின் உயிரள பெடுத்தல்உண்(டு)
உதாரணம் கெடாஅ தழீஇஎனல் பலவே. 163

### ஒற்றளபெடை

ஒற்றினை இரட்டித்(து) இஃதும்ஓ ரளபெடை
என்பார் உளர்எமக்கு இனிதஃ தன்றே. 164

### புறனடை

பல்லெனும் மொழியொடு தலையெனல் புணர்கால்
பஃறலை யாதலும் அருணையும் புரியும்
அருணா புரியென் றவிர்தலும் குசவன்
குயவன் ஆதலும், வரியும் குயிலும்
வரிக்குயி லாதலும் அன்னவை பிறவும்
பொதிய மால்வரைப் புகழ்பொரு புலமைச்
சீரியர் தம்பாற் றெரிவது முறையே.

புணர்ச்சி யியல்பு முற்றிற்று.

எழுத்திலக்கணம் முடிந்தது. சூத்திரம்—165

---

## இரண்டாவது

## சொல் இலக்கணம்

### காப்பு

எழுத்தின் புணர்ச்சியும் இவ்வா றோதி
முதலிலக் கணத்தை முடித்தனம் அடுத்து
நல்லியற் புலவோர் நவில்குகற் கருதிச்
சொல்லிலக் கணமும் தொகுக்குதும் அதனுள்
பொதுவியல் பதனைமுற் புனைந்துரைக் குதுமே. 1

குகற் கருதி — குகனை மனத்தில் நினைத்து.
புணர்ச்சி — கூட்டு.

### 1. பொது இயல்பு

சொல்லெனல் எழுத்துத் தனித்தும் சிற்சில
புணர்ந்தும் வருவன உதாரணம் புகலின்
ஆஎனும் பெற்றப் பெயர்முதற் பலவும்

தனிப்பொறிச் சொல்லாம் மயிலெனும் ஒகரப்
பெயர்முதற் பலவும் புணர்பொறிப் பதமே. 2

ஆ—பசு; பெற்றப் பெயர்—பசுவின் பெயர்; தனிப்பொறிச் சொல்—ஓரெழுத்தொரு மொழி; ஒகரம்—மயிலுக்குப் பெயர்.

சூடாமணி நிகண்டு

''சிகியொடு ஞமலி தோகை சிகாவளம் சிகண்டி மஞ்ஞை
ஒகரமே மயூரம் மற்றும் உறுபிணி முகம்கலாபி
மகிழ்வுறு நவிரம் பீலி கேகயம் மயில் பன்முப்பேரு.''

றகரமும் ரகரமும் ழகரமும் ளகரமும்
ணகரமும் நகரமும் சிற்சில மொழியில்
பிறழ்ந்தும் வருவன உதாரணம் பேசில்
தறை தரை என்னும் நிலத்தின் பெயரும்
உழி உளீ என்னும் இடத்தின் பெயரும்
வனம் வநம் என்னும் காட்டின் பெயரும்
ஆமிவை பற்றி அனைத்தும் பிறழப்
பொறித்தலும் பேசலும் பொருத்தம் அலவே. 3

பொறித்தல்—எழுதுதல்.

தமிழ்ச்சொற் பெருக்கைத் தரணியிற் புலவோர்
அவையில் சேந்தன் காங்கே யன்ஆதியர்
நூல்களிற் றேறி நுவல்வது கடனே. 4

சேந்தன்—சேந்தன் திவாகரம் என்னும் நிகண்டு நூல்; இதனை ஆக்குவித்தோன் சேந்தன். காங்கேயன்—இவர் செய்த நூல் உரிச்சொல் நிகண்டு.

ஒரு மொழி ஒருவாறு, உலகிற் றிரிந்து
வழங்கல் உண்டு உதாரணம் வருகிறவ னென்கை
வாறவன் ஆனதும் கொண்வேந் தென்கை
கொணர்ந்துஎன் றுனதும் இனையன பலவும்
வாசகத் தன்றி வண்ணம் நாடகம்
எனும்இரு பகுதியில் இசையினுந் தகுமே. 5

## நிறங்கள்

இயல் இசை நாடகம் என்னுமுத் தமிழ்ச்சொல்
பொதிய மால்வரைப் பொழிலென இருண்டும்
உலவா முனிவோர் உடையெனச் சிவந்தும்
வீழ்புனல் அருவியில் வெளுத்தும் தோன்றும் என்று
அறிவார் மலர்த்தாள் அணிதலை யெமதே. 6

எழுத்துரு அறியா இயல்பினர் தாமும்
அறியு மாற்றம் அனைத்தும்வெண் ணிறமே. 7

மாற்றம்—சொல்; இயல்பினர்—கல்வியற்ற பாமரர்.

கொல்லா விரதக் குருவாம் குறள்போற்
புந்தியின் அளவிற் பொருள்தரும் சொற்கள்
பளிங்கு நிறமெனப் பகர்வது முறையே. 8

புந்தி—புத்தி.

பேயொடு குன்றும் பிளக்கு மாறு
கழறும்[1] நூ லாதிய கருத்த நிறமே. 9

1. திருமுருகாற்றுப்படை. கருப்பு என்றது தேன் போன்றுள்ள கடுஞ்சுவை யென்பதாம். எளிதிற் பொருள் காணலரி தென்பதாம்.

கற்றூ ணிடத்தொரு கடவுட் காட்டலும்
அரன்மணை அடிசில் ஆக்கச் செய்ததும்
கணபதி கரத்தாற் கயிலை மீதுறச்
சேர்த்ததும் ஆதிய செஞ்சொற் றிரளே. 10

1. அருணகிரிநாதர் திருவண்ணுமலை கோயில் மண்டபத்துத் தூண் ஒன்றில், சம்பந்தாண்டான் பொருட்டுப் பிரபு தேவராசனுதியர் காண, முருகனை வரச் செய்தனர். அஃது கம்பத்திளையனுர் என்ற பெயருடன் திருவருணைத் தலத்தில் உள்ள கோயில் சிவ கங்கைக் குளப் பக்கமுள்ளது.

2. கவிராச பண்டிதர். சௌந்தரியலகரி நூலில், வடமொழியினின்றும் தமிழில் பாடினர். அதன் பரிசாக உமையாள் அவரது மகள்போல வந்து காசி போய் வரும் வரை உணவு சமைத்திட்டு உதவினர். வரலாறு, புலவர் புராணத்தில் காண்க.

3. ஔவையார் பாடிய பாடலுக்கு இரங்கி விநாயகர் துதிக்கையால் கயிலையில் தூக்கிவிட்டதாக வரலாறு. இம்மூன்று செயற்கும் உரியவர் பெயரைக் குறிப்பாயறிய வைத்தனர்.

நால்வரும் பதின்மரும் நவின்ற சொற்கள்
பொன்மை நிறமெனப் புகலத் தகுமே. 11

ஆண்டாளைப் பெரியாழ்வாரோடும் மதுரகவியாழ்வாரைச் சடகோபாழ்வாரோடும் இணைத்து, பத்து ஆழ்வார் என்றனர். நால்வர், சமயாசாரியர். சந்தானாசாரியர்களன்று என்க.

நிறத்தின் பகுதியை இவ்வாறு நிகழ்த்தல்
மிகைபடும் புணர்ச்சி பற்றிச் சொற்களின்
ஐவகை நிறமும் அறிந்து ஓர் புலவன்
முத்தமிழ்ப் பாடல் முறையே ஆதலின்
[1] ஆணிபோன்று ஓர் பொருட்பெயர் ஐந்தால்
காட்டுதும் ஆயினும் கண்ணினும் சிறந்த
மனத்தாற் காண்டலே வழக்கெனல் இயல்பே. 12

1. உரையாணி. பொன்னின் தகுதியை அறிவிப்பது. தமிழ்ப் பாடல் என்பதில் உள்ள பகர ஒற்று, இரண்டாமுருபுக்குரியது.

உலகினர் உணவினத்(து) உயர்ந்த ஒருபொருள்
சோறெனல் வெண்சொல் அன்னம் என்கை
பளிங்கு நிறச்சொல் பதமெனல் கருஞ்சொல்
அமுதெனல் செஞ்சொல் அடிசில் என்கை
பொன்னிறச் சொல் இவண் புகன்று காட்டல்
அம்மையிற் புலமை அணையா ராயிருந்(து),
இம்மையில் முயல்வார் இகழ்தல்நன் குணர்ந்தே. 13

அம்மை—முற்பிறப்பு. இம்மை—இப்பிறப்பு. கல்வி எழுமையும் ஏமாப் புடைத்து என்றவாறு முன்னைய தொடர்பாற் கல்வியுடையார் ஏற்பர். இம்மையிற் கற்பார் உணராமை பற்றி யிகழ்வாரென்பதாம்.

பளிங்கு நிறமும் பழுதில்பொன் நிறமும்
வெண்மையில் செம்மையில் மேவல் பற்றி
முத்தமி ழாமென மொழிந்தனர் முதியோர். 14

ஐந்நிறம் முந்நிறமாக வழங்கற்குக் காரணம் கூறினர்.

தாயைத் தல்லி யென்றுரைப்பது போலும்
திசைச்சொலும் சிற்சில சேர்ந்தமை பற்றித்
தன்சொலைப் பிறவெனச் சாற்றிடல் மயலே. 15

பிறவென—பிறமொழிச் சொல்லென. அத்தன் என்ற சொல் அச்சன் தந்தையைக் குறிப்பது. கேரள மொழி என்றல் போல்வதாம்,

சொல்லின் பொதுவியல்பு ஒருவாறு சொற்றனம்
பிரிவியல் பதனைப் பேசுதும் அவற்றுள்
சுட்டுச் சொல்முதற் சொல்லுதும்; அன்றே. 16

முற்றுங் கூறுதல் மற்றென்று விரித்தலாகி விடலாகா தென்பதைக் கருத்துட் கொண்டு, ஒருவாறு என்றார்.

பொதுவியல்பு முற்றிற்று

---

## பிரிவு இயல்பு

### சுட்டுச் சொல் வகை.

அவன் இவன் எவன்எனும் ஆண்பாற் சுட்டும்
அவள் இவள் எவளெனும் பெண்பாற் சுட்டும்
அஃதிஃ தெஃதெனும் அலிப்பாற் சுட்டும்
உலகமுழு தோத ஒளிர்வன அவற்றுள்
ஆய்தம் நடுவில்லா அலிச்சுட்டு மிகுமே. 17

எவன், எவள், எஃது ஆகியவற்றைச் சுட்டென்றதும், அலிப்பால் என ஒன்று வகுத்ததும் இவ்வாசிரியரது புதுக் கொள்கை. அஃது, இஃது, எஃது இவை அலிப்பாற் சுட்டு ஆகும்.

உவன் உவள் உதுவெனும் சுட்டுச் சொற்களும்
ஒவ்வோ ரிடத்தே இலைத்துறல் உளவே. 18

இலைத்துறல்—அருகிவழங்குதல் (சுவையில்லா திருத்தல்)

அவனிவள் எஃதெனற் பகுதி மூன்றும்
ஒருமைச் சுட்டுச் சொற்களெனல் உறுதியே 19

ஆண்பால் பெண்பால் உயர்திணை யென்பதும்
அலிப்பால் அஃறிணை யென்பதும் அழகே 20

அலிப்பால்—ஆணும் பெண்ணுமல்லாத பகுதி
அல்திணை—அஃறிணை.

ஒருமைப் பன்மையும் பன்மை யொருமையும்
வழங்கலுண்டு உதாரணம் முருகர் என்னும்
ஒருசேய்ப் பெயரும் கடகம் என்னும்
பன்னிரண்டு யானைப் பெயரும் ஆமே 21

ஒருமைப் பன்மை—ஒருவர் எனவரும் உயர்வுப்பன்மை; பன்மை யொருமை—தொகுதியொருமை; வந்தோம், இருந்தோம் என்றாற் போல்வன

அவரிவர் உவர் எவர் என்னும் சொற்கள்
உயர்திணை ஒருமைப் பன்மைச் சுட்டே
ஆகி, ஒவ்வோ ரிடத்து அப் பன்மையும்
ஆகும் உதாரணம் அவர்ஞான பண்டிதர்
இவர்தேவகியார் என்பவும் தனித்தனி
பன்னகர் வாணரும் கூண்டுள களம்புக்கு,
எவர்பொன் னூரவர் என்பதும் ஆமே 22

பல்நகர் வாழ்நர்—பல நகரில் வாழுநர் என்பதாம்.
கூண்டுள—கூடியுள்ள. களம்-சபை

அவர்கள் என்றிடல் ஆதிய சொற்கள்
உயர்திணைப் பன்மைச் சுட்டே ஆகி,
ஒவ்வோரிடத்தவ் ஒருமைப் பன்மைச்
சுட்டும் ஆகும் உதாரணம் சொல்லின்
வானவர்கள் என்பதும் மந்திரி அவர்கள்
என்பதும் இவற்றுள் பின்மொழி போல்வன
வாசகம் நாடக வாய்பாட் டினவே 23

இவையெனல் ஆதியும் அவைகளென்றிடல்
ஆதியும் அஃறிணைப் பன்மைச் சுட்டாம்
இவற்றிற்கும் உதாரணம் இயம்பிடல் இழிவே. 24

இன்னுன் இன்னுள் இன்னதெனல் ஆதிய
குறிப்புச் சுட்டுச் சொல்லெனல் குணமே. 25

அங்ஙனம் அந்த அங்கெனல் ஆதிய
மொழி பொது வயினெனும் மூவகைச் சுட்டே 26

வயின்—இடம்.

சுட்டுச் சொல்விதம் சொற்றனம் இனிப்பெயர்ச்
சொல்விதம் பகருதும் சூழ்ந்த வாறே 27

பெயர்ச் சொல்வகை

இடுகுறி காரணம் எனுமிரு வகைபெயர்
வேலெனல் வேல னெனல் உதா ரணமே 28

வேல்—இடுகுறி; வேலன்—காரணக்குறி

பகாப்பதம் இடுகுறி பகுபதம் காரணம்
என்பார் பற்பலர் இடுகுறி யெனலால்
அஃதுமோர் குறிப்பால் அவிர்தரும் எனலாம்
அக்குறிப் பறிவோர் அகத்திய முனிவோன்
அடியவர் தாமே ஆயினும் அவர்தாள்
மலர்தரு மகரம் வாய்ந்த சென்னி
உடைமையின் களிப்பா லுரைக்குதும் இதற்கே 29

என்பார் நன்னூலார் முதலியோர். இடுகுறி என்பது ஒரு குறிப்புப் பற்றி இடப்படுவது என்பது பொருள் தருவதால் இதுவும் காரணப் பெயரேயாம் என்பதும் இது நுண்ணுணர்விஞர்க்கே புலப்படும் என்பதும் இவ்வாசிரியர் கருத்து.

மகரம் - பூந்தாது. தாள் மலர் தரும் மகரம் என்றது பாத தூளியை.

வகரம் சத்தி இல்லெனல் உறையுள்
வகரமும் இகரமும் வேயாம் ஆதலின்
வேலெனும் இடுகுறி விளங்கிற் றெனப்பலர்
கருத்துக் கிசையக் கருதுகின் றனமே. 30

வேல்—சத்தியின் உறைவிடம் என்னும் குறிப்புடையது என்பது இவ்வாசிரியர் கருத்து.

திருவைந்தெழுத்தில் வகரம் திருவருட் சத்தியைக் குறிக்கும். அ. இ. இரண்டும் சேர்ந்து 'எ' எனும் கூட்டெழுத்தாதலும் கருதுக.

ணகரஒற் றீற்றுறும் ஆண்பாற் பெயர்மிகை
பிரமன் பகவன் குகன்சிவன் எனவே. 31

ளகரஒற் றீற்றுறு பெண்பாற் பெயரணி
உமையாள் கலைமகள் என்பவை ஒத்தே. 32

ரகர ஒற் றீற்றுறு பன்மைப் பெயர் இசை(வு)
அடியார் பாவலர் ஆமிவை போன்றே. 33

இகரமும் உகரமும் ஐமுதற் பிறவும்
அலிப்பாற் பெயரீற் றணுகுதல் அமைவாம்
வாரிதி முத்து மஞ்ஞை என்பவும்
மரம் கல் லாதியும் ஆமெனல் வழக்கே. 34

அஃறிணை போலும் உயர்திணைப் பெயர்கள்
சிவை திரு கணபதி அரி எனல் பலவே. 35

இவ்வாசிரியர் பெயர்ச் சொற்கள் ஈறு பற்றிப் பாலுணர்த்தும் எனக் கொண்டனராதலின் இது கூறினர்; வரும் சூத்திரங்களும்நோக்குக.

உயர்திணைப் பன்மை போலும் அஃறிணை
உம்பரும் செக்கரும் இடங்கரும் அனையவே. 36

உம்பர்—உவ்விடம்; செக்கர்—செவ்வானம்; இடங்கர்—முதலை; சுரும்பர்—பொதும்பர்.

முப்பாற் பொதுப்பெயர் மூர்த்தியா தியவே. 37

ஆண்பால் போலும் அஃறிணைப் பெயர்கள்
கலன்புலன் ஆதிய கணக்கிலா தனவே. 38

ஒன்றன் பெயர்மற் றொன்றெனக் காட்டும்
பெயர்மா றுட்டம் அனைத்தும் பெரியோர்
பாலடைந் துணர்ந்து பகர்வது முறையே. 39

அஃறிணைப் பெயர். உயர்திணைப் பெயர் போலத் தோன்றுத லும் உயர்திணைப் பெயர் அஃறிணைப் பெயர் போலத் தோன்றுதலும் ஒருமைப் பெயர் பன்மைப் பெயர் போலத் தோன்றுதலுமாகிய மாறுட்டம். எனவே ஒரு சொல்லை ஈறு பற்றி மட்டும் துணியாது, பொருள் பற்றியே இன்ன சொல்லெனக் கொள்ளல் துணிபு.

பெயர்ச்சொல் ஒருவாறு பேசினம் வினைச்சொல்
அறிந்த வாறீண் டறைகுதும் அன்றே. 40

## வினைச் சொல் வகை

உண்டல் உறங்கல் போதல் வால்முதல்
அனையன பிறவும் பொதுவினை யாமே. 41

பொதுவினை—திணை, பால், இடம் ஆகியன உணர்த்தாமல் தொழில் மட்டும் உணர்த்தி வரும் வினைப்பெயர்கள்.

வந்தேன் இருந்தேன் என்பவை முதலியன
தன்வினை யாமெனச் சாற்றுதல் வழக்கே. 42

வைதான் என்பதும் சிரித்தாள் என்றலும்
ஓடியது என்கையும் அன்னவை பலவும்
முப்பாற் பிறவினை யாமெனல் முறையே. 43

போயினன் என்றிடல் ஆதிய பிறவினை
ஆயினும் தன்வினை யாதலும் உடைத்தே 44

போன செய்த வைத்த எனலாதிய
வினைமுற் றிறந்த காலந் தழுவுமே. 45

இவ்வுதாரணங்கள் விகுதியொடு புணராமல் நின்றன எனக் கொள்க, வரும் சூத்திரமும் அவ்வாறே கொள்க.

ஆகிற அழிகிற எனுமிவை அனையவை
நிகழ்கா லத்தொடு கூடிநின் றனவே. 46

பிறக்கும் பேசும் பிணங்குமெனல் ஆதிய
எதிர்கா லத்தோ டிசைந்துநிற் பனவே. 47

சொல்லி நின்று வந்துஎன லாதிய
மற்றுமோர் வினையை வருவிக்கும் ஆதலின்
வினையெச் சமாமென விளம்பிட லியல்பே. 48

ஈகை ஆதிய நல்வினை ஏற்கை
ஆதிய தீவினை அறிஞரா மவற்கே. 49

வினைச்சொலிவ் வண்ணம் விளம்பினம் இனிப்பாத்
தொறும்ஒரு வகைச்சொற் சொல்லுதும் அன்றே. 50

## பல்வகைச் சொற்கள்

### ஏவற் சொல்

செய் போ நில்எனல் ஆதிய பலவும்
ஏவற் சொற்களென் றியம்புதல் இயல்பே. 51

### அமைதிச் சொல்

வளர்ச்சி தளர்ச்சி அகலமெனல் ஆதிய
அமைதிச் சொல்லென் றறைவது முறையே. 52

### தன்மைச் சொல்

இனிப்பு புளிப்பு கசப்பு கோபம்
சாந்தமெனல் ஆதிய தன்மைச் சொல்லே. 53

தன்மை—பண்பு.

### உரிச்சொல்

உன்னெனல் ஆதிய உரிச்சொல் லாமே. 54

### ஒப்புச் சொல்

ஓமெனல் ஆமெனல் ஆதிய ஒப்புச்
சொற்க ளாமெனத் துணிவார் புலவோர் 55

ஒப்பு—உடன்படுதல்.

### விளிச் சொல்

ஏயெனல் ஆதிய விளிச்சொல் லாமே. 56

### இரக்கச் சொல்

ஐயோ என்றிடல் ஆதிய சிற்சில
இரக்கச் சொல்லுள என்பது முறையே. 57

கூகூ எனல்பலர்க் கூட்டும் சொல்லே. 58

ஆ ஓ என்றிடல் வியனச்சொல் லாமே. 59

வியன்—பெருமை. ஆ ஓ என்பன பெருமைக் குறிப்புணர்த்துவன என்றவாறு.

சீயெனும் வெறுப்புச் சொல்முதற் றேடி
எம்மொழி யோடும் இம்மொழி எனல்போல்
வருதுணைச் சொல்வரை வகுத்துக் கூறினும்
கழகத் தன்(று) இடைக் காடன் கழறும்
சொல்முதல் எழுதொணு தனசில துலங்கும்
அன்றியும் கடல்நீர் அளக்கை போலாம்
ஆதலிற் பிரிவியல் (4) இம்மட் டடக்கித்
தள்ளரும் சார்பியல் பறைகுதும் சற்றே. 60

பிரிவியல்பு முற்றிற்று

'ஆற்றங்கரையின் அருகு' என்ற பாடலில் "இச்சிச்சிச்" என்றது இம்மொழி. எல்லாச் சொல்லோடும் வருவது.

ஆடு—கீடு; பாம்பு—கீம்பு; அம்மா—கிம்மா போல்வன.

## 3. சார்பியல்பு

ஆன்அன் ஆள்அள் ஆம்அம் என்ஏம்
உம்ஓம் கின்ற கிறமுதற் பல்வகை
விகுதிகள் மேலோர் விதித்த வாறே
உலகர்வாய் மொழியினும் சார்தரல் உளவே. 61

கின்ற, கிற முதலியவற்றை விகுதியெனல் கருதத் தக்கது.

அம்மா அந்தோ மாதோ கொல் ஆல்
ஐ இல் இன் ஏ ஓ அன்(று) அரோ எனப்
பன்மொழி ஈற்றினும் இடையினும் வரும் இவை
அசைக ளாமென் றறைந்திடல் முறையே. 62

அசைகளிற் சிற்சில மொழிகளின் ஈற்றுற்(று)
ஒவ்வோர் விதப்பொருள் உணர்த்தலுண்(டு) அவற்றை
வேற்றுமை யினமென விளம்புநர் சிலரே. 63

சிற்சில விகுதிகள் சாரியை யென்றும்
ஐ ஔ இரண்டையும் இபங்குமாறு ஈரு
பொறிகளா வரைதரல் போலி யென்றும்
கேட்டமட் டறிவார் கிளத்தலுண்(டு) அவற்றிற்கு

இன்னுமோர் வகைப்பெயர் இடினும் என் எனும்
உரத்தினர் எம்உயிர்க்கு உறுதுணை யாமே. 64

ஈரிரு பொறிகளா வரைதல்—அய், அவ் என வரைதல். உரத்தினர்—மனத்திட்பம் உடையவர். இங்ஙனம் பெயர் வேறுபாடுகளையும், வடிவ வேறுபாடுகளையும் மிகுதிப் படுத்திக்கொண்டு நூல் செய்தல் இவ்வாசிரியருக்கு உடம்பாடன்று என்பதாம்.

உவமச் சொல்

ஒத்தல் உறழ்தல் கடுத்தல் போலல்
நிகரல் புரைதல் நேரல் மானல்
அன்னவை உவமைச் சார்பென லாமே. 65

மங்கலச் சொல்

மகிதலம் புகழ்மொழி அனைத்தும் மங்கலச்
சார்பே நூல்முகந் தனிலுறத் தகுமெனில்
தமிழின்வித் தனையவர் தணவா ரன்றே. 66

நூல் முகப்பிற் கூறப்பெறும் சொல் மங்கலமாயிருத்தல் வேண்டுமென்று பொதுப்படக் கூறினர். விளக்கம் அடுத்தோதுவது காண்க.

மங்கலச் சொல்லின் எழுத்துமூன் றுஐந்துஏழ்
ஆகியும் ஈறு திரியாதும் அவிர்தரல்
இனிதே பிறழினும் எள்ளார் புலவோர். 67

பூ, மலர், உலகு, திரு என்பன போல சொல் ஈறு திரியாமலிருப்பது சிறப்பு. 'உலகெலாம்' என்றசொல் இறைவன் அருள் வாக்கு. உலகு எல்லாம் என்று இருப்பது மரபன்று. திரிதலாற் புலவர் தவறு கூறார்கள் தெய்வமொழியாதல் பற்றி. புலவர்-அறிவின் மேம்பட்டவராவர் என்க. அஃதற்றவர் பு(ல்)லவராம். வழுவமைதியாக் கொள்ளல் வேண்டும்.

அடல்மிகு மடங்கல் அன்னசீர்ப் புலவர்
வைத்தசொல் அனைத்தும் மங்கலமாமே. 68

மடங்கல்—சிங்கம். அது யானையை அடக்குவது. யானை மத முள்ளது. புலமைச் செருக்கினரை அருளால் அடக்கியாள்பவர் என்பது பற்றிச் சிங்கமொப்பார் என்றனர்.

நூற்பெயர் முதல்மொழி பாட்டுடைத் தலைவன்
குலம் பெயர் நாள்கோள் ஆதிய குறிக்கும்
பொருத்தம் சொற்சுவை புகுதாச் செவிக்கும்
மழையெனப் பொழியா வாய்க்கும் வேண்டும்
ஆயினும் அவற்றுட் சீரிய தாய
ஒருவிதம் உரைக்குதும் உலகின் பொருட்டே. 69

பொருத்தம் பாட்டியல் நூல்களுள் உணர்த்தப்படுவது காண்க. திருவருளால் புலமை பெற்றவர்க்கு இவ்வகைக் கட்டுப்பாடுகள் பயனற்றன என்பது கருத்து.

எவ்வகை எழுத்தும் அம்முதல் ஒவ்வரை
ஆகும் ஐந்தெழுத்துள் அடங்குதல் தேறி
ஆதிஅந் தம்புணர் விதம் அறிந் து(அ)வான்
பெயர்முத லெழுத்தே நூல்முத லென்னில்
வாலை மற்றைய நான்கும் நிரை நெறிக்
குமாரமும் அரசும் விருத்தமும் மரணமும்
இவற்றுள் மூன் றுயர்வுமற் றிரண்டும்தாழ்வெனக்கண்டு
இயல்பறிந் தெடுக்கை இஃதும் உணர்கால்
சொற்சார் பாதலின் சொற்றதிது வயினே. 70

மூன்று உயர்வு - வாலை, குமாரம், அரசு. இரண்டு தாழ்வு - விருத்தம், மரணம். இச் சூத்திரப் பொருளைப்

''பாலனே குமரன்மன்னன் படுமுதிர் கிழவன் சாவு
கோ லுந்தன் பேர் எழுத்துக் குறித்தது முதலாக்கொள்கை
ஏலும் முன்னெழுத்து மூன்றும் இன்பம்
பின்னிரண்டுந் தீதாம்
சாலும் மூவகைச்சீர் தானே சாற்றிய
கவிதைக் கின்பம்''

என்னும் சூடாமணி (பன்னிரண்டாவது - 31) நிகண்டால் அறிக.

செய்யுட் களின்நிலை தெரித்தற் பொருட்டு
நேர்நிரை யெனுமிரு பகுதியின் சார்புச்
சொல்லுள தண்டமிழ்த் தொன்மை வாய்பாடு
அவற்றையும் பகருதும் அறிந்த வாறே. 71

குறில்நெடில் தனித்தும்மெய் ஒன்றிரண் டிணைந்தும்
குஎனக் கூஎனக் கல்எனக் கார்என
நெய்த்து வாழ்ந் துஎனுமிரு மொழிகளின் ஈற்றெழுத்து
அகன்று லெனவரும் அறுவகை நேரே. 72

நேரசைகளின் விபரம்

| | | |
|---|---|---|
| கு | — | குறில் தனித்த நேர் |
| கூ | — | நெடில் தனித்த நேர் |
| கல் | — | குறிலுடன் ஒற்றடுத்த நேர் |
| கார் | — | நெடிலுடன் ஒற்றடுத்த நேர் |
| நெய்த் | — | குறிலுடன் ஒற்றிணைந்த நேர் |
| வாழ்ந் | — | நெடிலுடன் ஒற்றிணைந்த நேர் |

குற்றெழுத் திணைந்தும் குறில்நெடில் புணர்ந்தும்
இவற்றொ டொற்(று) ஒன்றிரண் டிணைந்தும் கரிஎனச்
சிவாஎனக் குகனெனக் கவானென நிகழ்ந்து
விடாய்க்கெனும் இருசொற் கடையெழுத் தொழிந்தால்
என இரு மூன்று விதநிரை வரும்இவை
அன்றியும் ஒருவா(று) அறைகுதும் அடுத்தே. 73

கரி—குறிலிணைந்த நிரை
சிவா—குறில் நெடில் புணர்ந்த நிரை
குகன்—குறிலிணைந்து ஒற்றடுத்த நிரை
கவான்—குறில் நெடில் புணர்ந்து ஒற்றடுத்த நிரை
நிகழ்ந்—குறிலிணைந்து ஒற்றிணைந்த நிரை
விடாய்க்—குறில் நெடில் புணர்ந்து ஒற்றிணைந்த நிரை

நேரசையைக் குறிக்கும் பொழுது, ஒரு ஒற்றுள்ள சொல்லில் ஒற்றடுத்த என்றும் இரண்டு ஒற்றுள்ள சொல்லில் ஒற்றிணைந்த என்றும் குறிப்பிட்டார்.

நிரையசையைக் கூறும்போது, குறில் இரண்டுள்ள சொல்லை குறில் இணைந்த என்றும் ஒற்றிரண்டுள்ள இடத்தில் ஒற்றிணைந்த என்றும் குறிலும் நெடிலும் உள்ள சொல்லைக் குறில் நெடில் புணர்ந்த என்றும் கூறினர். ஓரினமான குறில்கள் ஒற்றுக்கள் இணைதலாம், குறில் நெடில் சேர்ந்ததைப் புணர்ந்த என்பது குறில் பெண் நெடில் ஆண் என்ற முறை பற்றியென்க.

இதுபோல் நேரசையிலும் ஈற்றுச் சொற்களிரண்டில் இரண்டு ஒற்றுக்கள் உள்ள இடத்தில் இணைந்து என்றும், ஒற்று ஒன்றுள்ளதை அடுத்து என்றும் கூறியதறிக.

செய்கை தன்மம் கல்வி தன்மை
பொன்வில் எனுமிவை போன்றநேர் நேரும்
நிற்கு மிடத்தால் நிறையெனப் படுமே. 74

கூறல் கண்டும். நான்கு அசையுள்ள ஒரு சீர். தேமாந்தண்டு இதை மூன்றசையாக்கி, நேர் நிரை நேர்—கூவிளங்காய் என்றபடி கொள்ளவேண்டிய முறை வரும். லகர ஒற்றைப் போலியாகக் கொண்டு, பொருள் காணவேண்டும். 'திற்குமிடத்தால்' என்றது காண்க.

தமிழறியும் பெருமாள் என்ற பெண்பாற் புலவர் இப்புலவரை வென்று வாழ்ந்தவள். விறகுத் தலையன் ஒருவன், நக்கீரர் அருளாற் பெரும் புலவனானபின், அவருடன் சென்ற புலமைச் சீடனிடம் ஐயம் கேட்டறிக என்றனர் நச்சீரர். அவள் வெண்பாவில் வியப்பு யாதென வினவினள். சீர் நான்கசையை மூன்றுக் கொள்வதென்றலும், நாணினன். பின் இருவரையும் வாழ்க்கையில் ஒன்று படுத்தினரென்பதைப் புலவர் புராணத்தில் விவரித்துள்ளனர். ஆசிரியர் நக்கீரர் சருக்கம் காண்க.

நேர் நாள் நிரைமலர் இவைகள் ஓரசைச்
சொற்க ளாமெனத் துணிந்தனர் புலவோர். 75

வெண்பாவின் ஈற்றடி மூன்றுஞ் சீராக வருவது இதணை வாய்பாடு என்பது மரபு 17 ல் மேலும் வரும்.

இவை தளைகள்

இணைநேர் தேமா இணைநிரை கருவிளம்
முன்னேர் பின்னிரை கூவிளம் முன்னிரை
பின்னேர் புளிமா ஆம்இவை நான்கும்
ஈரசைச் சொற்கள்என் றியம்பிடல் இயல்பே. 76

தேமா புளிமா இரண்டும்ஓ ரிடத்தே
காசு பிறப்பெனக் கழறநிற் பனவே. 77

ஓரிடம் வெண்பாவின் இறுதிச்சீர் குற்றியலுகரமாயும் சிறுபான்மை முற்றியலுகரமாயும் முடியுமிடம் நேர் நாள் எனவும் நிரை

மலர் எனவும் முடிதல்போல நேர் நேர்—காசு; நிரை நேர்—பிறப்பு என முடியும். இது வாய்பாடென்க,

இச்சொற் போல, வல்லுகர ஈருக அமைதல் சிறப்பென்பது குறிப்பு. சு, பு, கு, து, டு, று என்பன வல்லுகரம்.

ஈரசைச் சொல்லுடன் நேருறிற் காயென
நிரையுறிற் கனியென நிகழ்த்தலுண் டவற்றை
முச்சீர்ச் சொற்க ளாமெனல் முறையே. 78

நேர் நேர் நேர் — தேமாங்காய்
நேர் நிரை நேர் — கூவிளங்காய்
நிரை நிரை நேர் — கருவிளங்காய்
நிரை நேர் நேர் — புளி மாங்காய்
நேர் நிரை நிரை — கூவிளங்கனி

பிறவும் இது போலாம். வெண்பாவிற் கனிச்சீர் கூடாது. ''மையல்வலை'' தேமாங்கனி யென்பது தவறு. இதை, மை, யல்வ, லை—கூவிளங்காய் எனக் கோடல் வேண்டும் ய, வ என்ருற் போலக்கொண்டு லகர ஒற்றைப் போலி என ஒதுக்குவர்—இது இன்றியமையா இடங்களிலமையும்.

இணையசைச் சொல்லே ஒன்ருேடொன் றிணைந்து
நாலசை யாதலுண்(டு) அம்முறை ஆம்கால்
முன்மொழி யியல்பிற் பிறழா தொழிந்த
பின்வரும் நேர்நேர் தண்பூ நிரைநிரை
நறுநிழல் நேர்நிரை தண்ணிழல் நிரைநேர்
நறும்பூ வாமெனத் திரிதரு மன்றே. 79

நேர் நேர்—தேமா. இவற்றுடன் நேர் நேர் வரின் தண்பூ எனவும், நிரை நிரை வரின் நறுநிழல் எனவும், நேர் நிரை வரின், தண்நிழல் எனவும் நிரை நேர் வரின் நறும்பூ எனவும் வருமென்பதாம். இவ்வாறே புளிமா—கருவிளம்—கூவிளம் என்பவற்ருேடும் கொள்க.

ஓரசை யீரசை வெவ்வே றிருந்து
மூன்றசை தோன்றிய முறைப்படி நான்கசைச்
சொல்லொடோ ரசைவந்து தோன்றலுண்(டு) அதுநேர்

ஆயிற் பூஞ்சீர் நிழற்சீர் என்றும்
நிரையெனிற் பூநலம் நிழல்நலம் என்றும்
கொள்ளுமா றுணர்வோன் கோடியிலொருவனே. 80

இவற்றைத் தளையென் றியம்பலும் பழமை
யாப்பிலக் கணத்திற் றிரிவியங் குறுமே. 81

தளையென்னும் பிரிவு யாப்பிலக்கணத்துள் விளங்கும் என்றவாறு.

ஆறசை யாதிய நாடகப் பகுதி
இசையொடு கூடி அளவின்றிப் பிறழும்
அவற்றிற் கும்தளை அறையுமா றுணரில்
பன்றி முகத்திற் படாமணி ந் தற்றே. 82

படாம்—யானைக் கணிவதான முகபடாம். பொற்பணியானது.

அயல்படு கலையுடைக் கணங்களைத் தழீஇ
இம்மொழி வழிசிலர் இயம்பலுண் டவற்றைத்
தணவலே நலமாம் வேண்டினும் அவ்வத்
தெய்வப் பெயர்நிலைத் தளைகொளல் சிறப்பே. 83

தணவல்—விலக்குதல்.

கின்னமென் றருண கிரிப்பெயர் முனியும்
அமுதமெனக் கம்பனும் செப்பிய முறையில்
புதுமொழி சாரப் புகல்வார் புகலினும்
தமிழுணர் பெரியோர் தழுவுத லியல்பே. 84

நினைவார், கின்னங்களையும் கிருபை சூழ்சுடரே.

—கந்தரநுபூதி

தமிழ்ச் சொற்கள் பல வழங்கப்பெருமல், பரவெளியில் நாத மாத்திரையாய் ஒத்துக்கொண்டுள்ளன. இவற்றைக்கண்டு பயன் படுத்துவது அருட்புலவர்க்காகும். எடுத்துக் காட்டுதலை அருணகிரியார், கம்பர் பாடியதைக் கூறினர். "மதகயம் போல் - செல்லும் புலவர் பலர் செப்பிடினும் தீராத சொல்லும் பொருளும் துணை." என்பர் ஆசிரியர். வேறு ஒரு நூலில் மதகய மென்று கூறியது, ஆட்டைப்போல ஒருவர் கூறியதைப் பின்பற்றிக் கூருமல் சுதந்தரமாகப் பாடும் பெரும்புலவர்களைக் கூறியதாகும்.

சார்பெலா மொழியத் தகுமோ ஆதலின்
இம்மட் டடக்கி இனித்திரி வியல்பும்
தெரிந்த வாறு செப்புதும் சிறிதே. 85

''தெரிந்தவாறு'' என்பது அடக்கப்பண்புடன் கூறுதலவு மிருக்கக் கூடுமென்ற கருத்தையும் உட்கொண்டது திருவருள் உள்ளிருந்து அறிவித்ததையே கூறுவதியல்பு. அறியா ஒன்றை அறியேனென்று கூசாது கூறுவது இவரியல்பு. அதனால் வரும் புகழ், இகழ் இவற்றைத்தான் ஏற்பதில்லை. ''நானறியேனென்பதற்கும் நாணிடேனே'' என்பர்.

சார்பியல்பு முற்றிற்று.

## 4. திரிபியல்பு

முன்வரு மியல்பில் மொழிந்துகாட் டியவா
மருமகன் மருகன் ஆகிய பகுதியும்
துளவே துழாயெனத் துலங்குமோர் பகுதியும்
திரிபெனில் தகுமே ஆயினும் சிலர்தாம்
மரூஉச் சொல்லென்றும் வாய்பாடென்றும்
இயம்பலுண் டுணர்வார்க்கு இஃதுமோர் திரிபே. 86

துளவு, துழாய் - துளசியின் பெயர்

வாழ்நனை வாணன் என்பது பற்றி
வாய்பா டில்லா வழிக்கொடு திரித்துச்
சொல்வது பிழையெனத் துணிவுறத் தகுமே. 87

ஆலுடைக் கடவுளை ஆலன் றறைதலும்
முருகு நீங்கா முழுதுணர் புலவனை
முருகெனப் பகர்தலும் மொய்குழல் வனிதையை
மொய்குழல் என்றலும் அன்னவை பிறவும்
அன்மொழி யென்பார் அளவிலார் அவைகட்
பின்மொழி முன்மொழி விளக்கும் பெட்பால்
இவ்விரு மொழிச்சார் பெனத்திரித்து இடமறிந்து
ஒன்றொன் றேயே உரைப்பதெம் இசைவே. 88

கப்பணம் உம்மணி ஒருபணம் இருமணி
ஆதல் போற் றிரிவன ஆகு பெயரே. 89

க — இது ஒன்று என்னும் எண்;
உ — இது இரண்டு என்னும் எண்;
க பணம்=ஒரு பணம்; உமணி—இருமணி

ஒரு பொருட் பெயரே உரையா துரைக்கில்
குணத்தாற் றிகழ்தரக் கூறல்வேண்டும்
யானையை மதமலை யென்றிடல் உதாரணம்
பெயர்த்திரி பென்றிதைப் பேசப் படுமே. 90

வருவித் துரைசெயும் மாற்றம் கூறில்
எளிதிற் றெளியுமா றிசைக்க வேண்டும்
கூலிதந் தானிலை யெனுஞ்சொற் கூறுநர்
வேலைசெய் தமையை விளக்கு முறையே. 91

தன்கருத் தல்லாப் பொருள்தரும் சொற்கள்
நன்றல உதாரணம் நவில்வார் பலரே. 92

ஒரு சொல் நால்வகைப் பொருள்தர உணர்ந்தே
முறையிற் கூறுதல் முதிர்தமிழ் வழக்கே. 93

ஐயன்—அழகன். ஐயனார் - தலைவன் (அரசன்)கடவுள்.

கமலையை மலையெனக் கமஎனப்
பகர்தலை நடுக்கடைக் குறைப்பதம் போலும்
பொருத்தினும் நிரைபதம் புகன்றிடல் தகுமே. 94

கமலை - திருமகள். மலையெனில் தலைக்குறை. கலை என்றால் இடைக் குறை. கம - என்றிடல் கடைக்குறை என்பதாம்.

ஒருவன் சொல்லொடு கருத்துமற் றொருவன(து)
ஆதலும் திருடலும் ஆமிவை யிரண்டும்
அவர்திறங் கருதி அறிதல் மிக் கெளிதே. 95

ஒருவர் கூறிய சொல்லும் பொருளும் இயல்பாய் மற்றொருவன் பாட்டில் அமையும் ஆனால், தன்னதாக எண்ணும்படி கூறுதல் களவு. ஒள்ளியவுணர்வான் ஓர்ந்தோர்ந்து உரைத்த கற்பனைகள் மற்றோர் திண்மைசால் புலவன் பாட்டில் திகழ்தல் உண்டென்பர்

ஆசிரியர். தான்முன்னோர் பாட்டைக் களவு பற்றிக்கூறல் தவறாகும். திறம் - தகுதி.

எவ்விதச் சொற்களும் தளையும் சந்தமும்
ஆகித் திரிதரல் அருந்தமிழ்க் கியல்பே. 96

இவ்விதத் திரிபெலாம் இயம்பிற் பெருகும்
ஆதலிற் சற்றுவே றறைகுதும் அன்றே. 97

சொல்லீற்றைத் திரித்தும் தான்திரிந்தும் ஒன்றும்
அன்இன் இரண்டும் உடைமையைக் காட்டும்
அதன் பொருள் பசுவின் கன்றெனல் உதாரணம். 98

அது + அன் + பொருள்—அதனுடைய பொருள்.
பசு + இன் + கன்று—பசுவினுடைய கன்று என அன்னும் இன்னும் உடைமையை உணர்த்தி வந்தன.

ஆன் அன் ஒன் எனும் மூன்றும் ஆண்பால்
உடைமை காட்டும் மயிலான் முருகன்
சேவ லோன்எனச் செப்பிடல் உதாரணம். 99

மயில் ஆன்—மயிலான். முருகுஅன்—முருகன். சேவல்ஒன்—சேவலோன் என்பதாம்.

மொழியீற்(று) ஐவரில் செய்மா றுணர்த்தும்
குரவனை வணங்கெனல் குலவுதா ரணமே 100

குரவன்ஐ—குரவனை என்றவாறு.

அஃறிணைப் பன்மைச் சுட்டோடு அன்இன்
ஐமுதற் பிறவரில் அவற்றென விளைவரல்
வாய்பாடு (உ)தாரணம் அவற்றன் இவற்றின்
எவற்றை யெனல்போன் றிசைப்பார் புலவோர். 101

இல்லெனல் உடைமையை உவமையை உயர்ச்சி
தாழ்ச்சியை வினையைக் காட்டத் தகும்குறி
மதியில் மறுவெனல் பாலில்வெண் பொடியெனல்

அதில்நலம் இதில்இழி வென்றிடல் அவையிற்
பேசல் எனலிவை பிறங்குதா ரணமே. 102

மதியில்மறு—உடைமை; பாலில் வெண்பொடி—உவமை; அதில் நலம்—உயர்ச்சி; இதில் இழிவு—தாழ்ச்சி; அவையிற்—பேசல்—வினை.

இல்லே இன்என விளங்கல்உண் டுதாரணம்.
வேட்டலின் என்றதோர் மெய்ம்மொழி யாமே. 103

வேட்டலில்—வேட்டலின்.

உம்மெனல் ஒன்ருே டொன்றைக் கூட்டவும்
உயர்ச்சி தாழ்ச்சியை உணர்த்தவும் பின்னேக்
கால வினையைக் காட்டவும் தோன்றும்
உதாரணம் வேலு மயிலும் என்கையும்
தெய்வமும் பொய்யோ நானுமுய் வேனே
என்பவும் இரங்கும் என்றலும் ஆமே. 104

பின்னேக் காலம்—எதிர்காலம்.

வேலும் மயிலும் கூட்டல், தெய்வமும் பொய்யோ உயர்ச்சி. நானும் உய்வேனே—தாழ்ச்சி இரங்கும்.

ஏன்ஏம் ஓம்ஆம் என்பவை தன்தம்
வினைக்குறி யாகுப உதாரணம் விளம்பின்
மறவேன் சென்றேம் வந்தோம் நின்ரும்
என்னும்நான் மொழியும் ஆமென வியல்பே. 105

மறஏன்—மறவேன்; சென்றுஏம்—சென்றேம்; வந்துஓம்—வந்தோம்; நின்றுஆம்—நின்ரும்.

ஆள்அள் இரண்டும் ஆன்அன் ஆண்பாற்(கு)
உறுதலிற் பெண்பா லுடனுறும் அன்றே. 106

(எ - டு) வந்தாள்—வந்தனள் இவை பெண்பால்.
வந்தான்—வந்தனன் இவை ஆண்பால்.

குகரந் தனித்தும் உகரமுற் கொண்டும்
ஒருமொழி யீறு திரியத் திரியா(து)
ஒற்று மிகுத்தும் அதனேடு அத்தெனும்

சொல்லிடை தோன்றியும் துலங்கப் புணரின்
மற்றும் ஓர்மொழி வருமாறு செய்யும்
அவற்கு நலம்எனல் ஆவுக்கு நீரெனல்
எதுக்குச் சரியெனல் வீரத் துக்குவேல்
எனல்உதா ரணமாம் இனிதுணர் வார்க்கே. 107

அவற்கு நலம்—'கு' தனித்து வந்தது.

ஆவுக்குநீர்—குகரம் உகரம் முற்கொண்டு வந்தது. இவை நிலைமொழி ஈற்றைத் திரித்துப் புணர்ந்தன. எதுக்குச் சரி—'கு' ஒற்று மிகுத்துக் கூடியது. வீரத்துக்கு வேல்—'கு' அத்துப் பெற்றுப் புணர்ந்தது.

னளமெய் யீற்றுடைச் சொல்லொடு வல்லினத்(து)
உயிர்மெய் முதலுடை வினைமொழி யிசைவுறீஇ
றடமெய் யாம் காலையெனக் கொளல்முறை
முருகற் பணிதலும் கலைமகட் கருதலும்
உதாரணம் வேந்தர்ச் சேர்தர லென்னல்
போல்வன் பன்மைக் காப்பொருள் விளக்கும்
மொழிகளென் றுரைப்பார் முத்தமிழ்ப் புலவோர். 108

காலை—காலத்தில்; முருகன் பணிதல்—முருகனைப் பணிதல் எனவும்; கலைமகள் கருதல்—கலைமகட் கருதல் எனவும் வருதலாம்.

ஒருபொரு ளுடனதன் உடைமையைப் பொருத்தில்
இன்னெனு மொழியிடை தோன்று திசைவுறும்
உமைமகன் எனுஞ்சொல் உதாரண மாமே. 109

உமை மகன்—உமையின் மகன் எனல்.

குரு அருள்—குருவின் அருள் போல்வன.

உமை-குரு-என்பதன் உடைமை-பொருள் மகன் என்பன.

ஆலெனல் ஆதலின் எனும்பொருள் ஆதலும்
மேலெனல் என்றால் என்னத் திரிதலும்
சொல்எனல் ஐயக் குறியும் ஆதலும்
தேடுபு என்கை தேடியென் றொளிர்தலும்
இனத்தாற் பன்மையில் ஒருமைவந் தெய்தலும்

அன்னசொற் றிரிவெலாம் அருந்தமிழ்ப் புலவோர்
மரபாற் றேறிடல் வழக்கெனத் தகுமே. 110

வருவான் சொல்—ஐயக்குறி
நாடுபு—நாடி என்றல் போல்வன

தல்லார் அல்லர் பாக்கு முதலிய
விகுதியின் நிலையெலாம் வெள்ளியங் கிரிநிகர்
பொதிய மால்வரைப் பூம்பொழிற் றென்றற்
பரவுவார் மனத்தோர் பாற்கிடப் பனவே 111

வெள்ளியங்கிரி—கயிலைமலை.

உலக மெங்கணும் நிகழ்ஒலி உருவாய்ச்
சொற்களை யிவ்வணம் சுருக்கிச் சொற்று
வேறிலக் கணஞ்சொல விரும்புகின் றனமே. 112

திரிபியல்பு முற்றிற்று

சொல்லிலக்கணச் சூத்திரம் 112

மூன்றாவது

# பொருளிலக்கணம்

தெருளிலக் கணமுணர் சிறுமுனி வழிபட
அருளிலக் கணம்பகர் அறுமுகத் தொருவனை
மருளிலக் கணமற வழுத்து மாண்பாற்
பொருளிலக் கணமும் புகலுதும் சிறிதேத். 1

அகப்பொருள் புறப்பொருள் அகப்புறப் பொருளென
முப்பொருள் கூறுதும் முறைப்படி உணர்ந்தே. 2

அகப்பொரு ளிலக்கணம் அம்பிகை பாகனும்
நந்தியம் பகவனும் நறைகமழ் மலர்உதிர்
பொழில்மலி தமிழ்வரைப் புனிதமா தவனும்
சீரிய புலமைத் திருவள் ளுவன்முதற்

பலரும் கூறிடற் பார்மிசைக் கேட்டும் 3
நாணுரு திவ்வயின் நவிலலுற் றனமே.

பூவில் மணமெனப் புனிதத் தமிழினுக்கு
ஆவி யாகும் அகப்பொரு ளியல்பே. 4

இயற்கையில் மனத்தினுக்கின்ப மேயினிது
ஆதலின் அகப்பொருள் அஃதெனல் இசைவதுள்
உறுப்பியல் பதனைமுன் உரைக்குதும் சிறிதே. 5

## 2. உறுப்பியல்பு

கரியவார் குழலிற் கட்டலும் அவிழ்த்தலும்
பின்னலும் பிரித்தலும் பிறைமுதற் பணிகளும்
மலரொடு வண்டும் வந்துவந் தகல்வன
வழுதிகண்டு அரன்நுவல் மணமக ளாதுற்(று)
அரியபொற் பாவை யணிக்கணி யாமே 6

அருமகள் நெற்றியில் அம்பொற் சுட்டியும்
பட்டமும் திலகம் ஆதியும் பனித்துளி
அன்ன வேர்வையும் அகன்றுவந் தொன்றுப
அகலமும் கவிழ்பிறை அன்ன தோற்றமும்
இயல்பின வாகி யியங்குறு மன்றே 7

பருவ மடவரல் அன்ன பாங்கினள்
புருவத் துணையிற் போர்மதன் கருப்புச்
சிலைபொரு தோற்றம் சிறிதும் ஓவா
குனிப்புறழ் செயலது குலவி மறையுமே. 8

நேரிழை கண்களின் நீட்சியும் கருமையும்
மருட்சியும் அகலமும் வரிச்சீரும் இயற்கை
கடைபடு செம்மையும் கடுவோ(டு) அமிழ்தும்
மதிக்கனற் சூட்டால் வரும்நீரும் மாறுமே. 9

நல்லாள் நாசியில் நாண்மலர் துத்தி
போலும் பணிவரும் போகும்எட் புதுப்பூ
அனைய தன்மை அசையா தொளிருமே.

அணியிழை செந்நிறத்(து) ஆம்பல் மலர்வாய்க்கு
இதழ்ச்சுவை சொல்லிசை வெண்ணகை நிரைநயம்
இயற்கை ஊடலில் இகழ்ந்தழல் ஏனைய. 11

புனையிழைப் பசுங்கிளி போலும் அங்கனை
கவுட் (கு) ஒளி யியற்கை கமழ்ச்சியும் குறியும்
மஞ்சளொடு கணவன் வருவிப் பனவே. 12

சேயிழைப் பூங்கொடி செவிக்குத் தலைவன்
திறல்கேட் டுவைகையைச் சிந்தையிற் பொருத்தல்
இயற்கை வளர்ச்சிஒன் றியற்கைநேர் செயற்கை
ஆடலும் மாறலும் செயற்கை யாமே 13

கவின்றிகழ் அகல்முகக் கன்னி கமுகுறழ்
மிடற் றெழும் மென்குரல் இயற்கைவே றெல்லாம்
செயற்கை யாமெனச் செப்பிட லியல்பே 14

கொன்று (உ)யிர் தரும்விழிக் கோதை முலைக்குக்
குளிர்ச்சியும் வெப்பமும் குன்றெனப் பொதுமி
இடமறிந் தடும்போர் இயற்றலும் இயற்கை;
பூணும களபமும் பொறித்த சித் திரங்களும்
செயற்கை யாமெனத் தெளிவ்து முறையே. 15

மென்மையும் வேய்முளை போலும் விளக்கமும்
இயற்கை யாதலில் தொய்யில்மற்று ஏனை
சுரிகுழற் காரிதன் சுந்தரத் தோட்கே. 16

மலர் தலும் குவிதலும் செம்மையும் மயிலனுள்
அங்கைக் குணமே அணிவளை அம்மனை
கழங்கிவை ஒவ்வொரு காலத் துறுபவே. 17

தொய்வே நல்லாள் வயிற்றின் சுயகுணம்
கருப்பம் தங்கிய காலத்து விம்முமே. 18

சேர்வான் மகிழ்வுறும் இயற்கைத் தேய்வும்
அலமரற் கண்டுறும் ஆடைச் சேர்க்கையும்
இழங்கிழைப் பூவைதன் இடையிடத் துளவே. 19

கணவற் காண்டொறும் மதப்புனல் கசிதலும்
அவனகத் தவிர்ந்துதன் அகத்தைக் கோடலும்
இயற்கைக் குணமாம்; புணர்ச்சியும் எழில்மகப்
பேறும் மற் றுளதொரு பெட்பாம் பிறங்கிழைக்
காரிகை உயிரெனக் காக்குங் கடிதடத்
தேரினுக் கெனமிகச் செப்பினர் தெளிந்தோர். 20

அன்னமென் நடையே அகற்றரு மியற்கை
சிலம்பொலி யாதிய சேர்க்கைச் செயலாம்
பழிக்கரும் கற்புடைப் பாவைய ரடிக்கே. 21

உந்தியும் உரோமத் தொழுங்கும் கவானும்
பிறவுங் கொளும் இரு பெட்பின் பகுதியைப்
பைந்தொடிக் கரத்தினர் பண்புநன் குணர்ந்த
செந்தமிழ்ப் புலவராற் றெரிவது முறையே.

உறுப்பியல் (பு) இவ்வா றுரைத்தனம் இனிஅவர்
குறிப்பியல் பதனையும் கூறுதும் கூர்ந்தே. 23

உறுப்பியல்பு முற்றிற்று

## 2 குறிப்பியல்பு

### பேதை

சிற்றிலிற் சிறுரொடு சிறுமணம் பயில்ஏழு
ஆண்டுடைப் பேதை அகத்து மணிமலர்
உரிஞ்சலுண் டுடைதழீஇச் சிறிதுநா ணுறுமே. 4

### பெதும்பை

ஒன்ப தாண்டுடைப் பெதும்பைதன் உளத்தில்
காமன் முதற்கணைக் கதுமைசற் றழுந்தும்
தூதளம் பசுங்காய்த் தூணையென முலையெழும்
கழங்கொடு செவ்வரிக் கருங்கண் பிறழ்தரும்
முச்சிலில் மணற்கொடு முன்றில்வாய் கொழியா(து)
அச்சமும் மடமும் நாணமும் அணையுமே.

### மங்கை

பன்னிரண் டாண்டுடை மங்கைபந் தடிக்கும்
ஒத்தபாங் கியரோ (டு) ஊச லாடும்
நீர்த்தடங் குளிக்கும் நினைத்துநெட் டுயிர்க்கும்
எழில்நலம் பொலிதரும் இணைமுலை காக்கும்
காமவே ளனையான் கலவிக் கிசையுமே. 26

### மடந்தை, அரிவை, தெரிவை

ஈரெட் (டு) ஒருபதிற் றெரன்பது இருபன்
நான்கெனும் வயதுடை நல்லா ராய
மடந்தையும் அரிவையும் தெரிவையும் மாரன்

கலையால் மெலிதலும் கலவியிற் களித்தலும்
கண்வாள் கொடுபல காளையர்க் கோறலும்
பகலைப் பழித்தலும் பைம்பொற் சுணங் (கு) ஆர்
முலைகள் ஆடவர் மொய்ம்பினும் உயர்வெனக்
கருதலும் மதப்புனல் கடலெனப் பெருக்கலும்
ஆதிய நலமெலாம் அளப்பதற் கரியவே. 27

## பேரிளம் பெண்

பேசலும் கலவியிற் பிணங்கா இயற்கையும்
பாலுடைச் சரிமுலைப் பசுநரம் பவிர்ச்சியும்
ஆடலில் வெறுப்பும் அனையன பிறவும்
பேரிளம் பெண்ணின் பெட்பெனத் தகுமே. 28

பார்வையிற் பரிவிற் பழகலிற் பகர்ச்சியில்,
செயலிற் சேயிழை சிந்தையிற் கிடக்கும்
மோகம் கமழ்வது முறையெனத் தகுமே. 29

தலைவன் மாலுடைத் தையல்ஊண் வெறுக்கும்;
மதிக்குடைச் செல்வனை வையும்;நெட் டுயிர்க்கும்;
தென்றலுக் கஞ்சும்; சேடியைப் பகைக்கும்;
அன்னையைத் தினந்தொறும் அழஅழப் படுத்தும்;
கனவினிற் களித்துக் கண்விழித் தயரும்;
வளைகலன் கலைமலர் ஆதிய மறக்கும்;
அன்ன தன்மை யளவிலா துறுமே. 30

மாலைகண் டுவப்பதும் மருப்புனல் ஆடலும்
சேலையும் பணிகளும் திலகமொடு மையும்
திருத்தலும் தூரியச் செங்கைச் சேடியர்
எழுத்தினுக் கிசைவதும் இனையன பிறவும்
காளைதோட் புணரும் கருத்தினள் குறிப்பே. 31

பழகிய கொழுநர்தாம் பற்றிய போழ்தினும்
காமங் கசிதரக் கடிதடங் களித்து
வாணுதல் வெயர்வையும் வாயிதழ் உலர்ச்சியும்
கருத்தைக் காட்டினும் கடுகள வேனும்
பயிற்பொடு கோடுதல் பாவையர்க் கழகே. 32

அன்னமென் றிருப்பார் அமளியங் கலவி
தன்னிடை செயுந்தொழில் சாற்றரும் பாற்றும்
கொண்கர்தம் உள்ளக் குறிப்பு மாமே. 33

கண்களின் சோர்வும் கவுளொடு கனியிதழ்க்
குறிகளும் பகற்றுயில் கொள்கையும் பிறவும்
இனியவன் றன்னுடன் இரவெலா மதப்புனல்
சிந்திச் சிந்திச் சேர்ந்துளாட் கியல்பே. 34

குறிப்பியல்(பு) இவ்வணம் குறுக்கிக் கூறினம்
பழமை யியல்பினைப் பகருதும் சிறிதே. 35

குறிப்பியல்பு முற்றிற்று

## பழமை யியல்பு

அவனவள் இசைதலும் அனுப்புந் தூதால்
இசைதலும் பழமையென் றிசைத்தனர் புலவோர். 36

ஆண் பெண் எனும்உரு அமைந்தவர் தனித்தனி
தாம்விழைந் தளவற முயன்றும் கூடா(து)
உடலுயி ரிழந் தீண் டொழிந்தனர் பலரே. 37

கண்களால் இசையாக் காரிகை கரத்தால்
இணங்காள் என்றமை இயம்புமிவ் வுலகே. 38

ஏதொரு நிமித்தத் தேனும் எட்டுணை
உரிமையும் இல்லார் உடற்றழீஇ மகிழ்வார்
பதரினும் பதரெனப் பகர்வது முறையே. 39

மற்றொரு நல்லாள் வனப்பெடுத் துரைக்கில்
பொற்றொடிக் கரத்துப் பூவை யூடலும்
இயல்போ டுள்ளதென் றியம்பினர் பழையோர். 40

பொய்யினும் தீராப் புலவியின் மிகையால்
வைதெவன் செய்யினும் மடநல் லார்இரு
பாடகத் தாள்களிற்பாழியந் தடந்தோட்
காளைபோய்ப் பணிதலும கழிக்கரு மியல்பே. 41

தன்னுடைக் கேள்வனைத் தலைவியை விழைவார்ப்
பகைத்தலும் மாந்தர்தம் பண்பின் பழமையே. 42

பெண்மைக்(கு) அலகையும் பெரிதுளம் இரங்கிடல்
மும்மை யுலகமும் மொழிதரு மன்றே. 43

இளமையோ டெழில்நலம் ஏய்ந்தோர்க் காணின்
உற்று நோக்கி உளமிக உருகிடல்
பெண்மை ஆண்மையின் பெரும்பாற் குணமே. 44

தவமும் சமயமும் சாதியும் பொருளும்
அங்கசன் தொடுங்கணைக் காற்று தலமரும்
மயலாற் கழிவது மாநிலத் தியல்பே. 45

பிழையா தொழுகிய பெண்மகட் கெதிர்செலும்
முனிவரும் தெய்வமும் இலையெனல் முறையே. 46

எவ்விதச் சுருதியும் நெறிகளும் பிறவும்
இயங்குமா றவிர்தரும் இவ்வழிப் பழமை
முற்றும்ஓ தரிதால் முடித்தினி அடுத்துத்
துறையியல் பெடுத்துத் தொகுத்துரைக் குதுமே. 47

பழமை யியல்பு முற்றிற்று

## துறை யியல்பு

இன்ப வெள்ளத்(து) இசைவுறும் ஒவ்வோர்
நிகழ்ச்சியுந் துறைக ளாமெனல் நெறியே. 48

காண்டல், ஐயுறல், மெய் தொட்டுப் பயிறல்,
கலவி மகிழ்தல், கான்முளைப் பழித்தல்,
நாணிக்கண் புதைத்தல், நற்று யிரங்கல்,
தழைவியந் துரைத்தல் ஆதிய நானூ(று)
என்றே பற்பலர் இயம்பினர்; சிலர்தாம்
இம்மகள் இன்னார்க் காமென இசைதலும்;
காதலாற்றுழலும், காட்டி மயக்கலும்,
தலைவன் தேடலும், தன்னுரு மாற்றலும்
ஆதிய நவின்றனர் அன்றியும் ஒருவன்
பெண்மட லேறிய பெற்றிகூ றினனே. 49

தலைவனும் தலைவியும் தோழனும் தோழியும்
அன்னமும் கிளியும் அணிமலர்ப் பொதும்பரும்
கதிர்மதி முகில்வளி கடல்மலை பொருள்போர்
பார்த்தல் கவிழ்தல் ஆதிய பலவுங்
கருதிக் கூர்ப்புடைக் கவிஞர்வாய் திறக்கில்
திகழ்தரு துறைவகை செப்பிடற் கரிதே. 50

துறைத்தொகை ஒருவிதம் சொல்வார் சொல்லினும்
நூறுதொட் டாயிரம் வரைநுவன் றதன்பெயர்
வே(று)இடத் தகுமென விளம்பல் என்னிசை(வு)
உயர்த்தினும் தாழ்த்தினும் ஒண்பொருட் சுவைகண்டு
எடுத்தலும் இகழ்தலும் இயல்பாம் அன்றே. 51

நாடகந் தொட்டு வண்ணம்ஈ றாய
கவிதொறும் துறைநலம் காட்டலுண் டாயினும்
கட்டளைக் கலித்துறை கடலுறழ் சந்தம்
என்னுமிவ் விரண்டால் இயம்பிடல் மிகையே. 52

வண்ணம் புகுபவும் மாட்டா தனவும்
துறைகளில் உளவெனச் சொல்வது துணிவே. 53

துய்ப்பார் சொல்லெனச் சூட்டுநர் மொழியென
இருவகைத் துறைகளீண் டிலங்குகின் றனவே. 54

ஒருதுறை பற்றிப் பற்பல விதமாய்ச்
சாற்றலும் இயல்பெனிற் றள்ளார் புலவோர். 55

துறையியல் பிவ்வணம் சுருக்கித் தொல்லகப்
பொருள்முடித் தினிமறு பொருட்புக லுதுமே. 56

துறையியல்பு முற்றிற்று

## புறப்பொருள்

### நிலத்தியல்பு

புறப்பொருட் பகுதியிற் பொருவில் ஐவகை
நிலத்தியல் புரைக்குதும் நிகழ்ந்த வாறே. 57

## குறிஞ்சி

வான்றவழ் குடுமி வரைகளும் பறம்புக்
கூட்டமும் குறிஞ்சி; கொள்வார் முனிவரும்
வேடரும்; விளைவன தினையும் கிழங்கும்;
பொலிவன அருவியும் பொழிலும் ஆதிய;
வளமெலாம் விரிக்கிலம் ஆயினும் மற்றும்
சிறிதுள வியன் அவை செப்புதும் என்னெனில்
எவ்வகைத் தெய்வமு மாகி எம்மது
முருகோன் நடமிடு முறைமைநன் குணரார்
தந்தே வுளதெனத் தனித்தனி வரலும்
யாம்அது கண்டுவப் பெய்தலு மாமே. 58

## முல்லை

துழாயொடு பிறவும் சூழ்ந்த காடே
முல்லை; வாழ்பவர் மூவாப் பொதுவர்;
கமழ்வன பால்தயிர்; கடவுள்மா யவனே. 59

## பாலை

பசும்புல் பற்றுப் பாலையிற் பல்பேய்
திரிவன; விருந்தெனத் திருடர்வந் தகல்வார்;
கிடப்பன உடைதலை ஆதிய; கிளத்தரும்
இந்நிலத் தெய்வம் இலங்கிரு பிறைஎயிற்(று)
அகல்வாய்க் காளியென் றறைந்திடத் தகுமே 60

## மருதம்

வாழையும் தென்னையும் மலிவுறும் மருதத்து
அந்தணர் முதற்சிலர் அமர்தலும் அன்றி,
மள்ளரா தியரும் வயல்சார்ந் திருப்பதுண்டு
அவர்அயன் ஆதியர்ப் பரவல்கண் டிவர்தாம்
இந்திர னாதியர்க் கினியசெய் குவரே 61

## நெய்தல்

வள்ளையும் புன்னையும் மடலவிழ் தாழையும்
பனையும் தோய்வுறப் பரவைசார் நெய்தல்
என்னுமந் நிலத்தில் வலைஞ ரன்றியும்

ஈழரும் கொட்டிலிட் டிருப்பார்; அன்னவர்
வருணனைக் கொற்றியை வணங்குநர் தாமே. 62

இவ்வகை நிலங்களோர் ஐந்தும் இசைவுறீஇ
மாநில மாம்;அதன் வாழ்வெலாம் உடையார்
மன்னரும், புலவரும், மாழைமிக் குள்ளார்
தாமும், கடவுளர் சாற்றரும் பொதுத்தே(வு)
ஒன்றும், குரவனும்; உரைக்கு மிம்முறை
உணர்வார் சிலரெனல் உறுதியுள் உறுதியே. 63

குறிஞ்சியூர் குறிச்சி; முல்லையூர் பட்டி;
மருதத் தூர்நகர்; நெய்தலூர் பட்டினம்:
இவற்றை நானில மென்றனர் புலவோர். 64

என்(பு)ஊன் வேண்டுநர் யாவரும் பாலைக்கு
உரியார்; அன்னவர் ஊர்ப்பெயர் சேரி;
அவர்தெய்வ மனைத்தும் அலகைத் திரளே
என்னுந் தெளிவினர் இயற்றமிழ்ப் புலமை
வள்ளுவன் திருத்தாள் மலர்தொழு மவரே. 65

குறிஞ்சி ஆதியிற் றவமுதற் றொழில்களும்
தொண்டக மாதிய பறைகளும் பிறவும்
தக்கோர் மரபாற் றெளிவது தகுதியே. 66

ஓருநிலத் துறுவன மற்றொன் றிடத்தில்
புகுவதுண் டம்முறை புகல்வதும் இயல்பே. 67

நிலத்தியல்பு இவ்வணம் நிகழ்த்தினம் இனிச்சிறி(து)
உழியியல் புரைக்குதும் உணர்ந்த வாறே. 68

நிலத்தியல்பு முற்றிற்று

## உழியியல்பு

### அருந்தவர் இருப்பிடம்

தவத்தோர் உறையுளில் தண்டொடு கமண்டலம்
கோவணம் மரவுரி குலவுகல் லாடை
வெண்ணீ றணிமணி வேடர்கண் டுரித்த
கொல்லாப் புலித்தோ லாதிய குலவுமே. 69

### அந்தணர் வாழிடம்

பாம்புநா வகிர்ந்த பசும்புலும், செங்கனற்
குண்டமும்; திரித்தநூற் கோலும், சுருதியும்,
மஞ்சளிற் கலந்து வைத்தபச் சரிசியும்,
மாவிலை தொன்னை ஆதியும், அன்றி
நூற்பொரு ளுணர்தரும் நுண்ணிமை யில்லார்.
கொலைமகம் புரிதற் குறித்தயர்ந் துயிர்க்கும்
இரக்கமும் பொலிவுறும்; ஈச னென்றே
உலகினர் வழிபட உயர்ந்தோ ரிடத்தே 70

### அரசரிருப்பிடம்

மூவகை முரசமும் முத்தமிழ்ப் புலவர்
ஆர்வமும் கரிபரி ஆதியின் பெருக்கும்
கதிர்வாட் சேவகர் காப்பும் பசும்பொன்
நவமணிக் குவியலும் நடம்பயி லரங்கும்
ஆக்கமும் செருக்கும் அறநெறி யாதியும்
மன்னர்வா ழரண்மனை வாய்ந்த பொருளே. 71

### வணிகர் வாழிடம்

துணிவொடு செட்டும் தொலையாக் கணக்கும்
வட்டியும் திட்டமும் மாழை மணிதுகில்
ஆதியும் வணிகருக் கான பொருளே. 72

### வேளாளர் மேவுமிடம்

மேழிச் சீரும் விளைந்தநெற் குவியலும்
கன்னல்முத் தளவிய காலும் நாழியும்
அருமையும் தகுதியும் ஆதிய பிறவும்
நாலாங் குலத்தினர் நன்மனைப் பொருளே. 73

நால்வகைக் குலங்களைத் தனித்தனி தமதெனப்
பகர்தரும் சிற்சிலர் மனைப்பொருள் பலவும்
கூறிலம் சொல்முறை குறித்தவர் தம்மிற்
பெரியர்யாம் யாம்எனப் பிணங்குமா றுணர்ந்தே. 74

## ஐந்தாம் மரபினர்

கள்,அரக்கு, என்பு,ஊன், கடிநாய், பன்றி
ஆதிய கடைப்படும் ஐந்தாம் குலமுறு
சேரியின் பொருளெனச் செப்பினர் புலவோர் 75

## போர்க்களம்

கவந்தமும், காளியும், கூளியும் அலகைத்
திரளும் ஆடலும்; செந்நீர் ஆறு
நிணமிதந் தோடலும்; நிறைமணி முடிமுதற்
கலனெலா மிதிபடும் காட்சியும், நரிநாய்
கழுகொடு பருந்தும் காக்கையும் படர்தலும்;
வென்றியும், தோல்வியும், வேறுபல் இயல்பும்;
பொருகளச் சீரெனப் புகன்றனர் புலவோர். 76

## தெய்வப் புலவர்

நால்வகைப் பயனையும் நன்கெடுத் தோதலும்,
உயர்ச்சியைத் தாழ்த்தலும், தாழ்ச்சியை உயர்ச்சி
ஆக்கலும், தலைசேர்ந் தளவறக் களித்தலும்,
மன்னரும் பரவும் மாண்புடைத் தாதலும்,
ஈவார் புகழ்ச்சியும், இல்லை யென்பார்
இகழ்ச்சியும் நிறுவலும், எண்ணில் பல்கோடி
தெய்வமும் மொழிப்படி செய்யக் காண்டலும்,
ஆதிய பிறவும் அருந்தமிழ்ப் புலவோர்
அவையிடத் துள்ளன என்னும் அம்புவியே. 77

வெறிக்களம் நெற்களம் வேடர் சேரி
புலிக்குகை யாதிய பொருளெலாம் விரிக்கில்
பெருக்கு மாதலிற் பேசிலம் அன்றே. 78

உழியியல் பிவ்வா றுரைத்தனம் அடுத்தினி
வேற்றுயி ரியல்பினும் விளம்புதும் சிறிதே. 79

உழியியல்பு முற்றிற்று

## வேற்றுயிரியல்பு

### சரபப் பறவை

எண்கால் இருசிறைச் சிம்புள் என்றவை
சிங்கத் துறுதசை தின்பனவாமே. 80

### யாளி

கையொடு மின்றியும் கவின்றரும் ஆளிகள்
யானை யூன்முழு தினிதருந் துபவே. 81

### சிங்கம்

வாலிய நிறமுதல் ஐவகைத் தாகிய
சீயம் தாய்வயிற் றுதைந்துவெண் பிறைக்கோட்டு
ஆனைமேற் பிறக்கும் அன்றுதொட் டென்றும்
அதன்றலை நிணமே அயில்வ தாகுமே. 82

### யானை

மலையிடைப் புணர்ந்த களிறுகை தூக்கின்
அன்றிப் பிழையா(து) அணிநடைக் கரும்பிடி;
பன்னிரண் டாண்டிற் குருளையொன் றீனும்
என்று மூதுலகும் இயம்பிடல் மிகையே. 83

### புலி

பால்நுகர் குருளையைப் படுத்துத் துயிலும்
தாய்ப்புலி கரத்தால் தன்னை யறியா(து)
அடித்துக் கோறுமென் றகிலமோ திடுமே. 84

### மான்

ஆண்டு தோறும் அரைக்கொம்(பு) அடியோடு
வீழ்ந்து மற்றது போல் வேறுண் டாமே. 85

### முயல்

வேலியுட் போதலும் வெட்டிய பள்ளத்(து)
உறுபுனல் அருந்தலும் உதவா முயற்கே. 86

பாம்பு

ஆறு திங்களில் அடிதலை யாதலும்
செத்துத் தேள்முதல் தீயவை தரலும்
குக்கற் குருளையிற் குரைத்தலும் அரவினத்(து)
உள்ள வென் றுரைப்பார் உலகினில் உளரே. 87

அன்னம்

புனல் பிரித்(து) ஆன்பால் புசிக்குந் தன்மை
தாமரைக் கிழங்கால் தடந்தொறுந் திரியும்
அன்னம் கொள்வதென் றறைந்தனர் புலவோர். 88

மயில்

காரெதிர் நடமிடு கலப மாமயில்
கண்வழி யிந்தியம் கசிதர அதன்பேடு
அருந்திச் சினையா மெனச்சில ரறைந்தனர். 89

குயில்

குயில்தரும் சினையைக் காக்கைதன் குஞ்சொடு
வளர்த்து வீடுமென மாநிலம் சொலுமே. 90

முதலை

நாவின்றி வாய்நிறை பல்லும் நாற் கண்ணும்
கொண்டுள முதலைதன் இரையை மீதெறிந்(து)
அருந்துமென் றுரைப்பார் அளவறும் பலரே. 91

ஆமை

அணிற்றெனி கேட்டலும் ஆமை சினையாய்க்
கரையிலிட் டு(உ)ளங்கொடு காத்துரு வாக்கும்
என்றும் பற்பலர் இயம்புகின் றனரே. 92

நண்டு

நண்டுதன் றுணையை அழைத்துவந் தணைதலும்
சங்கினம் சேர்கையும், தனது பார்வையில்
ஒருமீன் பற்பல ஒளிர்தரக் காட்டலும்,

வாடையிற் ருழை, மலர்தலும், பிறவும்
உலகினிற் பழகி உணர்வது முறையே. 93

வேற்றுயிரியல் பிவண் விளம்பினம் இதன்பின்
கருவி யியல்பெனக் கழறுதும் சிறிதே. 94

வேற்றுயிரியல்பு முற்றிற்று

## கருவியல்பு

வேலும் சூலமும் விளங்குவச் சிரமும்,
கறைபடும் உலக்கையும், ஆதிய கருவிகள்
விட்டும் விடாதும் பொருமிரு விதச்சமர்க்(கு)
ஆவன என்றே அறைந்தனர் புலவோர். 95

ஆழியும் அம்பும் கல்லும் அனையவை
விட்டுப் பொரும்ஒரு விதச்சமர்ப் பொருளே. 96

வாளொடு வில்லும் வளைவுறு தோட்டியும்
ஆதிய பிடித்தே அமர்செயற் காமே. 97

துலையொடு குன்றியும் எவ்வகை நிறைநிலை
தனக்கும் கருவிக ளாமெனத் தகுமே. 98

செம்பொடு வெள்ளியும் பொன்னும் சிறியவர்
செருக்கெனு பயிர்மிகச் செய்வன வாமே. 99

நெல்முதல் விளைவன பலவும் நீணிலத்(து)
உயிர்த்தொகை வளர்த்தருள் உயர்கரு விகளே. 100

அருளும் பொறுமையும் அன்பும் ஊக்கமும்,
தெருட்சி யாதியும், சீரிய பெரியோர்
உண்மைநன் குணர்த்தும்என் றுரைக்குமூ துலகே. 101

மழையும் கூழும் மறையவர் வாழ்க்கையும்
புலவர்தம் சிறப்பும் புண்ணியச் சாலையும்
கொலைதவிர் வண்மை யாதிய கொள்கையும்
நீதிநூல் மன்னன் நெறிதெரிப் பனவே. 102

வண்ணம் வெண்பா என்னும் இருவகைச்
செய்யுளும் புலமைத் திறல்காட் டுபவே. 103

இவ்வணம் கருவி யியல்பெலாம் இயம்பிற்
சுவைகெடும் ஆதலில் சொன்னமட் டடக்கித்
தொகுப்பியல் பெனஃவும் சொல்லுதும் சிறிதே 104

கருவியில்பு முற்றிற்று

## தொகுப்பியல்பு

கதிர், மதி, உடு, முகில், ஆதிய கவின்றரும்
வானத் துரைசெய்யும் வகையெலாம் புறமே 105

பாழியந் தடக்கைப் பகட்டினம் பாம்பினம்
அமர்தரும் அதல மாதியும் புறமே. 106

பிறமொழித் தேயமும் பிறங்கும் எண்டிசைப்
பாலர்தம் ஊரும் பகர்புறப் பொருளே. 107

அடுக்கிய அண்டமும் அசோகடி அரசடிக்
கடவு ளாதியர் காக்கும் ஊரின்
முத்தியும் கருதில் முழுப்புறம் பாமே. 108

காமியங் கருதிக் கவலும் நெஞ்சினர்க்(கு)
உறுப்பு அலாதன ஒருங்கும் புறமே. 109

பிறவா வீடே பெறமுயன் றிருப்பார்க்கு
உடம்பும் புறமென உரைத்தனர் உணர்ந்தோர். 110

புறப்பொருள் இவ்வணம் புகன்றனம் இனிஅடுத்து
அகப்புறப் பொருள்நிலை யறிந்த வாறு
குறுக்கிக் கூறுதும் கொள்வார் பொருட்டே 111

தொகுப்பியல்பு முற்றிற்று

## அகப்புறப் பொருள் நிலை

உடலகத்(து) என்பும் இரத்தமும் பசியும்
உயிர்ப்பும் உள்ளமும் பிறவும் ஆகிப்

புறத்துள வைவகைப் பூதம் அவிர்தலின்
அவற்றையும் பொதுஎன் றறைவது முறையே. 112

கதிர்மதி உடல்தொறும் கண்கள் ஆதலின்
அவைகளும் அகப்புறப் பொருளா மன்றே. 113

பொறியும் சத்தமும் புறத்தோ டகத்தும்
உள்ளன வாம்என் றுரைத்திடத் தகுமே. 114

அறிவிடத் திருந்தும் அணித்துரு வாகியும்
உணர்த்தும் குருநிலை உள்ளோ புறம்போ
என்னுமாண் புடையார் எமக்கினி யோரே. 115

அகப்புறச் சமயம் ஆறிரண் டிடத்தும்
ஒருபொருள் உறுமென உணர்ந்தோர் உயர்ந்தோர்
என்னு மெய்ம்மொழிக் கிசையார் பதரே. 116

அகம்புறம் இரண்டும் அணைந்தும் அழிந்தும்
அவற்றின் பொதுநிலை அவிர்தரும் அன்றே. 117

உள்ளெனப் புறம்பென உழல்வார் பலரும்
தள்ளரும் துயர்பொதுத் தன்மையிற் கெடுமே. 118

அது இதென் றலைவார் ஆண்மை அகப்புறப்
பொது நிலைக் கனலெதிர் பூளை போலுமே. 119

உலவாப் பெருநலம் உள்ளொடு புறம்பும்
உணர்வார்க் கென்பவர் உலகினிற் சிலரே. 120

அகமெனும் அகமும் புறமெனும் புறமும்
ஒவ்வொரு கண்ணே போலும் பொதுநிலை
அவற்றைத் தழுவலின் அவ்விரு கண்களும்
மறுத்தலின் வேறொரு கண்ணுமன் றுறுமே. 121

அகப்புறப் பொருள்இவண், அடக்கி மூவகைத்து
ஆய பொருளிலக் கணமென முடித்தினி
வேறிலக் கணஞ்சொலும் விருப்பமுற் றனமே. 122

அகப்புறப்பொருள் நிலை முற்றிற்று

ஆக சூத்திரம்—122

நான்காவது

# யாப்பிலக்கணம்

## 1. இயலிசைத் தமிழியல்பு

காப்புறு பச்சிலைக் கடவுளைக் காவியம்
பூப்புனை கையுடைப் பூவையைப் புதுத்தினை
மாப்பிசைந் தருளிய வள்ளியை வாழ்த்தி
யாப்பிலக் கணஞ்சிறி தியம்புகின் றனமே. 1

சொல்லின் சார்பியல் பதனிற் சொற்றுள
வாய்பாட் டசைநிலை உணர்வார் மகிழ்வுற
முத்தமிழ் யாப்பு மொழிகுதும் முறையே. 2

### சூத்திரப்பா

அரும்பொருள் விரிப்பதற் கானசூத் திரப்பா
நிழல்,பூ, ஈற்றுள நான்கசைச் சொற்கள்
இணைந்தும் ஒவ்வோ ரிடத்தே நலஞ்சீர்
ஈற்றுள ஐந்தசைச் சொற்கள் வந்தும்
ஓரடி யாகும்; ஒருபாட் டித்தனை
அடி யெனும் அளவுரு; மோனையும் எதுகையும்
பிறழும்ஓ ரிடத்திற் பிறழ்ந்தும் பிறங்கும்;
நடுவரு மோனை நலமாம் அன்றே. 3

ஈரசை மூன்றசை கலந்துநன் ஞன்கா
வருவது சூத்திரம் என்பார் அஃது இதற்கு
அயலல என்பதும் அக்கரத் தியல்பு
பகரில் அதன் புணர்ச்சி நிலைமாறு படலும்
பழமை யாமெனும் பாவலர் பகரே. 4

### நேரிசை யாசிரியப்பா

நூற்பா என்ன நுவல்கையிற் ரேன்றி
இரண்டாப் பிரிக்கில் சீர்நலம் என்னும்
வாய்பா டுறும்ஐந் தசைச்சொலின் இன்றியும்
நான்காப் பிரிக்கிற் காய்கனி இன்றியும்
மோனை வழாதும் அடிஒன் ருகி

யீரடிக் கொவ்வோர் எதுகைத் தாகி
இரட்டிய தொகையடி யாகி முடிவது
நேரிசை யகவற் பாவெனல் நெறியே. 5

### நிலைமண்டில ஆசிரியப்பா

ஈற்றுறும் அடிக்கு முந்திய அடியில்ஈர்
அசைகுறை வாகிய வேற்றுமை ஒன்றே
அணைவுறும் நேரிசை யகவற் பாவே
நிலைமண் டிலமென நிகழ்த்தும் அகவலே. 6

### புறனடை

இருவகை யகவலும் எதுகை மாறி
ஒற்றைத் தொகைபடும் அடியின தாகி
மோனைகெட் டங்ஙனம் எதுகை நின்று
வரினும் கொள்வது வண்தமி ழியல்பே. 7

அகவலிற் சூத்திரச் சீர்வந் தொன்றினும்
சொற்சுவை யுளதெனில் தூயோர் தள்ளார்
ஆயினும் இனிதென் றறைவது கடையே. 8

நூற்பா என்பது சூத்திரப் பாவே;
ஆசிரி யப்பா என்பது அகவலே. 9

### வஞ்சிப்பா

கனிச்சீர் இரட்டிய ஓரடி யுடைத்தாய்
மோனையும் எதுகையும் ஆசிரி யப்பா
முறையிற் கொடுநடந்(து) ஈரசைத் தனிச்சொற்
காட்டிப் பின்னிலை மண்டில அகவற்
கடைச்சீர் இரண்டும் கவின்றரல் வஞ்சிப்
பாவெனல் பல்லோர் பகர்ந்த முறையே. 10

தனிச்சீர் ஆதிய தணவினும் வஞ்சிப்
பாவெனு மாற்றம் பழுதுப டாதே. 11

அகவற் பாசுரத் தடியினும் வஞ்சிப்
பாவடி குறைதலிற் குறளடி யெனுமொழி
கூட்டிச் சிற்சிலர் கூறலும்உளவே 12

## வெண்பா

ஈற்றில் நேர்வரும் மூன்றசைச் சொற்களும்
ஈரசை ஓரசை யாவும் வெண் பாவுக்கு
உரியன வாமென் றுரைத்தனர் உணர்ந்தோர். 13

வெண்பா ஈற்றே வருவதோ ரசைச்சொல்
அவ்வயின் வராதது மூன்றசைச் சொல்லே. 14

உரிய மூன்றசைச் சொல்லொடும் பின்நிரை
ஆய ஈரசைச் சொல்லொடு நேர்வரும்
பின்னேர் உள இரண் டசைச்சொல் லோடு
நிரைவரும் வெண்பா நிலையுணர் காலே. 15

நாளென மலரென முடித்தவெண் பாக்கள்
உத்தமப் பகுதி யென்பதும் காசெனப்
பிறப்பென முடிப்பன ஏனை யென்றும்
உணரும் பாவலன் நூற்றுள் ஒருவனே. 16

## குறள் வெண்பா

உரியசொல் நான்கால் ஓரடி யமைத்(து)அவ்
எதுகையில் வேறடி முச்சொலிற் காட்டி
மூன்றுஞ் சொற்றொறும் மோனையொடு முடிக்கில்
குறள்வெண் பாவெனக் கூறினர் உயர்ந்தோர். 17

## சவலை வெண்பா

குறள்வெண் பாஇரண் டணைவது சவலை
வெண்பா ஆமென விளம்பினர் சிலரே. 18

## நேரிசை வெண்பா

சவலைவெண் பாவின்முற் பகுதியின் ஈற்றில்அவ்
எதுகைத் தனிச்சொலொன் றிசைவுறில் நேரிசை
வெண்பா வாமென நிகழ்த்திடல் மிகையே. 19

## இன்னிசை வெண்பா

மூன்றடி நன்னாற் சீரின வாகி
யீற்றடி மூச்சீ ராக இயற்றிடல்
இன்னிசை வெண்பா என்பது முறையே. 20

## பஃறொடை வெண்பா

நேரிசை வெண்பா வேணமட் டடுக்கி
யிடைதொறுந் தனிச்சொல் இசைவுறப் பொருத்தல்
பஃறொடை வெண்பா ஆகும் இதனைக்
கலிவெண் பாவெனக் கழறுநர் உளரே. 21

இன்னும் சிற்சில வெண்பா உளஎன்று
உரைப்பினும் இவ்விதம் ஐந்துள் உறுமே. 22

தளைப்பிழை யின்றிப் பொருளொடு திகழுறும்
வெண்பா மோனையும் எதுகையும் பிறழினும்
தவிரினும் ஒப்புவர் தக்கோ ராயினும்
மதுரங் குன்றிடுமென்பது வழக்கே. 23

குறில்தனி வரும்அசை சீரீற்றன்றி
வாரா இயற்கையும், குற்றியலிகரம்
கொள்ளலும், தள்ளலும், ஆதிய பிறவும்
அறிவார், யாம்பகா அடுக்கு முறைகொடு
முடிவியல்பு இடைவர மொழியார் அவர்தம்
வெண்பா இயற்கை விரித்திடற் கரிதுஅதன்
ஈற்றடி மோனை யெழிலிசைவு இவற்றால்
தண்ணுமை போலத் தயங்கு மன்றே. 24

## வெண்டளைக் கலிப்பா

இன்னிசை வெண்பா ஈற்றடியும் நாற்சீர்
ஆகித் தளையும்அம் முறையே நிற்பது
கலிப்பா வாமெனக் கழறினர் கற்றோர். 25

நேரெனத் தொடுத்தலும் ஏயென முடித்தலும்
கலிப்பாக் கணியாம்; நிரையென எடுத்தலும்
ஆலோ கொல்எனல் ஆதியில் முடித்தலும்
ஏனையென் றியம்பினர் எண்ணில்பல் புலவோர். 26

## கொச்சகக் கலிப்பா

தளைபிறழ்ந் துள்ள கலிப்பாத் தானே
கொச்சகக் கலிப்பா என்றும் சிலராற்
கொச்சக மென்றும் கூறப் படுமே. 27

### மருட்பா

நேரிசை வெண்பா தனிச்சொல் வரைகொடுஅவ்
எதுகைவிட் டேனும் மூன்றகவலடி யிசைத்து
அவற்றின் நடுஅடி யீற்றில் ஈரசை
குறைக்கில் மருட்பா என்றுகொள் வாரே. 28

### அம்மானை

இரண்டு நாலைந் தெனுமடி யீற்றில்
தன்பெயர் குலவத் தக்கஅம் மானை
ஐந்தடி கலிப்பாப் போலும் அதனிடை
சொல்லலும் மறுத்தலும் விடையும் தானே
கூறினர் பற்பலர் குவலயத் திடத்தே. 29

அம்மானை யீற்றின் விடைமொழி யதனுள்
இருபொருள் காட்டிடல் மிகையாம், முப்பொருள்
நாற்பொருள் மொழியினும் இசைவுறில் நலமே. 30

கலிப்பா அரையரையாகக் கூட்டியும்
எதுகை யின்றித் தனித்தனி சேர்த்தும்
காதையம் மானை கழறினர் சிலரே. 31

கொச்சகச் சீர்கொடு கூறுமம் மானை
இழிவின தாகுமென் றிசைப்பது துணிவே. 32

### கட்டளைக் கலித்துறை

ஈரசை மூன்றசைச் சொற்கள்மிக் கணைந்தும்,
ஒவ்வோ ரீற்றில் தேமாந் தண்பூப்
புளிமாந் தண்பூப் புணர்ந்தும், ஐஞ்சீர்
ஆவதோர் அடியாய், நாலடி யுடைத்தாய்,
ஈற்றில் ஏயென முடிவது கட்டளைக்
கலித்துறை யாமெனக் கழறுதல் முறையே. 33

நேரெனத் துவக்கலும் நிரையென எடுத்தலும்
ஆய கட்டளைக் கலித்துறைக் கிடைவரும்
மெய்தவி ரெழுத்தின் தொகைபதி னாறும்
அவற்றொடொன் றணுகலும் ஆமெனப் பகரினும்

சுவையறி வில்லாத் துகளுறு மனத்தினர்
நெடில்குறி லமைவுறும் நிலைபிறழ் வதனால்
கீழ்மை தோய்வுறக் கிளத்தலும் உளவே 34

கலிநிலைத்துறை

காய்வரு மூன்றசை கலந்தைந் தாகியும்
ஈற்றுச் சீர்கனி யாகியும் வரும்அடி
கலிநிலைத் துறைக் கென்றனர் கற்றோர். 35

கட்டளைக் கலித்துறை கலிநிலைத் துறையெனும்
இவற்றின் மோனைக்கு ஈற்றுச் சீரிசைவு
என்றுபல் புலவோர் இயம்பின ரன்றே. 36

வஞ்சி விருத்தம்

ஈரசைச் சீர்மூன்று இரண்டிசைந்து ஓரடி
வருவன வஞ்சி விருத்த மாமே. 37

கலி விருத்தம்

நாற்சீர் ஓரடியாம் கலி சிற்சில,
கலிவிருத் தங்கள் எனக்கவின் தருபவே. 38

ஈரசைச் சொற்கள் ஐந்துஓ ரடியாய்
வரும்கலி விருத்தமும் மாநிலத் துளவே. 39

எண்சீர், கட்டளைக் கலிப்பா, குறுந்தாழிசை

கலிவிருத்தம் சில இரட்டித்து எண்சீர்
விருத்தம் கட்டளைக் கலிப்பா சிறுநிலைத்
தாழிசை வருமெனச் சாற்றிடத் தகுமே. 40

எழுசீர் அறுசீரின் வகை

ஈற்றில் ஓரசை யீரசை நிற்கும்
பேதம் பற்றியும், காய்ச்சீர் விரவியும்
அறுசீ ரெழுசீர் விருத்தப் பகுதியுஞ்
சிற்சில தாழிசைப் பகுதியும் வருமே. 41

எழுசீர் எண்சீர் இரட்டிய விருத்தப்
பகுதியும் தாழிசைப் பகுதியும் உளவே. 42

ஐஞ்சீர் மேல்வரும் விருத்தம் பலவும்
ஆசிரி யங்களென் றறைவார் பலரே. 43

வேற்றொலி

ஈரடி பேதித்து இசையும் நாலடிப்பா
வேற்றொலி யாமென விளம்பினர் சிலரே. 44

அடிதொடை கூடியும் குறைந்தும் பிறழ்ந்தும்
வருவன வெண்டுறை யாமென் றவற்றிற்
கியைந்ததோர் பெயரே இட்டனர் புலவோர். 45

கொச்சகத் தடிசில இரட்டித் தணைந்தபின்
குறிலே நிரைபடும் சிலசீர் தோய்ந்து
முற்படு பகுதியே மறுத்துந் தோன்றியும்
இருசீர் முச்சீர் நாற்சீர்ப் பாவொன்
றொன்றே நின்றுபின் தனிச்சொல் லுற்றும்
பின்னிலை மண்டில அகவலா முடிக்கும்
அஃதையும் ஒருநூ லணிமுகத் தமைத்தற்கு
ஒப்பிய மனுத்திரள் வேறொரு விதமாய்த்
திரித்திது கொங்கணி மங்கணிப் பாட்டென்று
இயம்பினும் ஆமாம் என்னு மாதலில்
சுவைமிகத் தொடுப்பவை அனைத்தும் நலமே. 46

பாநிலை தெரிதற் பொருட்டே பற்பல
நூல்களும் பார்க்கும் நுண்ணியர்க்கு யாம்பகர்
சகத்திர தீபமும் வருடப் பதிகமும்
என்னும் துணைநூல் இனியநற் றுணையே. 47

யாப்பியற் றுணைகொண்டு இனியபாப் பகர்தலில்
தூய்தாம் இலக்கியம் துணைக்கொளல் நலமாம்
அதனிலை பிறழ்ந்தும் கிடக்கும் ஆதலின்
புலவர்தம் துணையே பொருவில்நற் றுணையே. 48

இயல் இசை யென்னும் இருவகைத் தமிழுக்கு
ஆமாறு இந்த மட் டடக்கிக் கூறினம்
நாடகத் தமிழ்நிலை நவிலுதும் சிறிதே. 49

இயலிசைத் தமிழியல்பு முற்றிற்று.

## 2 நாடகத் தமிழியல்பு

பல்லவத் திருபங் கறுபல் லவமும்
அதனிரு பங்காம் சரணமும் தாளம்
பிழையா தமைத்து அதிற் பேரின் பஞ்சொலின்
கீர்த்தனை யென்றும் மற்றேனையைக் கிளத்தில்
பதமெனவும் சொலல் பாவலர் வழக்கே. 50

அநுபல் லவமும் சரணமும் அளவிற்
கூடினும் தாளம் குழம்பாது யாவரும்
அறிவுறும் பொருள் அமைந்து அவிர்தரின் நலமே. 51

பல்லவம் போன்றே அநுபல் லவமும்
ஒன்றலது ஒன்ருது, சரணம் ஒன் றன்றி
மூன்றும் வரல்மிகை ஐந்தேழ் ஒன்பது
பதினொன்று ஒன் றினும் பல்லவத் தலையில்
அவற்றினீ ரொன்றும் அழகாற் றிகழ்பவே. 52

இருவகைப் பல்லவம் இன் றி ஆடலுக்கு
இசைவுறத் தனித்தனி யீரடி நான்கடி
காட்டி ஓர் பொருளைக் கருதிக் கூறத்
தொகுப்பது சிந்தெனச் சொல்வது வழக்கே. 53

வீணையிற் றேர்ந்தோன் விளம்பு மாற்றம்
தழீஇக் கொளல் நாடகத் தமிழினுக் கழகே
ஆயினும் பொருட்சுவை அழியினும் இயலிசைச்
சொல்மிகப் புணரினும் சோர்வு படுமே. 54

வண்ணச் சீர்கொடு வயங்கும் நாடகத்,து
இசைத்தமிழ்ச் சொற்கள் வந்திசையினும் தகுமே. 55

புலமைக்கு ஆள்என போதன் பொறித்த
தலையினற்கு யாப்பியல் பதனைச் சாற்றிடல்
பாய்தொழிற் புலிக்குஅது பயிற்றல் போலும்
அல்லாற் (கு) உரைசெயல், அத்தொழில் எருமைக்,கு
இசைத்திட லொப்பா மெனத்தெளிந் தனமே. 56

இயல்முத லாகிய பகுதியை அடுக்கி
முத்தமிழ்ப் பாமாலையில் மொழிந் தனமே. 57

களிறே புரையும் களிப்புடைக் கவிஞர்க்கு
அரியே றன்னர்க்கு ஆவி யாய 58

சந்த நிலை அவர் தாள்மலர் வணங்கி
வண்ணத் தியல்பெனும் நூலிடை வகுத்துக்
கூறினம் ஆதலின் இங்ஙனம் குறுக்கிச்
சிறிது கூறுதும் தெளிவார் பொருட்டே

நாடகத் தமிழியல்பு முற்றிற்று.

## 3. வண்ணவியல்பு

வல்லினம் பற்றித் தத்தவும் முன்பின்
நீடலும் பிறக்கும் மெல்லினம் புணர்ந்து
தந்தவும் நீட்சியும் தன்னவும் பயக்கும்
இடையினம் தய்ய இயங்கச் செய்யும்
தனவும் பெருக்கமும் பொதுப்பட வருமே. 59

தத்தவும் தன்னவும் தய்யவும் தனவும்
நால்வகைக் குலமென நவிலத் தகுமே. 60

இருவகைச் சந்தமும் பிறழும் சிற்சில
ஐந்தாங் குலமென்று அறைவது துணிவே. 61

தத்தவும் தந்தவும் தாத்தவும் தாந்தவும்
ஆண்பால் ஆமென்று அறைவது முறையே 62

தன்னவும் தய்யவும் தனவும் தானவும்
பெண்பால் ஆமெனப் பேசிடத் தகுமே. 63

தனவும் தய்யவும் தன்னவும் பிறழ்வன
அனைத்தும் அலிப்பால் ஆமெனல் முறையே. 64

தத்தா எனவரல் ஆதியைப் பெருக்கிக்
குசக்குலம் முதலிய கூறலும் பிறழ்ச்சியின்
நீட்சி பற்றிக் கல்மரம் ஆதிய
முதிர்அலி வகுத்தலும் முறையே ஆயினும்
பயனின்மை கருதிப் பகர்ந்தில மன்றே. 65

எவ்வழி எவரெவர் இயம்பும் வண்ணமும்
ஆறு சமயமும் அவற்றின் புறம்பும்
வீறு பொதுநெறி விளக்கமும் போன்றோர்
எண்வகைத் தாகி இலங்குறும் எனத்தேர்ந்து
இயம்புநர்க்கு அருட்பேற்று இச்சையுண்டாமே. 66

தன்னவும் தய்யவும் தனவெனத் தொனிதரு
சந்திவேற் றுமையிடை மெய்க்கெலாம் அதனதன்
வருக்கத் துயிர்மெய் தான்வர வொண்ணுதது
இம்முறை அந்நூல் இனத்தைச் சுட்டிடல்
போற்சிலர் மயங்கப் புகன்ற தன்றே. 67

இருவகை வண்ணம் ஒன்ருெடொன்று இசைவுறும்
இடத்தைச் சந்தியென்று இயம்புவர் பெரியோர். 68

மெல்லின மெய்யீற்று உள்ளவண் ணத்தொடு
வல்லினத்து உயிர்மெய் முதலுள வண்ணம்
பொருந்தில் இரண்டரைச் சந்தம் எனலாம்
இரண்டே ஆமென்று இசைப்பார் சிலர்அது
குத்தல்என்று உரைக்கும் குற்றம் ஆமே. 69

ஈற்றில் இடையின ஒற்றுறும் வண்ணச்
சொல்லொடு வேறினத் தொற்றுப் புணர்த்துமவ்
வண்ணம் தோன்றும் வாரா தொழியினும்
குத்தற் குற்றம்என்று உரைப்பது குணமே. 70

தத்தன எனலும் தந்தத்த எனலும்
தனத்தா என்றிடல் ஆதிய பிறவும்
தொடர்ச்சி இயல்பெனச் சொல்வது முறையே. 71

தத்தவில் தாத்தவும் தந்தவில் தாந்தவும்
தனவில் தான்வும் பிறந்த வாறு
தன்ன தய்யவில் வரும்என மருளாது
அம்முறை தோற்றலும் தானச் சந்தம்
தானெனத் துணிவுறத் தகும்தகும் தகுமே. 72

ஒவ்வோர் வண்ணமும் சிற்சில சொற்கொளும்
அவற்றுள் தனவில் சுருக்கமும் தானவில்
பெருக்கமும் இலையெனப் பேசத் தகுமே. 73

தனவும் தானவும் எளிதினும் எளியன
தத்தவும் தந்தவும் எளியன தாத்தவும்
தாந்தவும் வலியன தய்யவும் தன்னவும்
வலிதினும் வலியன என்பது வழக்கே. 74

துறைபகர் வண்ணப் பாவின் முற்பகுதியை
ஆண்கலை என்றும் மற்றுஏனையைப் பெண்கலை
என்றும் உலகோர் இயம்பிடல் மிகையே. 75

அடிகளின் ஈற்றுக் குழிப்புச் சிதைவுறத்
தொடுத்தல் மிகைபடும் வாய்பாடு ஆயினும்
திருந்தக் கூறிடல் சிறப்பினுள் சிறப்பே. 76

கொடுந்தமிழ்ப் புணர்ச்சி வண்ணம் ஆயினும்
பொருட்சுவை ஆதிய நலம்பல பொருந்தின்
தமிழ்க்கடல் குளிப்பவர் தழுவல்சற் றுளதே. 77

மதுரம் குன்றிக் கிடப்பினும் வைத்துள
குழிப்புப் பிறழா வண்ணம் குளறிடில்
அஃதுணர் புலவர்சற் றகம்மகிழ் வாரே. 78

ஆகா அளபெடை அணையினும் அம்முறை
துள்ளல் தோறும் துலக்கவல் லானேல்
அஃதுமோர் வியப்பென்று அறைவார் சிலரே. 79

அந்நூல் ஒப்பாக் குற்றம்நான் கினுக்குள்
இந்நூல் மூன்றிசைந் திருப்பதென் என்பார்
உற்று நோக்கும் உணர்வுரு தவரே. 80

ஓசையும் கனமும் உலவா ஊக்கமும்
தொண்டும் தோய்வுறீஇத் துலங்கிய வண்ணம்
அந்நூல் ஒப்பிடல் ஆயகுற் றங்களும்
இல்லாது உறுமெனில் ஏற்றத்து ஏற்றமே. 81

இம்முறை யாவும்முன் எடுத்துக் காட்டிய
நூற்பொருள் உணர்ந்துள நுண்ணியர்க்கு உவகையும்
மற்றவர்க்கு உலவா மயக்கமும் தருமே. 82

கருணைக் கடலெனச் சத்திவேல் என்ன
வென்றி மழுவெனத் துவக்கியோர் மூன்று
வண்ணம் இவற்றினுக்கு இலக்கியம் என்றே
கருதிக் கூறினம் மற்றும் பறடல
வண்ணமும் வகுப்பும் விருத்தமும் பகர்ந்துளம்
அவைகளும் துணையாம் அறியவேண் டுநர்க்கே. 83

எட்டுப் பதினாறு எண்ணான்கு எட்டெட்டு
என்னும்நாற் பகுதியிற் கலைவகுத்து ஒருநால்
எதுகையும் மோனையும் இலங்கக் காட்டி
ஒருபொருட் புகழே உரைப்பது வகுப்பே. 84

இயலிசை நாடகம் என்னும் பகுதியில்
அணிகெடல் குதித்தல் ஆதிய குற்றம்

தெரியும் கண்கொடு திகழ்பொது வண்ணக்
குழிப்பின் புணர்ச்சி உணர்வது குணமே. 85

தமிழ்க்கவி அனைத்தினும் தலையென்று உள்ள
வண்ண இயல்பினை வகுத்தனம் மோனை
இயல்பினைச் சுருக்கி இயம்புகின் றனமே. 86

வண்ணவியல்பு முற்றிற்று

## 4. மோனையியல்பு

அகரக் குறில், நெடில், ஐ ஔ, என்னும்
நான்கும் ஓர் மோனை நன்குணர் வார்க்கே. 87

இகரமும் எகரமும் இவற்றின் நெடில்களும்
யகர, யா காரமும் இசையும் மோனைக்கே 88

உகரமும், எகரமும் யோவும் நெடில்களும்
ஒருவகை மோனையென றுரைப்பா ருணர்ந்தோர். 89

உயிர்ப்பொறி மோனையின் ஒழுங்கு பற்றி
உயிர்மெய்ப் பொறிகளும் ஒளிர்தரும் ஆதலின்
அவற்றின் வருக்கத்து ஒன்றோ டொன்று
பொருந்தல் உண்டு அம்முறை புகலுதும் அன்றே. 90

சகரமும் தகரமும் அவற்றின் பிறவும்
முறைமையிற் பிறழ்வது மோனை மரபே. 91

ச, சா, சை, சௌ வும், த, தா, தை, தௌவும் இவை மோனையாகும். இதுபோல,

சி, சீ, செ, சே, தி, தீ. தெ, தே என்பன மோனைகளாகும்.

சு, சூ சொ, சோவும், து, தூ, தொ, தோ, வும் மோனைகள். 92

அகரமும் யகரமும் அணைவதும் நகரமும்
ரகரமும் லகரமும் தொடர்வதும் நாடகித்
தமிழிற் காமெனச் சாற்றுநர் சிலரே 93

உயிரெழுத் ததனையே ஒற்றின் புணர்ப்பால்
உயிர்மெய் யாக்கி உரைக்கும் மோனையும்,
ஒருசொல் நடுவுறும் உயிர்மெய் மோனையும்

நிலையிடந் தவறி நிற்கும் கூழை
மோனையில் நலமாம் ஆயினும் அவற்றைக்
கள்ளமோ னைகளெனக் கழறத் தகுமே. 94

உறுமிடத் துற்று அரசொக்கும் மோனை
ஒன்றே நலமென உன்னுநர் சிலரே. 95

மோனை யில்லா முத்தமிழ்ப் பாட்டு
நாண மில்லா நங்கையொப் பாமே. 96

தவறிய மோனைத் தமிழ்க்கவி கலவிக்
கிசைந்தபின் ஊடும் ஏந்திழைக் கொப்பே.

ஓரசை தொட்டு ஐந் தசைவரை யுள்ள
சொற்களின் கலப்பாற் றலங்குபல் பாடலில்
மோனை போய் நிற்கும் மொழியெலா மொழியாது
அடக்கி எதுகைசற் றறைகுதும் அன்றே.

மோனையியல்பு முற்றிற்று

## 5. எதுகையியல்பு

சிங்கமென் றெழும்பாட் டடிதொறும் எதுகை
தங்கம் பொங்கமென் றமைவது போல்வன
சிதையாத் தொடையெனச் செப்புவர் தெளிந்தோர்.

கொற்றியும் செற்றமும் கற்றையும் போல்வன
சிதையுறு தொடையெனச் செப்பினர் சிறந்தோர். 1

பார்த்திபன் காய்த்தமா அன்ன பிறவும்
ஓசைத் தொடையென் றுரைத்தனர் உணர்ந்தோர். 1

பாலுக்குக் கூழுக் கெனப்பகர் பிறவும்
இனத்தொடை யாகுமென் றியம்பினர் சிலரே. 102

சீருற்ற நீருற்ற எனமிக்கு வருவன
அலங்கா ரத்தொடை யாமெனத் தகுமே. 103

ஆடும் பரிவேலணி பாடும் பணியே பணி
யெனவரல் யாவும் வண்ண எதுகையே. 104

இவ்வகை எதுகையில் யாது மில்லெனில்
செவ்விய கவிகளும் சீரழி வுறுமே. 105

எவ்வகைக் கவிகளும் நால்வகைத் தாமெனக்
கூறுமம் முறையின் குறிப்புரைக் குதுமே. 106

எதுகையியல்பு முற்றிற்று

## 6. நாற்கவியியல்பு

பட்டினத்து அடிகள் ஆதிய பாவலர்
கழுமரம் எரிவுறக் கழறிய தாதிய
ஆசு கவியின மாமெனத் தகுமே. 107

குளிர் பொழிற் பாண்டிக் குலசே கரன்பகர்
அம்பிகை மாலை ஆதிய மதுரமே. 108

கொங்குவாழ் மன்னன் கொடுத்த கொடுவாள்
அருணையூர்ப் புரவலன் அரண்மனை சேரத்
திகழ்ந்தநூ லாதிய சித்திர கவியே. 109

ஓரா யிரமுதல் நூறா யிரம்வரை
செய்யுள் தொகையுடைத் தாகிப் பலபொருள்
அறையும் பனுவல்கள் அனைத்தும்வித் தாரம்
என்பதும் அகவல் பஃறொடை வெண்பா
எண்ணான்(கு)எண்ணெண் கலையுடை வகுப்பிவை
ஆதிய தாம்என் றறைவதும் இயல்பே. 110

ஆசு கவியின் அமைதியும் மதுரக்
கவியின் கனிவும் கரட்டு முரட்டுச்
சித்திர கவியின் திரிபும் மாறுட்டமும்
வித்தா ரக்கவி விளக்கமும் புலவோர்
சேர்க்கையில் தேறிடில் அன்றித் தெரியா
ஆயினும் இயலிசை அறிவான். அவ்வயின்
இருநூல் எம்மதென் றெடுத்துக் காட்டலின்
முதல்நூல் இனிதென மொழிவதும் தகுமே. 111

உரைப் பொருள் மிகலால் ஒன்றேடொன் றணைவுறு
தொந்தக் கவிகளைக் குளக மென்றும்,
பொருளெழு மி_ந்தனை எழுவா யென்றும்,

முற்றுறு மிடந்தனைப் பயனிலை யென்றும்
குறித்ததைச் செயப்படு பொருளா மென்றும்,
தன்செயல் கூறிடல் தனிமை யென்றும
வினவக் கூறிடல் முன்னிலை யென்றும்
பிறநிலை பேசுதல் படர்க்கை யென்றும்
அறைவன ஆதிய அறிவது கடனே. 112

பாசுரத் தியல்பிவண் பகர்ந்தமட் டடக்கிப்
பனுவ லியல்பினைப் பகருதும் சிறிதே. 113

நாற்கவியியல்பு முற்றிற்று

## 7. பனுவலியல்பு

சொற்கடல் அமிழ்தெனத் துலங்கும் தூய
பனுவ லியல்பினைப் பகுக்கில்நூ லென்றும்
பிரபந்த மென்றும் பேசும் இருபாற்று
ஆணொடு பெண்போன் றவிர்தரும் அலியெனக்
கலந்தும் சிற்சில கவின்றரும் அவற்றைப்
புராணம் காவியம் என்பார் புலவோர். 114

நூல்பிர பந்தம் காவிய மென நுவல்
மூவகைப் பனுவற் பிரிவை நோக்கில்
மனுத்திரள் போன்றே வயங்கும் ஆதலின்
பெயர் குணம் முழுமையும் பேசரி தாயினும்
ஒருவா றிந்நூற் பொருட்டுரைக் குதுமே. 115

அறம்பொருள் இன்பம் வீட்டு நெறியெனும்
நான்கும் பனுவற் றெகைக்கெலாம் தாயும்
தந்தையும் குருவும் தனிப்பெருந் தெய்வமும்
ஆமெனுந் துணிவுறல் அறவோர்க் கழகே. 116

இலக்கணம் இலக்கியம் சோதிடம் நீதி
வயித்தியம் சிற்பம் ஆதிய வகுக்கும்
பனுவல் யாவும் நூலெனப் படுபவே. 117

தெய்வம் அரையன் செழும்பொன் கொடுப்போன்
சுவைதெரிந் துவப்போன் ஆதியர்த் துதித்த
பனுவல்கள் யாவும் பிரபந்த மாமே. 118

வரைநதி நகர் நாடு ஆதியின் வளமும்
தெய்வச் செயலும் திறல்மிகு போரும்
செங்கோற் சிறப்பும் சீரியர் தன்மையும்
அனையன போலும் அமைவெலாம் பெருக்கிக்
கழறுதல் புராணமும் காவியமும் ஆமே. 119

பனுவலின் முகத்துத் திலகம் போல்வது
பாயிர மாமெனப் பகரத் தகுமே. 120

பனுவற் காரன் பகர்பொதுப் பாயிரம்
தெய்வக் காப்பும் கொள்வார் செயலும்
நுவன்றகா ரணமும் பயனொடு பிறவுமே. 121

ஆக்கியோன் துணிந்தோன் அல்லா னென்னில்
காதுறக் கேட்டுக் களிததோன் கழறும்
சிறப்புப் பாயிரம், திகழ்தரு பனுவற்
செய்தோன் பெயரும் சேர்த்தநல் லரங்கும்
அதன்புக ழாதியு மாமெனத் தகுமே. 122

பாயிரத் துறுவதிற் பனுவல் முகத்துறும்
நுண்ணியர் வணக்கம் நூறுபங் கினிதே. 123

இழிநூல் பாயிரத் தாலுயர் வெய்தாது
ஏனைஅஃ திலதால் இழிவுரு தெனினும்
தெய்வத் துதியொடு செப்பும்நூற் பெயர்மட்
டாயினும் பகர்ந்திடல் அழகாம் அன்றே. 124

கொலைபுலை மறுத்திடல் நூற்கும் கொற்றம்
பெருங்கொடை யெனுமிவை பிரபந்தத் தினுக்கும்
கடவுளும் தொண்டரும் காவியத் தினுக்கும்
உரியமெய்ப் பொருளென உரைத்தன ருணர்ந்தோர். 125

நூல்களின் பகுதிகட்கு அதிகார மென்றும்
இயல்பென்றும் உருவக மென்றும் பின்னும்
இசைந்தவா றும்பெய ரிட்டனர் புலவோர். 126

தசாங்கம் பவனி தூதிவை முதலாப்
பிரபந் தப்பொருள் பிரிவுபல விதமே. 127

காண்டம் சருக்கம் படலம் கதிமுதல்
காவியப் பகுதியும் கணக்கறும் பாற்றே. 128

பைந்தமிழ்ப் புலவோர் பகரும் பனுவல்
தொண்ணூற் றாறுஎனச் சொல்வார் சொல்லினும்
லகரி முதற்கொடு நொண்டியீ றாகிய
வேறுபல் விதங்களும் விளங்குகின் றனவால்
யாமுஞ் சிலவிதம் இயம்பநா ணுதுமே. 129

மழலையங் குழவியை வயிறுநொந் தீன்ற
தாயிடும் பெயரே தலைமிசைக் கொளல் போன்று
அருந்தமிழ்ப் பனுவலும் ஆக்கியோ னமைத்த
பெயர் பொறுத் துலகிற் பிறங்கிடல் முறையே. 130

ஒருபெயர்க் குரியார் உலகினிற் பலரால்
பனுவலும் அங்ஙனம் பகர்வது முறையே. 131

மற்றையர்க் காகாப் பெயர்புனை மாந்தரில்
சிற்சில பனுவல் திகழ்வவும் உளவே. 132

ஒன்றற் கொருவன் உரைத்ததோர் பனுவலை
வேறுமோர் புலவன் விளம்புதல் இழிவே. 133

யாப்பிலக் கணத்தினை யிம்மட் டடக்கி
மற்றோ ரிலக்கணம் வகுக்கநா டுதுமே. 134

பனுவலியல்பு முற்றிற்று

யாப்பிலக்கணம் சூத்திரம் 134

உ
குருவே துணை
ஐந்தாவது

# அணியிலக்கணம்

## 1. உவமையியல்பு

கணியுரு வாகிய காமர் முருகனைப்
பணிபவர் அடிமலர்ப பழிச்சிப் பைந்தமிழ்
அணியிலக் கணஞ்சிறி தறையலுற் றனமே. 1

அணிநிலை யளப்பரி தாயினும் உவமை
உடைமை கற்பனை நிகழ்ச்சி ஆக்கமென்று
ஐவகை வாய்பா டறைகுதும் அன்றே 2

செம்பொற் குன்றமும் செக்கரும் கனலும்
மாணிக்கம் ஆதியும் மயிலோன் விடையோன்
கணபதி முதலினர் காட்சிக் கிணையே. 3

கடலும் மேகமும் கரியமால் வரையும்
இரவும்மைக் குழம்பும் இனையன யாவும்
நெடியோன் உமைஎமன் இந்திரன் வள்ளி
அவுணர்க் கிணையென் றறைவது வழக்கே. 4

பொன்னிறம் பிரமன் பூமகள் குஞ்சரி
என்னும் மூவர்க் கியல்பாம் அன்றே 5

அன்னம் கலைமகள் அணிகாட் டுதல்போல்
மஞ்ஞையும் கிளியும் மலைமகள் மறமகள்
போலுமென் றுரைப்பது புலவோர்க் கியல்பே. 6

அரன்குகன் திருமால் என்னு(ம்) மூவர்
வெளிறலும் கணபதி கருநிற மேவலும்
மாதளம் பூவென மலைமகள் சிவத்தலும்
உண்டெனச் சிற்சிலர் உரைத்தனர் உணர்ந்தே. 7

வெள்ளி மால்வரை விடைஅயி ராவணம்
பொன்னூர் வேழம் குகன்கொடி அயன்பரி
ஆதிக் கிணையென் றறையத் தகுமே. 8

வேலொடு மின்னலை ஆழியொ டிரவியைச்
சங்கொடு மதியைச் சாற்றுத லியல்பே. 9

மயிலிணை மரகதம் என்கை யாதியை
தெய்வச் சின்னத் துவமைச் சிறப்பெலாம்
தொண்டர்தம் மொழிவழி சொல்வது முறையே. 10

வசிட்டனை அகத்திய மாமுனி யாதியர்
தம்மைத் தவத்தோர்க் கிணைசொலில் தகுமே. 11

உம்பருர்க் குரவன் நான்முகன் ஆதியர்
அந்தணர் புகழ்ச்சிக கணிகல மாவரே 12

இராகவன் தருமன் முதலினர் தம்மை
நீதிமன் னவர்க்கு நிகர்சொலல் இயல்பே. 13

வீமன் வென்றிவில் விசயன் ஆ தியரை
வீரருக் குவமை விளப்பிடல் இனிதே 14

வணிகர்க்கு அளகைக் காவலன் தன்னை
உவமை கூறிடல் உத்தமம் ஆமே 15

முளைகொணர்ந்து அடிசில் இட்டோன் மூர்த்தி
சடையன் வேளாளர் தங்கட் குவமையே. 16

மிடியறக் கொடுக்கும் வீறுடை ஒருவனைக்
கன்னனு தியர்க்கிணை கழறலும் அன்றி
அரன்அரி குகவேள் அணையான் எனினும்
முத்தமிழ்ப் புலவோர் முனியா ரன்றே. 17

கார்மணல் ஓட்டமும் பாசிக் கொத்தும்
மேகமும் இருளும் விரிமலர்ச் சோலையும்
வண்டுக் கூட்டமும் மற்றோர் விதப்பனை
காய்த்துள கொத்தும் கருங்குழற் கிணையது
பின்னுறிற் கொன்றைக் காயெனப் பிறங்கும்
அவிழ்ப்புறில் அகத்திக் காய்க்கொத் தனையதாம்
இன்னமும் டலவா றியம்புவர் புலவோர் 18

நெடுமா லனையான் நெற்றி நிமிர்பிறை
செந்திரு அன்னாள் சிறுநுதல் ஏனையே. 19

விற்பொரு புருவமும் விதுவொடு கமலமும்
அன்னமா முகமும் அவன்அவள் பொதுவே. 20

காகமுக் கென்னக் கவின்தரு புருவமும்
போர்விடைக் கண்ணும் புருடர்க் குரியவே. 21

கரும்பொடு வானெனக் கவின்றரு புருவமும்
கணைவேல் உற்பலம் கயல்பொரு கண்ணும்
கோதையர்க் கன்றிக் கூறவொண் ணாதே. 22

பெண்கொடி நாசியின் பேரெழிற் கிணையெனச்
சண்பக மலரையும் சாற்றுநர் சிலரே. 23

கன்னிதன் கவுட்கிணை ஆடியும் காதிற்கு
ஊசல்கத் திரிக்கோல் வள்ளைக் கொடியும்
கூறுநர் பற்பலர் குவலயத் துளரே 24

கொவ்வையில் வீழியிற் குலவுசெங் கனிகளும்
பவளமும் இதழ்க்கிணை பகர்ந்தனர் பாவலர். 25

முருந்தும் மாதளை அரிசியும் முல்லை
அரும்பும் நகைக்கிணை யறைவது முறையே. 26

பண்ணும் கிள்ளையும் பாலும் அமிழ்தும்
குயிலும் தேனும் கோதைசொற் கிணையே. 27

சிறுமாங் கனியுடன் ஆடிக் காம்பும்
நங்கையர் நாடிக் கிணைசொல னலமே. 28

கமுகும் சங்கமும் கன்னியர் மிடற்றுக்(கு)
உவமை யாகுமென் றுரைத்தனர் புலவோர். 29

குடமும் குன்றமும் குஞ்சரக் கோடும்
முடியும் தாளமும் மொக்குளும் பந்தும்
பம்பரம் இளநீர் கூவிளம் பழமுதல்
பிறவும் பாவைதன் பெருமுலைக் கிணையே. 30

எறும் பொழுக்(கு) இருப்புச் சலாகை போலும்
உரோமத் தணியுறும் உந்திநீர்ச் சுழிஆல்
இலைவயி றென்றிடல் ஏந்திழைக் கிசைவே. 31

மென்தோட் பேதைதன் முதுகினை வெருகந்
தளிரெனச் சாற்றலும் தக்க இயல்பே. 32

மலையென எழுவன வழங்கும் தோள்களும்
பாய லாமெனப் படர்தரு மார்பமும்,
காளையர்க் குரித்தெனக் கழறினர் கற்றோர். 33

யாழெனு முன்கையும் கெளிறொடு பயற்றங்
காய்பொரு விரல்களும் காந்தள் மலர்நிகர்
அங்கையும் கிளிமூக் கன்னகூர் உகிரும்
நங்கையர்க் குரித்தென நவின்றனர் நாவலர். 34

மேகமும் நிதிகளும் விண்ணோர்த் தருவும்
சிந்தா மணியும் தேனுவும் தெய்வமும்
தினந்தொறும் கொடுப்போன் செங்கைக் கிளையே. 35

சிறுகீரை வித்துறு செம்பொற் றட்டமும்
தேர்த்தட்டும் வாவியும் தேன்கூடும் மின்னார்
கடிதடத் துவமையாக் கழறினர் முன்னோர். 36

சீயம் நூல் உடுக்கை ஆமெனத் திகழ்இடைக்
காரிகை இருக்கைக் களிற்றின் கும்பம்
போலு மென்றும் புகன்றனர் புலவோர் 37

துதிக்கையும் வாழையும் போலும் துடைகளும்
அலவ னுமென் றவிர்முழந் தாள்களும்
காகளம் மகரம் பொருகணைக் கால்களும்
தராசுத் தட்டொடு தெங்கிளங் குரும்பை
யெனத்திகழ் கறண்டையும் எலுமிச் சம்பழம்
புரையுங் குதிக்காற் பொற்பும் ஆமையும்
செம்பஞ் சும்அன்ன சீரடித் துணைகளும்
மஞ்சட் கொம்பென வயங்கும் விரல்களும்
சிப்பின் நிரைபோற் றிகழ்நகப் பந்தியும்
மானுறழ் கண்ணார் மாந்தளிர் மேனியிற்
பாதி யாமெனப் பகர்ந்தனர் பாவலர். 38

ஒளிரிள மடவார் உவமையிற் சிற்சில
அகப்பொருட் பகுதியில் அறைந்தனம் அன்றே. 39

செந்தா மரையென் றடிகளைச் செப்பலும்
கால்உகிர் மதியெனக் கழறலும் தெய்வத்
தன்மைக் குரித்தெனத் தழுவுநர் சிலரே. 40

ஓந்தி போலும் ஒள்வளை மூக்கென்(று)
உரைத்த லாதிய ஒருவலும் உணர்வால்
அட்டமிச் சந்திரன் அகத்திப் பூஇணை
யாமென லாதிய சேர்த்தலும் அழகே. 41

பொருந்தக் கூறிய புத்துவ மைச்சொல்
தழுவும்கா வலரும் தமராம் எமக்கே. 42

நிகழ்த்தரும் கடவுள் நீதியும் கருணையும்
இரவியும் மதியும் போலும் என்றும்
இயல்உமை இசைதிரு நாடகம் நாமகள்
அணையன என்றும் அம்பரப் பெயர்கொடு
கருநிற முடைத்தாய் மீனெடு காண்டலில்
புணரியும் வானும் புரையு மென்றும்
பற்பல் விதமாப் பகரா(து) உவமை
இயல்பினைப் பகர்தரும் இந்தமட் டடக்கி
உடைமை யியல்பும் உரைக்குதும் சிறிதே. 43

உவமை யியல்பு முற்றிற்று

## 2. உடைமை யியல்பு

### முருகப் பெருமான்

வேலுங் குலிசமும் சூலமும் வில்லும்
அம்புவாள் கேடகம் அங்குசம் பாசம்
தண்டமும் ஆழியும் தவளவா ரணமும்
தகரும் மஞ்ஞையும் சேவலும் கிளியும்
குன்றமும் கடம்பும் குல்லையும் கூதளம்
புனலி யன்னபன் மாலையும் புலவோர்
பகர்ந்துள பிறவும் பரம குருபரன்
ஆகிய முருகனுக்(கு) அறையத் தகுமே. 44

### வள்ளி தெய்வயானை

வானவர் தருமகள் வலக்கையில் நீலமும்
குறமக ளிடக்கையில் குளிர்தா மரையும்

வீர வாகு முதற்பகர் விறலோர்க்(கு)
அம்புவில் உடைவாள் ஆதியும் உரித்தே. 45

## கணபதி

அறுகும் கொன்றையும் அங்குச பாசமும்
அம்புலிச் சடையும் கொம்பும் கனியும்
ஆகுவும் மயிலும் ஆனையும் சிங்கமும்
ஆய பரிகளும் அளவில்பே ருண்டியும்
மருங்கிற் றேய்வுறும் வல்லவைச் சத்தியும்
பின்னும் பெரியோர் பேசிய பிறவும்
களிற்று மாமுகக் கணபதிக் குரித்தே. 46

## சிவபிரான்

கொன்றையும் தும்பையும் கொக்கிற(கு) இளமதி
கங்கை யாதிய கவின்றரு சடிலமும்
வெண்டலை என்பு விடப்பணி ஏனக்
கொம்பு கூர்மத்(து) ஓடுஇவை குலவி
மார்பு மழுமான் வளர்கனல் சூலம்
கபாலம் தோய்தரு கைகளும் கரித்தோல்
புலித்தோ லாதியும் பொலிந்தவெண் ணீறும்
முக்கணும் குயில்பொரு மொய்குழல் பாகமும்
இடபமும் களிறும் இவர்த லாதிய
பிறவும் பொன்மலைப் பிஞ்ஞகற் குரித்தே. 47

## உமையவள்

அங்குசம் பாசம் அகல்வாய்ப் பாம்பு
சூலம் கபாலம் சுடர்மணிப் பைம்பூண்
கரும்பொடு பூங்கணை கனற்கட் சீயம்
ஏறுஇவை முதலாம் எண்ணில்பல் பெருஞ்சீர்
வெள்ளிவெற் பினன்பால் மேவினட் குரித்தே. 48

## திருமால்

பொன்னு லாடையும் பூணும் பொறியராப்
பள்ளியும் கலுழப் பரியும் பார்மகள்
பூமகள் சேர்க்கையும் பொருவில் ஆழியும்
சங்கமும் தண்டும் தனுவும் கட்கமும்

கவுத்துவ மணியும் கடிமலர்த் துளவமும்
மற்றும் பாவலர் வகுத்தபல் சிறப்பும்
மூதுல களிக்கும் முகுந்தனுக் குரித்தே. 49

நிலமகள்

விரிகடற் றூனையும் வெற்பாம் முலைகளும்
சோலை யாய சுரிகுழற் பெருக்கும்
நீதி குன்றா நெடுவேல் மன்னன்
ஊராம் முகமும் உயர்புவி மகட்கே. 50

திருமகள்

பொன்னொடு நவமணிப் பொலிவும்நெற் போரும்
அன்னமும் பாலும் அடலும் ஆக்கமும்
செந்தா மரைமுதற் செப்புவ பிறவும்
திருமால் மார்புடைச் செய்யவட் குரித்தே. 51

பிரமன்

கமலப் பூவும் கடத்தொடு மறையும்
ஓதிமப் பரியும் உயர்ந்தோர் கூட்டமும்
நாமகள் சேர்க்கையும் நான்கு முகமும்
அன்னசீர் பிறவும் அயன்றனக் குறித்தே. 52

நாமகள்

புலவோர் நாவும் பூத்தவெண் கமலமும்
பளிங்கு வடமும் படிக்கும் சுவடியும்
கலச மாதியும் கலைமகட் குரித்தே. 53

மன்மதன்

மதியும் கிள்ளையும் வசந்தனும் குயிலும்
கடலும் அன்றிலும் காரிருட் பெருக்கும்
வண்டும் கரும்பும் மலர்க்கணை ஐந்தும்
வகுள மாலையும் மங்கையர் கூட்டமும்
கேதகைப் பூவும் கிளத்துவ பிறவும்
அன்னத் திவரும் அணங்கும் அங்கசற்(கு)
உரியன வாம்என் றுரைத்தனர் உணர்ந்தோர். 54

இன்னபஃ றேவர் எழிலெலாம் விரிக்கில்
சிற்ப மாகும் செயலெலாம் செப்பில்
புராண மாகும் ஆதலிற் பூவின்
மாந்தர்க் குரிமை வகுக்குதும் சிறிதே. 55

## துறவறத்தோர்

காவிக் கொடியும் கவிகையும் கைக்கொளும்
நெறிக்குள மணிகளை நிறையக் கோத்த
மாலையும் அன்றி வழிபடுங் கடவுட்கு
உரியசின் னங்களுட் கொளத்தகும் பாற்றும்
மாதவர்க் காமென வகுத்தனர் வல்லோர். 56

## அந்தணர்

அருமறைக் கொடியும் அம்புய மாலையும்
பொன்னிறக் கவிகையும் பூசுரர்க் காமே. 57

## அரசர்

செந்நிறக் குடையும் செச்சைமா லிகையும்
சரபக் கொடியும் தரையெலாம் புரந்து
பொருமவர்க் கெமனும் புரவலர்க் குரித்தே. 58

## வணிகர்

முல்லையந் தாரொடு முத்துக் கவிகையும்
துலையெனப் பொறித்துள தூசுக் கொடியும்
வணிகருக் காமென வகுப்பது முறையே. 59

## வேளாளர்

மேழிக் கொடியொடு வெண்ணிறக் குடையும்
காவி மாலையும் கங்கைசே யினர்க்கே. 60

## புலையர்

கருநிறக் குடையொடு காக்கலம் பூவும்
பன்றிநா யெழுதிய பதாகையும் பச்சூன்
சேற்பிண மாதிய தின்பார்க் காமே. 61

### பொது

வேப்பந் தாரொடு மீன்கொடி வழுதியர்
கொண்ட முறையே தனித்தனி கொள்வார்க்(கு)
அம்முறை கூறுதல் அழகா மன்றே. 62

தனிவேல் சக்கரம் தவளப் பெருங்குடை
மன்னருக் கெல்லாம் வகுப்பதுந் தகுமே. 63

மாந்த ருடைமையும் மட்டிற் சுருக்கிப்
பனுவ லுடைமையும் பகருதும் சிறிதே. 64

குலம்நிலை அருத்தம் என்னு மூவகைத்
தாய்அந் தணன்பிர்ம சாரி யறமுதற்
பகருமுந் நான்கும் நூல்களுக் குரித்தே. 65

பல்வகை நெறிகளும் தொழிலும் பண்பும்
நூற்குரித் தென்று நுவன்றனர் பெரியோர். 66

### தசாங்க வகை

மலைநதி நாடு நகரம் வாரணம்
பரிகொடி மாலை யானை தொழிலிவை
பத்தும்த சாங்கம் படைகுடை முரசம்
பெயர்முதற் சிற்சில பிறழலும் வாய்பாடு
ஆயினும் அத்தொகைக்கு அதிக மாகா
பிரபந்த முகப்பிற் பேசப் படுபவே. 67

### தூது

மனம்தாய் தோழி வண்டுகிளி அன்னம்
ஆதிய மதவேட்(கு) ஆற்றுர் அனுப்பும்
தூதினுக் கிசைவாம் தோலா வீரமும்
ஊக்கமும் உணர்ச்சியும் உடையான் ஒன்னலர்
ஊரிடை போய்த்தூ துரைத்தற் கிசைவே. 68

மங்கைய ராடலை மழையைச் சோலையை
வெய்யிலை நிலவை விளம்பும் மற்றைய
நலங்களைக் காவிய நாப்பண் விரித்துப்
பேசுதல் பெருமை யாதல் போலக்

காளி யூட்டைக் கள்ளுக் குடியைச்
சேரி யாதியின் செயல்களை விரித்துக்
கூறுதல் இழிவாம் என்பது குறிப்பே. 69

மெய்யிடை பொய்யும் பொய்யிடை மெய்யும்
விரவக் கூறுதல் மேதகு பனுவற்(கு)
உரிமை யல்லவென் றுரைப்பது வழக்கே. 70

பொய்யே கூறினும் பொருந்தக் கூறலும்
மெய்யே கூறினும் விளங்கக் கூறலும்
காவியப் பகுதி யாமெனல் கணக்கே. 71

உடைமை யியல்பை உரைத்தமட் டொடுக்கிக்
கற்பனை யியல்பைக் கழறுதும் சிறிதே. 72

உடைமை யியல்பு முற்றிற்று

## 3. கற்பனை யியல்பு

உவமையின் சார்ப தாகித் தொழிலுடன்
திகழ்வது கற்பனை யென்பது சிறப்பே. 73

எவ்வகைச் செயலையும் பொறுக்கும் எழிற்றரை
ஒவ்வோர் காலத் தொள்ளிய வெயிலொடு
கூடித் தீயெனக் கொதித்துக் கொல்வது
பேதையர் வைதிடும் பிச்சையூண் உண்பார்
மன்னரை வீரரை மலரோ னாதிய
தேவரை அருள்கொடு சினம்வரிற் செகுத்தல்
போலுமென் றுரைப்பது பொருந்துகற் பனையே. 74

வரவுகொண்டு யாதும் மற்றையர்க் கீயார்
மனையிடை திருடர் வந்துவந் துழக்கிப்
பொருளெலாங் கவர்தல் பொருப்புநீர் புகப்பெற்(று)
ஒருபயி ரேனும் வளரா உவரியை
எழுமுகில் உண்கைக் கிணையா மென்றலும்
கற்பனை யாமெனக் கழறுதல் இயல்பே. 75

நற்பொருள் பொல்லார் நடுமனை புகுங்கால்
தீய தாதலும் தீப்பொருள் நல்லார்
இடம்படில் பலர்கொண்(டு) ஏற்ற மாதலும்

கடல்கொளும் நதிப்புனல் கார்கொளும் உவர்ப்புனல்
போலும் என்கையும் பொருவில்கற் பனையே. 76

மலைக்கே வான்முகில் வரல்போற் பெரியோர்
இடத்தே மெய்ப்பொருள் இலங்கும் எனலும்
கற்பனை யாமெனக் கழறத் தகுமே. 77

மறுவுரு மதியம் ஆறு போலும்
முகமுறு குகவேள் என்கையும் ஒருவகைக்
கற்பனை யாமெனக் கருதுநர் சிலரே 78

கீழ்திசை வடதிசை யாகிக் கிளரொளி
இரவியும் உதிப்பினும் இயற்றமிழ்ப் பொதுமறை
ஆயவள் ளுவன்சொல் அறிந்த மேலோர்
கொலைபுலை நலமெனக் கூறு ரென்கையும்
ஒருசிறப் பாகுமென் றுரைப்பார் உணர்ந்தோர். 79

கற்பனை புலவோர் கருத்தி னளவாம்
அஃதையும் விரித்திடில் அனந்த மாமே. 80

இவ்வணம் பகர்ந்திட லின்ன கற்பனை
என்றன ராம்சிலர் யாமுணர் காலைஅப்
பெயரும் கற்பனை யெனப்பிறங் கினவே. 81

கற்பனை மீதொரு கற்பனை கூறுதல்
இயல்பெனக் காண்கிலம் எங்ஙனம் அவற்றிற்(கு)
இசைய லாகுமென் றெண்ணுநர் சிலரே. 82

வியனுற விளம்பிட லனைத்தும் கற்பனை
என்னும் புலவோ ரெமக்கினி யோரே. 83
கற்பனை நிலையிவண் கழறினம் அடுத்தினி
நிகழ்ச்சி யியல்பினை நிகழ்த்துதும் சிறிதே. 84

கற்பனை யியல்பு முற்றிற்று

## 4. நிகழ்ச்சி யியல்பு

### அதிகாலை

வைகறை நிகழ்வன சேவற் றெனியும்
காகம் ஆந்தைக் கதறலும் வலியான்
இசையும் கூகையும் கள்வரும் இருப்பிடம்

தேடலும் காளையர் சிறுமிய ரெனுமிவர்
பிரிவது கருதிப் பெருமூச் செறிதலும்
வைதிக நெறியினர் மகிழ்ச்சியும் பிறவுமே. 85

## காலை நேரம்

கதிரவ னுதித்துள காலையில் நிகழ்வன
தாமரை மலர்தலும் சற்குரு பரனருள்
குறிப்பார் தங்கரம் குவிதலும் அவரவர்
தம்தொழில் முயல்வதும் சலதியும் குறைமதி
ஒளியும் காமமும் ஒடுங்கலும் உடுவினம்
அனைத்தும் மறைதலும் அன்னசீர் பலவுமே 86

## நண்பகல்

அதனதன் நிழலதன் அடியிலாம் பொழுது
அருந்திறல் வீரருக் காண்மை மிகலும்
துறவிகள் வீதிகள் தோறு மேற்கையும்
வழிநடப் பவரெலாம் மரநிழல் சார்தலும்
அங்காடி வணிகருக்(கு) அரைத்துயில்(வு) அணுகலும்
சிற்றில் விட்டெழுந்து சிறூர் நுதல் வெயர்ப்பத்
தாயர்முற் போய்அவர் தரும்பால் அருந்தலும்
உழவர்ஏர் அவிழ்த்தல் ஆதியும் ஒளிருமே 87

## மாலைப் பொழுது

மாலையிற் செக்கர் மதியுடுத் தோற்றமும்
காவி மலர்தலும் கமலங் குவிதலும்
கள்வரும் காமனும் களித்தலும் கற்ரு
மேய்ந்துதன் கன்றினை விரும்பிச் சேறலும்
பாலரொடு கலைமகள் பள்ளிக் கூடம்
விட்டு நீங்கலும் வேலைமிக் கார்த்தலும்
வாவலும் கூகையும் வல்லிய மாதியும்
திரிதரத் துவக்கலும் சீதான் போலும்
இருள்வர லாதியும் இயங்கும் அன்றே. 88

## நள்ளிருள்

பாதி யிரவிற் பசாசரும் அரக்கரும்
உரகரும் களித்தலும் உரைக்கரும் உயிர்பல

கண்துயின் றயர்கையும் அன்றிக் காயாம்
பூமலர்ந்து நொச்சிப் பூஉதிர் வுறுமே. 89

## வசந்த காலம்

தென்றல் உலவலும் தேமா வகுளம்
ஆதிய பூத்தலும் அன்றிலும் குயிலும்
கூவலும் கொங்கை குளிர்தலும் கலவ
மயிலினம் வாடலும் வாவியும் நதியும்
வறத்தலும் பிறவும் வசந்த காலத்
தன்மை யாமெனச் சாற்றினர் புலவோர். 90

## காற்றுக் காலம்

நவ்வலும் தாழையும் நலங்கொடு குலவலும்
பட்டமும் கறங்கும் பரவலும் பஞ்செனு
வெளிறிய முகிலினம் வெருவி யோடலும்
காக மாதிய கடலிடை வருந்தலும்
கொட்டிலும் சோலையும் குடையும் குன்றலும்
மாழை யுலகமும் மண்ணுல காதலும்
ஆதிய காற்றுக் காலத் தணிகளே. 91

## மழைக் காலம்

தாய்வயிற் சேயெனத் தழைபயிர் மிளிர்தலும்
மண்டுகம் ஆர்த்தலும் மயிலினம் ஆடலும்
குயிலும் குரங்கும் கொடுவிடப் பாம்பும்
மெலிதலும் புனல்வள மிகுத்தலும் மின்னார்
தனந்தொறும் வெப்பம் தழைத்தலும் தனுவெனக்
காணும் முதுகினர் கனற்றுணைக் கொளலும்
சிற்றுயி ரினம்பல சிதைதலும் பெருகலும்
வெய்யிலும் நிலவும் மிகுத்தலும் கெடுதலும்
அன்னசீ ரனந்தம் ஆகும் அணிமழைக்
காலத் தென்னக் கழறினர் கற்றோர். 92

## பனிக் காலம்

கமல மாதிய கருகலும் அறுகொடு
மூங்கி லாதிய முத்தணி காட்டலும்
வெண்சுட ரிகழ்ச்சியும் வெய்யோன் புகழ்ச்சியும்
காமக் கடலும் கரைபிறழ்ந் திடலும்

முயலினம் மகிழ்தலும் மொழிவன பிறவும்
பனியில் நிகழ்வன என்றனர் பாவலர். 93

செங்கோல் மன்னனும் சீரிய குரவனும்
வளர்நாள் உலகிடை வண்மை யாவும்
பெருகுமென் றுணர்ந்தோர் பேசின ரன்றே. 94

கொடுங்கோல் வேந்தனும் கொலைத்தொழிற் குரவனும்
மகிழ்வில் புவியொடு மன்பதை யழுமே. 95

தெய்வக் குறிப்பில் திரள்தோள் மன்னனும்
மன்னவன் மொழிவழி மாந்தரும் நிகழ்கை
பழமை யாமெனல் பழுதிலர் வழக்கே. 96

இவ்வகைத் தாகும் இயல்பா நிகழ்ச்சியின்
பகுதியும் கோடையிற் கல்மழை பெய்தல்
ஆதி யாய மாறுபடும் நிகழ்ச்சியும்
அறிவது புலவோர்க் கான முறையே. 97

நிகழ்ச்சி யியல்பு முற்றிற்று

## 5. ஆக்க இயல்பு

அணுயினுக்(கு) அணியாம் ஆக்கம் கூறுதற்(கு)
அமையா வாயினும் அறைகுதும் சிறிதே. 98

அடிதொழுந் தொண்டர் அட்டமா சித்தியும்
முத்தியும் பெறச்செயல் முதல்வற் காக்கமே. 99

இரக்கமும் சுத்தமும் இறைவனை மறவாத்
தொண்டும் தூய்மையும் துறவோர்க் காக்கமே. 100

சுவைமிகச் சொல்லலும் சொற்படி முடித்தலும்
புலவருக் காக்கும் என்னும் புவியே. 101

உலகெலாம் புரக்கும் ஒருவன் உந்தியந்
தாமரை பயந்த சதுமுகன் பகர்நூல்
பைம்புல் தின்னும் பசுமுதற் பல்உயிர்க்
கொன்றுவெந் தருந்தக் கூறு தென்னும்
உண்மைநன் குணர்கை உயர்குலத் துள்ளார்க்கு
ஆக்க மாகுமென் றறிவது கடனே. 102

சிட்டரைச் சேர்த்தலும் துட்டரைச் செகுத்தலும்
மற்றோர் வேந்தனை வணங்காக் கொற்றமும்
அச்ச மின்றி அனைவரும் காண்டற்கு
எளிய னாகி இறுமாப் பொழித்து
நெறிவழாஅ தொழுகல் ஆதியும் நெடுவேல்
மன்னருக் காக்கம் என்றனர் வல்லோர் 103

தேனீ யாமெனச் சேர்த்த பொருளைக்
காரிய மறிந்து களிறெனச் சிதறல்
வணிகர்ஏ றன்னான் மாண்பெனல் வழக்கே. 104

ஊக்கமும் முன்பின் உறுவன உணர்தலும்
பகிர்ந்தினி தருந்தலும் பைங்கூழ் விளைத்தலும்
வேளா ளர்க்காய் என்பது துணிவே. 105

கழியூன் வேண்டிக் கடைபடு குலத்துள்
அஃதிழி வாமென் றறிந்தற வெறுப்போன்
ஆக்க வானென் றறைந்தனர் அறவோர். 106

புகர்மலிந்(கு) இருகோ டேந்திப் பொறுப்பெனப்
பொழிந்தெழு காலெனப் புழக்கையும் குறியும்
வாலும் தரைதொடல் மதகரிக் குயர்வே. 107

வாவிக் காக்கம் வனசமும் குவளையும்
கோவிற் காக்கம் குலவு கோபுரம்
நாவிற் காக்கம் நன்மொழி யுரைத்தல்
பூவிற் காக்கம் பொலிநறை வண்(டு)என
விரியா தடக்கினம் ஆயினும் வியன்றமிழ்
உரிமை யாளர் உணர்வது கடனே. 108

ஐந்தாம் இலக்கண மாகும் அணிமுடித்(து)
ஆறும் இலக்கணத்து ஆவல்கூர்ந் தனமே. 109

ஆக்கவியல்பு முற்றிற்று

ஆக அணியிலக்கணம் சூத்திரம் 109

ஆறுவது

# புலமை யிலக்கணம்

## நூற்காப்பு

அலகிலா மறைகட் கன்னேயாகி
யிலகு பாரதிக் கிலக்கண மிசைத்தவள்
கொழு நனுர் தலேகுலுங்கக் குட்டிய
கடவுளிணே யடிக் கமலம் போற்றிப்
புலமை யிலக்கணம் புகலுதுஞ் சிறிதே. 1

அறியுந் தன்மையைப் புலமை யாமெனப்
பற்பல பெரியோர் பகர்ந்தன ரன்றே. 2

தேற்றந் தவறு மரபு செயல்வகை
யெனுநால் வகைத்தா யியம்பலும் புலமையே. 3

தேற்ற மென்பது புலவனுமா
ருதலினம் முறை முதற் கூறுதுமே 4

புலமையி னுசை பொலிந்தோ ஞெருவ
னத்தொழிற் பெரியோர்க் காட்படனலமே. 5

அக்கர முதற்கொண் டணியீருகப்
பகரு நூலும் பாவலர் முன்பிற்
கற்கை நலமெனக் காண்பது கடனே. 6

நூலின் றுணேயினு நூறுபங் கதிகந்
தெய்வத் துணேயாஞ் செழுந்தமிழ்க் கவிக்கே. 7

கணபதி முருகன் கலேமக ளுமையவள்
பரமன் பரிமுகப் பகவ னென்னு
மறுவகைத் தெய்வமு மருந்தமிழ்ப் புலமைக்
குரியவா மென்றுரைத்தன ருணர்ந்தோர். 8

நூற்பகை கொள்ளினு நுண்ணிய புலமைச்
சீரியர் தம்பகை சிறிதுமா காதே. 9

சோம்பலும் துயிலும் சுரிகுழல் மடவார்
மோகமும் கலியும் முன்வந் தடுப்பினும்
அஞ்சார் செந்தமிழ் ஆணிப் பொன்னே. 10

குறைபடும் புலவோர் கூறுங் குற்றம்
அஞ்சிப் பாடா தயப்பது பிழையே. 11

உண்மைப் புலவோ ருரைசெயும் உபாயம்
நண்ணிக் கொள்வது நலமிகத் தருமே. 12

தெய்வத் துதிவழி தேருப் புலமை
நைவும் சிறுமையும் நாணமும் தருமே. 13

சிந்தையின் மயக்கம் தெளியா முன்னம்
சித்திரம் பாடில் அஃதும் தீதாய்
மற்றைய கவிகளின் வனப்பும் குன்றுமே. 14

குரவன் கடைவரி கொடுக்க வாங்கி
மற்றைய மூன்று வரிகளும் பாடி
அவனெ மூத்தாணி அவற்றைத திருத்தற்
கண்டுதேறு நன் கவிநய முறுமே. 15

நாடகம் கொச்சகம் ஆதிய தொட்டுப்
பாடல் இனிதெனப் பகர்வது முறையே. 16

விருத்தப்பா நிலை தேறுமுன் கட்டளைக்
கலித்துறை யாதிய கழறுதல் பிழையே. 17

ஆசிரியப்பா வதனிலை யறிந்து பின்
கலிப்பா வெண்பா கழறத் தகுமே. 18

வெண்பாவ தனிலை விளங்கு முன்னம்
வண்ணம் பாடுதல் வழக்கம் அன்றே. 19

பிரபந்தத் தொகை பேசித் தேறிக்
காவியம் பாடிற் கழிவு படாதே. 20

காவிய நிலைகளும் கண்டு தேறி
நூலினம் பகர்வது நுண்ணிமை யாமே. 21

சொல் நிறம் தன்னெஞ் சறியத் தோன்று
அளவும் புலமையின் அவாவடங் காதே. 22

எவ்விதக் கவிகளும் பாடும் இரும்திறல்
வரினும் பனுவலை மறுத்தும் தானே
யெழுதா நலம் நினைத் தேங்கலியல் பே. 23

பாடம் எழுதலிற் பட்டோலை வாய்ப்பினும்
தடையற வொருவன் எழுதச் சாற்றல்
அரிதாம் அதுவரை அறிவுத் தன்மைப்
புலமையா மெனப் புகல்வது துணிவே. 24

கால மழையெனப் புதுக்கவி கழறலும்
சொற்படி நடக்கக் கண்டாலும் பிறவும்
தெய்வத் தன்மைப் புலமையா மே 25
கருதிய தெய்வம் கண்முற் ரேன்றிப்

பேசின் அல்லது பெருந்தகைப் புலமை
யெய்தா தென்றிட லியல்பாம் அன்றே. 26

தெய்வந் தோன்றியுஞ் சிறுநலந் துய்த்து
மறுத்தும் நல்லார் வயிற்றுட் புகுவது
பேதைமை யென்பார் பெரும்புல வோரே. 27

அருள்வலிப் புலவராமென விளங்கியும்
பொருளுடைச் சிலர்பாற் போவ திழிவே. 28

சொற்சுவை யுணரான் தோள்வலிச் சுடர்வான்
மன்னனுயினும் அஃதுணர் மாந்தரில்
தாழ்வென வுணர்வான் தக்க புலவனே. 29

தமிழ்ச் சுவையறியாத் தெய்வம் உளதெனில்
அஃதுணர லகையில் தாழ்வெனல் அறமே. 30

வண்ணப் பனுவலும் வகுக்கும் பாவலன்
சொல்லில் அருள்வலித் தோற்றம் இலையேற்
பல்வகைத் துயராற் பரதவிப் பானே. 31

சிறுகவி யொன்றும் சிறக்கச் செப்பான்
அலகைத் துணைக் கொண்டாயினும் அருமைச்
செயலொன்றியற்றிற் றெய்வ மென்றவனைப்
பற்பலர் இறைஞ்சல் பாருல கியல்பே 32

செத்தார் உய்யினும் தீஞ்சுவை யில்லாப்
பாடலின் மருளாப் பான்மையர் சிலரே. 33

வாக்குச் சுவையுடன் அருட்டிற மன்னும்
புலமைத் தேற்றம் பொதிய மால்வரைக்
கடவுள் மாமுனிவனைக் கைதொழில் வருமே. 34

## தவறியல்பு

சாரா தொழிப்பான் தவறியல் புரைக்குதும்
பேரா நலமெனப் பிணங்க வொண்ணாதே. 35

நவின்றும் அங்ஙனம் நடக்கக் காணாப்
புலமைத் தன்மையும் பொருவில் மெய்யரு
ளாமெனக் கருதும் அஃதோர் பிழையே. 36

எள்ளிடைப் புலமை யிசையு முன்னம்
நெல்லிடை யாண்மை நிலவ லோர்தவறே. 37

காகப் புள்ளென வினத்தொடு கலவாது
ஞாளி போற் பகைக்கும் நாவலர் பலரே. 38

தமிழறி புலவோர் தங்க ளுறவினும்
பொருளுடை மன்னராதியர் பொய்யுற
வுயர்வெனக் காண்பான் ஒள்ளிய பனுவற்
காரனெனினும் கடைப்படு மன்றே 39

தேருப் புலவனைச் சிந்தை நோவப்
படுத்தும் பாவலர் பதரனை யாரே. 40

சீரிய புலவர்தம் செஞ்சொற் றிருடிப்
பாழ்த்த புன்கவி பகர்வோற் பலரே. 41

துட்டப் புலவரைச் சோழன் வழுதி
அன்னமன்னர் தம் அவையிடைக் கொடுபோய்
முறைப்படி வென்று மூளி யாக்கான்
செவ்விய புலமைத் திறம் பாழ்படுமே. 42

தோல்வி யேற்றுத் தொழுமொரு புலவன்
காது கொய்தலுங் காரியமன்றே. 43

முற்றும் பொறுத்தலு மூக்கிற் கோபம்
வைத்துத் திரிதலும் வண்டமிழ்ப் புலவர்க்
காய தன்மை யென்றறைய வொண்ணுதே. 44

காமக் கடலே கதியெனக் கருதிப்
போவார் புலமையிற் புண்ணிய மின்றே. 45

தெய்வப் புகழும் சிறப்புஞ் செந்தமிழ்
பொருத்து மென்றுணராப் புலவர் புல்லியரே. 46

மாய்வார்ப் போற்றி மகிழும் பாவலர்
வன்னச் சிவிகையில் வையகம் படைத்தோற்
கழறும் பாவலர் கை ஓடுயர்வே 47

கொல்லலூன் சமைத்த லாதிய விரித்துக்
கழறுந் துணிவுடைக் கவிப் புலவோரைப்
பேய ரென்றுலகம் பெரிதிகழ்ந் திடுமே. 48

புகலரும் பனுவற் பொற்பணங் கருதி
விற்கத் துணிவது மேம்பாடன்றே. 49

அருமை அறியான் அவையிடைப் புகுந்து
பெருமை பாராட்டலும் ஏனையும் பிழையே. 50

கால வேற்றுமை கருதாப் புலவன்
சீலனே யெனினும் சிறுமை யினனே. 51

காரணம் காரியம் காணுப் புலமையைப்
பூரணம் என்னப் புகல வொண்ணுதே. 52

கொண்டதுறை யினைக்கோது படக் கூறின்
மண்டலத்தாரும் மதியா ரன்றே. 53

அருட் பேராளருக் கஞ்சாப் புலமை
மருட்சி யினதென வையப் படுமே. 54

தவ்வா மெய்ப்புகழ் தலைக்கொளும் புலமைக்
கொவ்வா நெறியினை யுறுத்தலோச தவறே. 55

வீணே விரிப்பினும் விரித்தலைச் சுருக்கினும்
மாணுர் புலவோர் மதியா ரன்றே. 56

வெளிறப் பாடலும் வேறொரு கலையென
இருளக் கூறலும் இடத்தால் இசையுமே. 57

தன்னுடைச் சமயத் தலைவனைப் பரவா
நூல்வழிப் புலமை நுவல்கையுந் தவறே. 58

பொதுநூற் சொல்லையும் போற்றுநர் மொழியையுஞ்
சது ரல வேயெனச் சாற்ற லோர் தவறே. 59

பொருணயந் தோன்றும் பொருட்டிற் பொதுநூல்
கலையுணர் மாக்கள் கழறுங் காதை
பற்றிப் பேசப் படாதெனல் பழுதே. 60

சேவித் தொருவர்பின் செல்வார் புலமையிற்
பாடல் விற்றலைவார் பரிசுகே டினிதே. 61

பலவகை நயங்களும் பாரா தொருவிதக்
குற்றங் கருதிக் குதிப்பதும் புலமைக்
கிழிந்த பான்மையென் றியம்பிட விசைவே. 62

தமிழ் மொழிக் குயர்மொழி தரணியிலுள தெனில்
வெகுளியற் றிருப்போன் வெறும்புல வோனே. 63

எண்ணப்படுமவற் றெவ்வகைக் கவிகளும்
வண்ணக் கவிபொரு மாண்பின தன்றென்
றிசையார் புலமைக் கிழுக்கு மிகுமே. 64

மற்றோர் புலவன் வாய்த்தமிழ் மனத்திற்
கினித்தும் அவனெதிர் இகழும் பொல்லான்
கொடுமையைத் தெய்வம் குறிக்கு மன்றே. 65

பொருட்குவை குலத்துயர் வரசு பூண் உடை
பாடமாதிய பற்றிப் புலமைக்
குயர்ச்சி கூறலும் ஒவ்வா முறையே. 66

கோங்கரும்பன்ன குவிமுலைக் கோதையர்
தீஞ்சுவைச் சொல்லினும் செந்தமிழினி தென

மனமும் தெய்வமும் அறிய வாழ்த்தும்
புலவர்க்காகா தனவெலாம் புலமைக்
குதவா தனவென் றுணர்வதுமுறையே. 67

## மரபியல்பு

புலமையிற் கரவுதீர் நலம் புகன்றனம்
மரபியல் பதனையும் வகுக்குதும் அன்றே. 68

தெய்வமும் புலமைத்திருவுரு வாமென்
றறியும் பெரியோர்க் கவர்தா மிணையே. 69

பாணனுந் தருமியும் பெத்தானு முய்யப்
பாடியதன்றிப் பைந்தமிழ்க் கழகத்
தலைவனைப் பழித்துந் தனிக் கவி பகர்ந்த
பரமனும் புலவ னெனஃபது பண்பே. 70

கண்டாயோவென மீனவற் கருதிப்
பாடியோர் தொண்டன் பருவரலொழித்த
பனிவரைக் குமரியும் பாவலி யினளே. 71

விழுந்ததுளியெனப் பூமாதென விரு
தொண்டர் முற்பாடியதன்றி யொருவற்கு
அறிவே நனவென் றறைந்தென் கனவினும்
பற்பல பாடல் பகர்ந்தினி தாண்ட
முருகப் பெருமான் முழுதுணர் புலவனே. 72

வெண்மலர்க் கமல மீதுவீற் றிருந்(து)
எவரெவர் கவிகளும் என்ன தென்னும்
நாவின் கிழத்தியும் நாடா முதலென
வெண்பா வொன்று விளம்பின ளன்றே. 73

பொருவருந் தமிழ்ப்பாப் புகலாப் புத்தே
ளிளரும் புலவோ ரெனும்பெயர்க் கிச்சித்(து)
அணிந்து கொண்டமை அறியும்அம் புவியே 74

முத்தமிழ்ப் புலமை முனிக்கோன் பாடலிற்
பெய்வளைத் திருமகள் பின்தொடர்ந் தனளே. 75

செந்நாப் புலவன் செப்பிய பாடலில்
மாயவன் குடிபோய் வந்தனனன்றே 76

என்பு பெண்ணாகவும் ஈனச் சமணர்
வன்கழு ஏறவும் மறைக்கத(வு) அடைக்கவும்
காழியூர்ப் புலவன் கழறினன் தமிழே. 77

நீற்றறை குளிரவும் நெடுங்கை வேழம்
அஞ்சவும் கற்றூண் ஆழியில் மிதப்பவும்
பைந்தமிழ்ப் பாடல் பகர்ந்தா னொருவனே. 78

பரமன் பாங்கனாகவும் முதலை
உண்ட பிள்ளை உயர்ச்சியொ டொளிரவும்
நாவலூர்ப் புலவன் நவின்றன னன்றே. 79

பன்னா டுடையவன் பாண்டி நாடே
உடையே னென்னவந்துரிமை யொ டெழுதவும்
வாதவூர்ப் புலவன் வழங்கினன் தமிழே. 80

பைந்துழாய் போலப் பத்துப் பாவலர்
செப்பிய தமிழ்நூல் தேறிப் பற்பலர்
விரசைக் கப்பால் மேவினர ன்றே. 81

மூவகைக் கழகத் தையா யிரத்து
நானூற்று முப்பத் தொன்பது புலவோர்
வாழ்ந்தன ரெனப் பகர் மாந்தர் பலரே. 82

பொற்றா மரையிற் பொருவரும் பொதுநூல்
வைத்து வென்றளிகூர் வள்ளுவன் புலமை
தமிழுடைப் பலர்க்கும் தாயெனத் தகுமே. 83

படுபலா உருள்பனை பழம்தரப் பைந்தமிழ்
பாடிய கிழவியும் பழுதிலா தவளே. 84

மதுரையூர்க் கடவுள் வையைக்(கு) அப்புறம்
போய்வரப் படித்தான் புலவனொருவனே. 85

தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது
மாதவர் தன்னொடு மாளா வண்ணம்
ஒருதமிழ்ப் புலவன் உரைபயின் றானே. 86

வேறிடத்தாறு விலகி ஓடவும்
கல்லுரு மகிழவும் கவிதை பாடினர்
இருபுல வோரென்றியம்புநர் பலரே. 87

அம்பிகை அடிசில் ஆக்கி இடவொரு
தண்டமிழ்க் கவிஞன் சாற்றினன் துதியே. 88

மலைமகள் வசமற மயிலுடன் அயில்வேள்
கருதிய வயின்வரக் கவிதை கூறினன்
ஒருபுல வோனென் றுரைக்கும் உலகே. 89

செழியன் மனையொடு சிவிகை தாங்கவும்
கழகப் பலகை கண்டும் அமையவும்
சிலைத்தலை யசையவும் செப்பும் புலமை
பொய்யா மொழியின தென்னும் புவியே. 90

செவ்வேற் குருபரன் செம்பொற் பதக்கம்
தருமா ரொருவன் சாற்றினன் தமிழே. 91

வம்பனொருவனார் மண்மழை யதனா
லழியவோர் புல்வ னறைந்தான் றமிழே. 92

மாங்கனி நிமித்த மடிபிடித் திழுத்தோன்
சாம்படி யொருத்தன் றமிழ் படித் தானே 93

வெள்ளியாற் சமைத்த விலங்கு முறிபடத்
தெள்ளிய பனுவற் செப்பின னொருவனே. 94

சூரனார் நடுங்குந் தூதுடை யொருவனைச்
சேரனார்க் கனுப்பிச் செம்பொன் பெற்றுக்
களிகூர்ந் தனனொரு கவிப்புல வோனே. 95

தில்லையூர்ப் பார்ப்பார் சேருமிடத்தொரு
சொல்லை நன்றாக்கும் பொருட்டிற் சூர்ப்பகை
கவிஞ னாவரக் கண்டா னொருவனே. 96

மணிநாவொடு திரை மறைவற வொருவன்
கவிதை பாடிக் களித்திருந் தனனே. 97

கோடி கோடி கொடியார் தலைபொடி
யாகப் பாடின னந்தண னொருவனே. 98

வைவார் பற்பலர் வணங்கலின் மகிழ்ந்தொரு
பாவலன் மழைவரப் படித்தனன் றமிழே 99

செந்தூர்த் திருவுருத் திரும்பிப் பார்க்க
அன்றொரு நாவலன் அறைந்தான் றமிழே. 100

பட்ட புரசினிற் பச்சிலை பறித்து
நட்டதோர் வயலி னடுமழை பெய்வித்
தொரு கவிப் புலவ னுய்ந்தா னன்றே. 101

தூக்கிய மாலையைத் துண்டு துண்டாக
வாக்கினாற் றறித்தோ னோதிய புலவோர்
புகழெலா மறிந்த மட்டிற் புகலினும்
அஃதோர் காவிய மாகு மன்றே. 102

புலமையை யிழிவெனப் புகல்வார் புந்தி
நாணுறும் பொருட்டும் நண்ணுவார் நெஞ்சங்
களித்துக் காரியங் கைக்கொள முயலும்
பொருட்டும் மரபியலிவ்வணம் புகன்றினிச்
செயல்வகை யியல்பினைச் செப்புதுந் தெளிந்தே. 103

## செயல்வகை யியல்பு

### தொழினிலை

தொழினிலை நடுநிலை யெதிர் நிலை யருணிலை
யென்னா நால்விதஞ் செயல் வகைப் பாற்றே. 104

தமிழ்க்குந் தனக்குஞ் சார்தரு நெறிக்குந்
தன்னினத் தினர்க்குந் தவறுறு வண்ணம்
முயல்வோன் புலமை முதன்மைத் தாமே. 105

உலகர்தம் வாய்பாடொருங்கு நீத்தலுஞ்
சேர்த்தலும் புலமைச் சீர்க் கிழிவாமே. 106

அட்டாவதான மெமகண்ட மற்றோன்
கண்டதைப் பாடலாதியிற் கருதுந்
தவமுடிவதன் முன் சருவ வொண்ணாதே 107

கல்லார் மகிழ்வுறக் கவித்திறல் காட்டலில்
வல்லார் மகிழ்தரும் வாசகம் பயிற
லெண் மடங்கு யர்ச்சி யெனத்தகுந் தகுமே. 108

உன்னிய கரும முடனே முடிக்கும்
புலமை யுடையான் புயங்க மன்னனையா
னென்ன மூதுலகே யியம்பு மன்றே. 109

புலமையி னுண்மையும் புகழ்ச்சியுங் கருதிப்
பெறலே பயனெனப் பெரிது நெஞ்சயர் வோன்
பரிதி முன்னுடும் பாம்புக் குருளை
யனையவன் ருனென் றறிவார் சிலரே. 110

அந்நாட் புலவருக்காகிய பெரும்பே
றிந்நாட் புலவர்க்கில யெனுங் கவிஞன்
பாம்புறழ் தோற்றம் படைத்துள மீனே. 111

யாவரும் புலமையி னேற்றந் தோய்வுறிற்
றேவரே யெனச் சிறப்பது திறமே. 112

புலமைத் தொழிலின் புகழெலாம் புலவோர்
தாமே யறிவது சரத மாமே. 113

## நடுநிலை

சுருதியும் புலவோர் சொல்லே யென்றிட
னடுநிலை யாமென நவில்வார் பெரியோர். 114

நன்றிடை தீதுந் தீதிடை நன்மையு
மொன்று மாறுணர்வோ னெவ்வோர் புலவனே. 115

இன்பமுந் தெய்வமு மிடைநிலைப் பொருளெனல்
வன்புடைப் புலவர்தம்வாய்மொழி யாதே. 116

தன் வழக் கெதிர்த் தோன் றன்னுற் சிறை தயினு
மாமெனப் பகர்வா னறிவுடைப் புலவனே. 117

இகலிய புலவோ ரிடை நிலைக் காரன்
வஞ்சகம் பேசின் மதியமு மிரவியு
முள்ளகா லு நிரையத் துழலுமே. 118

பாடவறியார் படிப்பின் களிப்பால்
நாடவர் புகழ்வது நண்ணிப் பொருங்கா
லிடைவரும் புலவோ னிடியே றென்ன
நக்கு மிக்கிகழ்வது நலமா மன்றே. 119

வாதுக் காதர மாகிய வண்ணமும்
விருதுக் காதர மாயவெண் பாவும்
அறியாப் புலவருக் கமர்விளைந் திடுங்கா
லவ்விரு புலவரு மறிந்த பாடற்
றொகையி லொன்றுயர்வது குறித்துக் காட்டிப்
பாடுந் திறமையிற் பழுதுபட் டோனை
மற்றவன் புடைக்கச் செய்து புகழ்வது
தக்க பான்மையென் றுரைப்பது தரமே. 120

வெண்பாத் தோல்வியில் விருதிழப்பதுவும்
வண்ணத் தோல்வியில் வார்செவி யிழப்பதும்
பழமை யாமெனல் பல்லோர் வழக்கே. 121

தேமாங் கனியுறழ் செழுந்தமிழ்ப் புலமையைச்
சுண்டைக் காய்நிகர் சுவையுடைப் புலமையும்
வெல்லு நடுநிலை விளக்கங் காணுப்
புல்லிய புலவோர் பொருந்தவை யிடத்தே. 122

நடுநிலை யனைத்து நாமகள் போலும்
கவிஞர் தமுளத்திற் கவின்றரு மன்றே. 123

எதிர்நிலை

தன்னெதிர் நிலவிய புலவனற் றமிழ்நடை
அன்னவனிரட்டை யாசிரி யத்தாற்
றுலங்கு மெனவுஞ் சொல்வார் பலரே. 124

அளப்பரும் பனுவல கண்ட மாய
நாத சத்தியின னந்தலை கிடந்து
பகர்வார் வரவு பார்க்கின் றனவெனப்
பெரியோர் பர்பலர் பேசின ரன்றே. 125

தில்லைக் கோயிற் றிருமதிட் செல்லாற்
சொல்லை மிக்கிழந்துள தூய பாடற்
கறை மிடற்றண்ணல் கழறக் கேட்டவ
ணிறைவுறச் செய்த னீதியன் றெனப்
பகர்வார் சைவருட் பதரா மன்றே. 126

அருணை யூரனன் றுழியிற் சிதறும்
பனுவலை முற்றும் பார்ப்போன் யாமுங்

குகவேளடிமை யென்று கூறித்
திருத்தகு புலமை செய்வார் தம்மிற்
சீரியோரெனச் செப்பிட விசைவே. 127

குலவுதென் மதுரைக் கோவில் வாவிப்
பலகையோர் புலவன் பார்க்க வந்தமையாற்
கொள்ளத் தக்கவர் கொளத்தகு மன்றே. 128

புணரி யாதிய புனலினுங் கனலினும்
யானோர் நிமித்தத் திட்ட பாடல்
தரத்தகும் புலவன் யாவ னெனினு
மவன்பத மலர்த்துணை யமருமென் சிரத்தே. 129

கொலைபுலை யெனுமிருகோதுங் கொதுகுறழ்
சிறிது மின்றித் தீர்தரப் புலமை
நடவு வானை நரனெனற் கிசையாப்
புந்தி யாளரும் பூதலத் துளரே. 130

கருதிய தெய்வமுங் கருமமுங் கண்ணெதிர்
காணார் புலமையைக் கண்டுங் கயவ
ரஞ்சத் திகழ்நலத் தவாவுற லுயர்வே. 131

எதிரிடுங் கருமத் தியல்பறிந் ததற்குத்
தக்கவா றியற்றத் தகும்பே ரறிவுடைப்
புலவரை யநுதினம் புகழ்வது கடனே. 132

முன்றுநிலையிவண் மொழிந்தன முதல்வ
னருணிலை கூறுவது மறிவுறும் பொருட்டே. 133

## அருள் நிலை

பற்பலர் செவி கவர் பாவலன்றன் கைக்
கொடுவாளருணைக் கோபுரத்திழந்து
தன்செவி யொருவன் றரப்பெற் றானே. 134

அன்னங் கொடுத் தோனருமைக் குருந்தினைக்
குத்திய கவிஞனுட் கோல் புகுந்ததுவே. 135

மன்னவனாணையை மறுத்தோர் பாடற்
சொன்னவுன் கழுவிற் றுடித்திறந்தானே. 136

கவிதை யொன்றாற் கதி ரவன் குலத்து
மன்னவரனைவரு மாண்டன ரன்றே. 137

செத்து நாறிய சினையா டெழுந்து
குட்டி யீனிய கொள்கையும் பிறவு
மாய வருணிலை யடைவதற் கரிதே. 138

சீறியிகழ்வார் தெருத் தலைவாயில்
தோறு மலைவுறீஇச் சுழலும் பாவலன்
செக்கொரு கவியாற் செம் பொன்னாகப்
பாடவுஞ் செய்யும் பழுதிலா வருளே. 139

மன்னரும் வியப்ப மணிமுர சதிர்தரப்
பொன்னெடுஞ் சிவிகை யேறிப் போய்வரு
நாவல னடந்து நாழிநெற் கூலி
கருதி வாடிய காதையொன் றுளதே. 140

மூகை யாய முருந்திள நகைச்சேய்
பாகை நேர்தமிழ் படித்தது முளதே. 141

வாதிடத் தேடி வருமெழு மூவரும்
பேசு நாவின்றிப் பிணம் போலிருக்கக்
கண்ட தருளெனக் கழறுதல் முறையே. 142

தாய் வயிற்றிருந்து தரணியிற் பிறந்த
வுடன்சிலர் பாடிய வொள்ளிய தமிழும்
பாரொடு வானிற் பரந்த தன்றே. 143

அருணிலை முடித்தற் காராலாகு மென்
றஞ்சியிந்த மட்டடக்கிச் செயல் வகைக்
குறிப்பொடு புலமை யிலக்கணங் கூறிக்
கருதிய பயனிற் கருத்தமைந்த துவே. 144

## கலி விருத்தம்

பெறுவது பெறக் கருது பெட்புதவு மொன் றே
அறுவகை யிலக்கண மறைந்த தறிவாரை
மறுவறு தமிழ்க் கடலும் வானொடு கலந்தே
யுறுவதெனருட் கடலு முண்டு கொளு மன் றே.

அறுவகை இலக்கணம் முற்றிற்று.

# பிழை திருத்தம்

| பக்கம் | சூத்திரம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 19 | 43 | எகரம் தேற்றி | எகரமீதேற்றி |
| 20 | 46 | ஏணைக்குறி | ஏனைக்குறி |
| 22 | 55 | யெனல் | எனல் |
| 24 | 70 | பதிஞோராவ | பதிஞுருவ |
| 25 | 81 | ஆகினையீரும் | ஆகினௌவீரும் |
| 29 | 111 | ஐகாரமும் | மைகாரமும் |
| ,, | ,, | ஓவெனும் | மோவெனும் |
| 31 | 119 | உயிர்கட் | உயிர்க்கட் |
| 40 | 5 | கொண்வேந் | கொண்டுவந் |
| ,, | ,, | கொணர்ந்தென் ருனதும் இனை யன பலவும் | கொணர்ந்தென்ருனதும் ஏனடிஎன்கை, எண்டியென்ருனதும் இனையன பலவும் |
| 41 | 10 | அரண்மணை | அரண்மனை |
| 43 | 18 | உவண் | உவன் |
| 44 | 23 | வாசகம் | வாசக |
| 46 | 36 | சுரும்பர்— பொதும்பர் | சுரும்பர், பொதும்பர் போல்வனவும் கொள்க. |
| 47 | 41 | வால் முதல் | வரல் முதல் |
| 48 | 59 | வியனச் சொல் | வியன்சொல் |
| 51 | 70 | அறிந்து(அ) வான் | அறிந்தணிவான் |
| ,, | 70 | சொற்றறிது வயினே | சொற்றதிவ்வயினே |
| 54 | 79 | தொழிந்த | தெளிர்தரும் |
| 55 | 84 | அமுதமெனக் | திமுதமெனக் |
| 55 | ,, | (குறிப்புரை) ஒத்துக் | ஒலித்துக் |
| 57 | 94 | மலையெனக் கமஎனப் | மலையெனக் கலையெனக் கமவெனப் |
| 58 | 101 | அவற்றென | அற்றென |
| 59 | 104 | உயர்ச்சி தாழ்ச்சியை | உயர்ச்சியை தாழ்ச்சியை |
| 60 | 108 | காப்பொருள் | கப்பொருள் |

| பக்கம் | சூத்திரம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 60 | 110 | சொல் எனல் | கொல் எனல் |
| 61 | 1 | சிறிதேத் | சிறிதே |
| 63 | 13 | டுவைகை | டுவகை |
| 63 | 15 | தடும் போர் | தரும் போர் |
| 63 | 19 | இழங்கிழை | இலங்கிழை |
| 78 | 3 | பிறழ்ந்தும் | பிறங்கினும் |
| 79 | 7 | தாகி | வாகி |
| 81 | 24 | யாம்பகா | யாம்பகர் |
| 85 | 50 | கறுபல் | கதுபல |
| 85 | 53 | கூறித் | கூறத் |
| 85 | 56 | ஆள் என | ஆள் எனப் |
| 89 | 89 | உகரமும் எகரமும் | உகரமும் ஒகரமும் |
| 89 | 93 | றகரமும் | நகரமும் |
| 92 | 112 | தனிமை | தன்மை |
| 96 | 17 | அணையான் | அனையான் |
| 98 | 33 | எழுவன | எழுவென |
| 98 | 39 | ஒளிரிள | ஒளிரிழை |
| 99 | 42 | தழுவும்கா | தழுவும்நா |
| 99 | 43 | அணையன | அனையன |
| 108 | 93 | பனியில் | பனியால் |
| 108 | 101 | காக்கும் | காக்கம் |
| 109 | 105 | ளர்க்காய் | ளர்க்காக்கம் |
| 109 | 107 | புகர்மலிங்(கு) | புகர்மலிந்து |
| 109 | ,, | புழக்கையும் | புழைக்கையும் |
| 110 | 3 | யியம்பலும் | யியம்புதும் |
| 112 | 25 | காண்டாலும் | காண்டலும் |

# சூத்திர முதற் குறிப்பு அகர வரிசை

[ எண் - பக்க எண் ]


| | | | |
|---|---|---|---|
| அக்கர முதற் | 110 | அணியினுக் | 108 |
| அகப்புறச் | 77 | அணிற்ரெனி | 74 |
| அகப்புறம் | 77 | அதனதன் | 106 |
| அகப்பொருள் | 61 | அது இது | 77 |
| அகப்பொருளிலக் | 61 | அந்நாட் | 120 |
| அகம் எனும் | 77 | அந்நூல் | 88 |
| அகம் புறம் | 77 | அம்பிகை | 118 |
| அகர ஆகாரத் | 27 | அம்மா அந்தே | 49 |
| அகர ஆகாரம் | 38 | அம்மானே | 82 |
| அகர உகரம் | 38 | அயல் படு | 55 |
| அகர ஒகரம் | 20 | அரன் குகன் | 95 |
| அகரக் குறில் | 89 | அருட் பேரா | 114 |
| அகரத் தீறு | 19 | அருணையூரனன் | 121 |
| அகரத்து | 24 | அரும்பொருள் | 78 |
| அகரப் பிறப் | 23 | அருமகள் | 62 |
| அகரம் சேய்மை | 28 | அருமறை | 102 |
| அகரம் பதினெட் | 24 | அருமையறி | 114 |
| அகரமும் இகரமும் அணை | 23 | அருள் நிலை | 123 |
| அகரமும் இகரமும் உக | 22 | அருள் வழி | 112 |
| அகரமும் இகரமும் | 23 | அருளும் | 75 |
| அகரமும் எகரமும் | 89 | அலகாதி | 26 |
| அகரவுயிர் | 38 | அலகிலா | 110 |
| அகவலிற் | 79 | அல்கினத் | 21 |
| அகவற் | 79 | அவர்கள் | 44 |
| அங்குசம் | 100 | அவரிவர் | 44 |
| அங்ஙனம் | 45 | அவனவள் | 66 |
| அசைகளிற் | 49 | அவனிவள் | 43 |
| அட்டாவ | 119 | அவனிவன் | 43 |
| அடல்மிகு | 50 | அளப்பரும் | 121 |
| அடிகளினீற் | 88 | அறம் பொருள் | 92 |
| அடிதொடை | 84 | அறியுந்தன் | 110 |
| அடிதொழுந் | 108 | அறிவிடத் | 77 |
| அடுக்கிய | 76 | அறுகுங் | 100 |
| அணிநிலை | 95 | அன்னங்கொடுத் | 122 |
| அணியிழை | 62 | அன்னம் | 95 |

அன்னமென் 63
அனுபல்லவ 85
அஃறிணை 46
அஃறிணைப் பன் 58
ஆ எழுத 24
ஆ ஓ இரண் 37
ஆ ஓ என்றிடல் 48
ஆ ஊ ஓ எனும் 30
ஆக்கியோன் 93
ஆ கா 88
ஆகிற 47
ஆகும் 35
ஆசிரியப் 111
ஆசு கவியின் 91
ஆடும் பரி 90
ஆண்டு தோறும் 73
ஆண்பால் 44
ஆண்பால் போலும் 46
ஆண்பெண் 65
ஆய்தத் 27
ஆய்தம் 26
ஆய்தமும் ஒற் 9
ஆய்தமும் - ஓற் - ஙகர 29
ஆய்த மோடு 24
ஆயிரம் 22
ஆலுடை 56
ஆலெனல் 60
ஆவியீராறு 5
ஆ வெனல் 28
ஆழியும் அம் 75
ஆள் அள் 59
ஆறசை 55
ஆறு திங்கள் 74
ஆறு வகை 3
ஆன் அன் ஆள் 49
ஆன் அன் ஓன் 58
இகரஞ் சார்தர 21
இகரத் தீற் 20
இகரம் 24
இகரம் அணித் 28
இகரமும் 46
இகரமும் எகரமும் 89
இகலிய புல 120
இடுகுறி 45
இணைநேர் 3
இணையசை 54
இம் முறை 88
இயங்கு 26
இயல் முதலா 85
இயலிசை நாடக . முத் 41
இயலிசை நாடக...பகு 88
இயலிசையென் 84
இக்கரமும் 108
இரண்டு நாலும் 82
இராகவன் 96
இரு சுழி 9
இரு நிலத்து 5
இருபால் 30
இருவகைச்சந் 86
இருவகைப் பல் 85
இருவகையக 79
இருவகைவண் 87
இல்லெனல் 58
இல்லே இன் 59
இலக்கண 92
இவ்வகை எது 91
இவ்வகைத்தாகும் 108
இவ்வகை நிலங் 70
இவ்வணம் கருவி 76
இவ்வணம் பகர்ந் 105
இவ்விதத் 58
இவை புணர்ந் 23
இவையெனல் 44
இழி நூல் 93
இளமையே 67
இன்பமும் 120

இன்ப வெள் 67
இன்றும் 81
இன்ற பஃறே 102
இன்னுன் 45
இன்னிசை 81
இன நிலை 27
இனிப்பு 48
ஈ ஏ எனும் 30
ஈகாரம் 25
ஈகை 47
ஈரசை 78
ஈரசைச் சீர் 83
ஈரசைச் சொற் 83
ஈரசை மூன் 82
ஈாடி 84
ஈரெட் 64
ஈழரும் 70
ஈற்றில் நேர் 80
ஈற்றிலிடை 87
ஈற்றி லோரசை 83
ஈறறின் 11
ஈற்றுறும் 79
உகரத்துறு 21
உகரம் ஒற் 25
உகரம் ஓர் 28
உகரமும் ஒகர 89
உடலகத்து 76
உடைமையியல்பு 104
உண்டல் 47
உண்மைப் புல 111
உந்தியும் 64
உம்பரூர்க் 96
உம்மெனல் 59
உயர்திணைப் 46
உயிர் ஈராறும் 26
உயிர் என்று 5
உயிர்ப் பொறி 89
உயிர்மெய் ஆதி 27
உயிர்மெய் இகரத் 38
உயிர்மெய் உகரம் 37
உயிர்மெய்த் தகரம் 35
உயிர்மெய்ப் பொறி 89
உயிர்மெய் யெழுத் 16
உயிர்மெய் வருக் 21
உயிரெழுத் 8
உயிரெழுத்தத 89
உரியசொல் 80
உரிய மூன்றசை 80
உருமிடத் 90
உருவும் 6
உரைப் பொருள் 91
உலகமெங் 61
உலகர்தம் 119
உலகினர் 42
உலகெலாம் 108
உலவாப் 77
உவன் உவள் 43
உவமையின் 104
உழியியல்பு 64
உள்ளெனப் 77
உறுப்பியல்பு 64
உன்னிய 120
உன்னெனல் 48
ஊ ஒற்றினத் 25
ஊக்கமும் 109
ஊகாரத்து 7
எகர ஒகர 21
எகரத்து 11
எகரப் பொறி 25
எகரம் முதல்
எட்டுப்பதி
எண் கால்
எண்ணப்படு 115
எண்ணரிய 4
எதிரிடுங் 122
எவ்வகை எழுத் 51

எவ்வகைக் கவி 91
எவ்வகைச்செய 104
எவ்வழி 86
எவ்விதக் கவி 112
எவ்விதச் சொற் 58
எவ்விதச் சுருதி 67
எழுசீர் 83
எழுத்தின் 39
எழுத்துச் 2
எழுத்துரு 41
எழுத்தெனல் 5
எள்ளிடை 113
எறும் பொழுக் 97
என்பு ஊன் 70
என்பு பெண் 117
ஏ ஒற்றிடை 25
ஏ காரம் ஒரு 29
ஏதொரு நிமித் 65
ஏயெனல் 48
ஏன் ஏம் 59
ஏனைய 29
ஐ ஔ இரண் 31
ஐ காரத்தில் 27
ஐ காரம் 29
ஐஞ்சீர் 84
ஐந்தாமிலக் 109
ஐந்தேயிலக் 1
ஐயோ என் 48
ஒகரமும் 8
ஒகரத்துடன் 31
ஒத்தல் 50
ஒரு சொல் 57
ஒரு துறை 68
ஒரு நிலத் 70
ஒரு பெயரற் 94
ஒரு பொருட் பெய 57
ஒரு பொருளுடன் 60
ஒரு பொறிப் 31
ஒருமா 19
ஒரு மொழி 40
ஒருமைப் 44
ஒருவன் சொல் 57
ஒளிநிலை 23
ஒலியியல்பு 6
ஒவ்வோர் பொரு 38
ஒவ்வோர் வண் 87
ஒளிரிழை 78
ஒற்றிற்கு 9
ஒற்றின் சிரன் 8
ஒற்றிணந்தோ 27
ஒற்றினம் 26
ஒற்றினை 39
ஒற்றுத்தொறும் 25
ஒற்றோடுயிர் 23
ஒற்றோடுஐ- 25
ஒன்பதான் 64
ஒன்பது 21
ஒன்றற் 94
ஒன்றன் 46
ஓசையும் 88
ஓந்தி போலும் 99
ஓமெனல் 58
ஓரசை 54
ஓரசை தொட் 90
ஓராயிர 91
ஓரொலி 20
ஓவெனல் 29
ஔ எனும் உயிர் 25
ஔ எனும் எழுத் 15
ஔகாரத்தின் 24
ககரமும் 18
கசட 26
கசதப 31
கட்டளைக் 83
கடலின் மீன் 1
கடலும் 95

| | | | |
|---|---|---|---|
| கண்களால் | 65 | காமக்கடல் | 114 |
| கண்களின் | 65 | காமியம் | 76 |
| கண்டாயோ | 116 | காய்வரு | 83 |
| கணபதி | 110 | கார்மணல் | 96 |
| கணவற் | 63 | காரணங் | 114 |
| கணியுரு | 95 | காரெதிர் | 74 |
| கதிர்மதி உடல் | 77 | காலமழை | 112 |
| கதிர்மதி உடு | 76 | காலவேற் | 114 |
| கதிரவ | 106 | காவிக் கொடி | 102 |
| கமலப்பூ | 101 | காவிய நிலை | 111 |
| கமலமாதி | 107 | கிளி முகம் | 6 |
| கமலையை | 57 | கின்னமென் | 55 |
| கமுகுங் | 97 | கீழ்த்திசை | 105 |
| கரியவார் | 62 | கீழ்நோக்கி | 16 |
| கருதிய தெய் | 122 | கீழ்மூக் | 17 |
| கருநிறக் | 102 | குகரஞ் | 59 |
| கரும்பொடு | 97 | குகரமும் | 29 |
| கருணைக் கடல் | 88 | குகவேளடிமை | 122 |
| கல்லார் | 119 | குடமும் | 97 |
| கலிப்பா | 82 | குயில்தரும் | 74 |
| கலிவிருத் | 83 | குரவன் | 111 |
| கலைமுதல் | 22 | குல[illegible] | 103 |
| கவந்தமும் | 72 | குலவு [illegible] | 122 |
| கவிதையொன் | 123 | குளிர்பொழில் | 91 |
| கவின் திகழ் | 63 | குற்றெழுத் | 52 |
| கழியூண் | 109 | குறள் | 80 |
| கள் அரக்கு | 72 | குறிஞ்சியாதி | 70 |
| களம் வரை | 6 | குறிஞ்சியூர் | 70 |
| களிறே புரை | 85 | குறிப்பியல்பு | 65 |
| கற்பனை | 105 | குறில்தனி | 81 |
| கற்பனைமீ | 105 | குறில்நெடில் | 52 |
| கற்றாணிடத் | 41 | குறிலிற் | 23 |
| கன்னிதன் | 97 | குறுகிய இரட் | 12 |
| கனிச்சீர் | 79 | குறுகிய ஒற் | 16 |
| காகப்புள் | 113 | குறைபடும் | 111 |
| காகமூக் | 97 | கூகூஎனல் | 48 |
| காண்டல் | 67 | கூட்டெழுத் | 20 |
| காப்புறு | 78 | கையொடு | 73 |

| | | | |
|---|---|---|---|
| கொங்குவாழ் | 91 | சீரியிகழ் | 123 |
| கொச்சகச் | 82 | சீருற்ற | 90 |
| கொச்சகத் | 84 | சுட்டுச் | 45 |
| கொடுங்கோல் | 108 | சுட்டெழுத் | 30 |
| கொடுந்தமிழ்ப் | 88 | சுருதியும் | 120 |
| கொண்டதுறை | 114 | சுவைமிக | 108 |
| கொல்லலுூன் | 114 | சுழித்து மேற் | 8 |
| கொல்லா | 41 | சுழியில் | 7 |
| கொலை புலை | 93 | சுழியிலா | 22 |
| கொலை புலையெனு | 122 | சூரனூர் | 118 |
| கொவ்வையில் | 97 | செங்கோல் | 108 |
| கொற்றியும் | 90 | செத்தாருய் | 113 |
| கொன்னுயிர் | 63 | செத்துநாறிய | 123 |
| கொன்றையும் | 100 | செந்தமிழ் | 2 |
| கோஎனும் | 10 | செந்தாமரை | 99 |
| கோங்கரும் | 115 | செந்தூர்த்திரு | 119 |
| கோடிகோடி | 118 | செந்நாப் | 116 |
| ஙகர ஒற் | 32 | செந்நிறச் | 102 |
| ஙகரத்து | 13 | செம்பொரு | 75 |
| ஙஞண | 26 | செம்பொற் | 95 |
| சகரத்து | 12 | செய்கை | 53 |
| சகரமும் | 89 | செய்போ | 48 |
| சந்த நிலை | 86 | செய்யுட் | 51 |
| சவலை | 80 | செய்யும் | 37 |
| சார்பெலா | 56 | செவ்வேற் | 118 |
| சாராதொழி | 113 | செழியன் | 118 |
| சிங்கமென் | 90 | சேயிழை | 63 |
| சிட்டரை | 109 | சேர்வான் | 63 |
| சிந்தையின் | 111 | சேவித் | 115 |
| சிலைத்தலை | 118 | சொல் நிறம் | 112 |
| சிற்சில | 49 | சொல்லி | 47 |
| சிற்றிலிர் | 64 | சொல்லின்சார் | 78 |
| சிறுகவி | 112 | சொல்லின் பொது | 43 |
| சிறுகீரை | 98 | சொல்லீற் | 58 |
| சிறுமாங் | 97 | சொல்லெனல் | 39 |
| சீயம் நூல் | 98 | சொற்கடல் | 92 |
| சீயெனும் | 49 | சொற்சுவை | 112 |
| சீரிய | 113 | சோம்பலும் | 111 |

ஞகர மெய் 32
ஞகர வுயிர் 36
டகரத்து 13
டற ஒற் 32
ணகர உடற் 32
ணகர ஒற் 35
ணமணய 34
ணமனல 35
ணமலஒற் 35
ணவ்வே 17
தகர உ 34
தசாங்கம் 93
தத்தவில் 87
தத்தவும் 86
தத்தவும்தந் 86
தத்தன 87
தத்தா 86
தமிழ்க் கவி 89
தமிழ்க்குந் 119
தமிழ்ச் சுவை 112
தமிழ்ச் சொற் 40
தமிழ்ப் பெயர் 5
தமிழ் மொழிக் 115
தமிழறி 113
தல்லார் 61
தலைவன் 65
தலைவருந் 68
தவ்வா மெய்ப் 114
தவத் தோர் 70
தவமும் 67
தவராசர் 3
தவறிய 90
தளைப் பிழை 81
தளை பிறழ்ந் 81
தன் கடுத் 57
தன் வழக் 120
தன்னவுந்தய் 87
தன்னவும் 86
தன்னுடைக் கேள் 67
தன்னுடைச் 115
தன்னெதிர் 121
தனவும் தான 87
தனவும் 86
தனிச் சீர் 79
தனி வேல் 103
தாய் வயிற் 107
தாய் வயிற்றிருந் 123
தாயைத் 43
தில்லைக் கோயில் 121
தில்லையூர்ப் 118
துட்டப் புல 113
துணிவொடு 71
துதிக்கையும் 98
துய்ப்பார் 68
துலையொடு 75
துழாயொடு 69
துறைத் தொகை 68
துறை பகர் 87
துறையியல்பு 68
தூக்கிய 119
தெய்வக் 108
தெய்வத் துதி 111
தெய்வந் தோன்றி 112
தெய்வ நிலை 28
தெய்வப் பெயரி 27
தெய்வப் புகழும் 114
தெய்வம் அரைய 92
தெய்வமும் 116
தெருளிலக் 61
தென்றலுல 107
தேமா 53
தேமாங்கனி 121
தேற்றந் 110
தேற்ற மென் 110
தேருப் 113
தேனீ 109

| | | | |
|---|---|---|---|
| தொய்வே | 63 | நேர் நாள் | 53 |
| தொழில் நிலை | 119 | நேரிசை | 81 |
| தொள்ளாயிரத் | 117 | நேரிசை வெண் | 82 |
| தோல்வியேற் | 113 | நேரிழை | 62 |
| நகர ஒற் | 32 | நேரென்றுவக் | 82 |
| நடு நிலை | 121 | நேரென | 81 |
| நண்டு தன் | 74 | பகர எழுத் | 14 |
| நல்லாள் | 62 | பகரத் தலை | 15 |
| நவ்வலும் | 109 | பகரத்தீற் | 13 |
| நவின்று | 113 | பகாப்பதம் | 45 |
| நற்பொருள் | 104 | பசும்புல் | 69 |
| நன்றிடை | 120 | பட்ட புரசி | 119 |
| நாடகங் கொச் | 111 | பட்டினத் | 91 |
| நாடகந் | 68 | படுபலா | 117 |
| நால்வகை எழுத் | 22 | பண்ணும் | 97 |
| நால்வகைக் குல | 71 | பதினோராவ | 24 |
| நால்வகைப் பய | 72 | பரமன் | 117 |
| நால்வரும் | 42 | பருவமட | 62 |
| நாவின்றி | 74 | பல்லவத் | 85 |
| நாழி போலும் | 20 | பல்லவம் | 85 |
| நாளென | 80 | பல்லெனும் | 59 |
| நாற்சீர் | 83 | பல்வகை | 103 |
| நிகழ்தரும் | 99 | பலவகை | 115 |
| நிலத்தியல்பு | 70 | பழகிய | 65 |
| நிலையிடந் | 90 | பளிங்கு | 42 |
| நிலவரை | 11 | பற்பலர் | 122 |
| நிறத்தின் | 42 | பன்னுடை | 117 |
| நீற்றறை | 117 | பன்னிரண் | 64 |
| நுவலினும் | 80 | பனுவலின் | 93 |
| நூல்களின் | 93 | பனுவற் | 93 |
| நூல் பிரபந் | 92 | பாசுரத் தியல் | 92 |
| நூலின் துணை | 110 | பாடம் எழு | 112 |
| நூற்பகை | 110 | பாட வறியார் | 120 |
| நூற்பா எண் | 79 | பாணனுந் | 116 |
| நூற்பா | 78 | பாதியில்விற் | 106 |
| நூற் பெயர் | 51 | பாம்புநா | 71 |
| நெடுமாலனை | 96 | பாயிரத் | 93 |
| நெல் முதல் | 75 | பார்த்திபன் | 90 |

பார்வையிற் 65
பால்நுகர் 73
பாலனே 51
பாலுக்குக் 90
பாழியந் 76
பானிலை 84
பிரபந்தத் 111
பிழையா 67
பிறக்கும் 47
பிறமொழி 76
பிறவா 76
பின்னர் 34
புகர்மலிந்து 109
புகலரும் 114
புணரியாதி 122
புலமைக் காள் 85
புலமைத் தொழிலின் 120
புலமையை யிழி 119
புலமையிற் 116
புலமையினுண் 120
புலவோர் 101
புறப்பொருள் இவ் 76
புறப்பொருட் பகு 68
புனல் பனித்து 74
புனையிழை 62
பூவில் மன 61
பெண் கொடி 97
பெண்மைக்கு 67
பெயர்ச்சொல் 46
பேசலும் 65
பேசின் அல் 112
போயொடு 41
பைந்தமிழ் 94
பைந்துழாய் 117
பொது நூற் 115
பொய்யினும் 66
பொய்யே 104
பொருட்குவை 115
பொருந்தக் 99
பொருவருந் 116
பொருள் நயந் 115
பொற்றாமரை 117
பொறியும் 77
பொன்னாலாடை 100
பொன்னிறம் 95
பொன்னொடு 101
பொன்னேங் 1
போயினன் 47
போன செய்த 47
மகர ஒற் 33
மகர ஒற்றதன் 36
மகர ஒற்றுத் 36
மகர ஒற்றொடு 35
மகரத்து 15
மகர மெய்ப் 37
மகிதலம் 50
மங்கலச் 50
மங்கைய 103
மணி நாவொடு 118
மதியுங் 101
மதுரம் 88
மதுரையூர் 117
மயிலினை 96
மருவுரு 105
மலர்தலும் 63
மலைக்கே 105
மலைநதி 103
மலைமகள் 118
மலையிடை 73
மலையென 98
மழலையங் 94
மழையும் 75
மற்றொரு 22
மற்றொரு நல் 66
மற்றோர் புல 115
மற்றை 25